வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஐப்பசி திங்கள் 26-ம் நாள் (11—11—1962) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 12 | இதழ் 24

# தூதராலயத்தில் ரகசிய பேச்சு

## யாருக்கும் வேண்டாத அமைச்சர் பதவி

### "நிதிமந்திரி வேட்டை"யில் திரு. கலுகல்ல சிக்கினர்

திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா மீண்டும் மந்திரி சபையில் சேர்ந்து 24 மணி நேரத்துள் திரு. சி. பி. டி. சில்வா நிதிமந்திரி பதவியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார். அடுத்து நிதிமந்திரி யார் என்ற கேள்வி எழுந்தது.

நிதிமந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு திரு. மைத்ரீபால சேனநாயகா கேட்டுக் கொள்ளப்பட்டாரென்றும் செய்திகள் வெளியாயின. எனவே அடுத்த நிதிமந்திரி யார் என்பதைத் தெரிந்துகொள்வதில் மக்களின் ஆர்வம் மேலும் அதிகரித்தது.

திரு. டி. பி. இலங்கரத்னவும் "அந்தப் பதவி தனக்கு வேண்டாம்" என்று ஒதுக்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. நிதிமந்திரி யார்? மீண்டும் அக்கேள்வி எழுந்தது. கடைசியாக ஒருவாறு அந்தப் பதவிக்கு ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். திரு. கலுகல்ல நிதிமந்திரியாகிவிட்டார். அவர் எத்தனை நாளைக்கோ!

மிகமுக்கியமான பதவியாகக் கருதப்படும் நிதிமந்திரி பதவியை ஏற்றுக்கொள்ள இன்றுயாரும் தன்னிச்சையாக முன் வருவதில்லை. நிர்ப்பந்தத்தின் மீது யார் மீதாவது அதனைச் சுமத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் உணவுப் பற்றுக்குறையும் தான்.

பிரதம மந்திரி மந்திரி சபையில் தமது முக்கிய சகாக்களைக் கலந்தாலோசிக்காமல் திரு. பீலிக்ஸை மீண்டும் மந்திரி சபையில்

(9-ம் பக்கம் பார்க்க)

## கொம்யூனிஸ்டு பிரமுகர்-சீன அதிகாரிகள் சம்பாஷணை

### இந்திய கொம்யூனிஸ்டு கட்சி அனுப்பிய அந்தரங்க அறிக்கை

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி ஓர் அந்தரங்க அறிக்கை யொன்று இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிக்கு அனுப்பியிருப்பதாக அறியப் படுகிறது. இது பற்றி இலங்கைக் கொம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. என். சண்முகதாசனுக்கும், இலங்கையிலுள்ள சீனத் தூதராலய அதிகாரிகளுக்குமிடையே இரகசிய மகாநாடொன்று நடைபெற்றதாக நம்பகமான வட்டாரத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது. இந்த அந்தரங்க மகாநாட்டிலே இந்தியா மீது சீனு நடத்தும் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி அனுஷ்டிக்க வேண்டிய கொள்கை சம்பந்தமாகவும விவாதம் நடைபெற்றதாம். இந்த அந்தரங்க சம்பாஷணை 6-11-62- செவ்வாய்க்கிழமை காலை 11-30 மணிக்கு சீனத் தூதராலயத்தில் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

இந்திய—சீன யுத்தம் தொடங்கி இரு வாரங்களுக்குப் பிறகு—சீனக் கொம்யூனிஸ்டுகள் இந்திய மண்ணில் சுமார் 20 மைல் வரை ஆக்கிரமித்துக்கொண்ட பிறகு- இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சி ஆக்கிரமிப்பை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இக்கட்சியினுள் சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் ஒரு கோஷ்டியும் இருக்கிறதாம். அந்தக் கோஷ்டியினர் இவ்வாரம் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது ஒரு தந்திரோபாயம் என்பது இப்பொழுது அம்பலமாகியுள்ளது. அந்தரங்கத்தில் இக்கட்சி சீனவை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது.

#### இரு ஆபத்துகள்

சீன ஆக்கிரமிப்பை இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்காவிட்டால் இரு பெரும் ஆபத்தில் கட்சி சிக்கிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஒன்று இந்திய மக்களின் வெறுப்புக்கும், கண்டனத்துக்கும், தாக்குதலுக்கும் பலியாக வேண்டியதேற்படும். மற்றொன்று, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொம்யூனிஸ்டுகள் சிறையிலடைக்கப்பட்டு, கட்சி கலைத்துவிடப்படும்.

இந்த இரு ஆபத்திலிருந்தும் கொம்யூனிஸ்ட் கட்சியைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் உபாயத்தைக் கட்சி கையாண்டுள்ளது.

இதனால் மக்களையும், இந்திய அரசாங்கத்தையும் ஒரே சமயத்தில் ஏமாற்ற முடிகிறது. ஆயினும் இந்திய மக்கள் இந்தியக் கொம்யூ

(9-ம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற ஆசிரியர்கள் வேதனை தீர கல்வி அமைச்சைத் தூண்டுவேன்!

### செயலாளருக்கு தமிழரசுத் தந்தை வாக்குறுதி

ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை முடித்துக் கொண்டு பணி புரிய வாய்ப்புக் கிடைக்காது வேதனையுறும் ஆசிரியர்களுக்கு வெகுவிரைவில் நியமனங்கள் கிடைத்து விடக்கூடிய வகையில் கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப் போவதாகத் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், அவரைப் பேட்டி கண்ட ஆசிரியர்களிடம் குறிப்பிட்டார். மட்டக்களப்பு பயிற்றப்பட்ட வேலையற்ற தமிழ் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. வி. த. குமாரசாமி இத்தகவலை சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை, எத்தனையோ துன்பங்களைத் தாண்டி முடித்துவிட்டு பலவருடங்கள் துன்பப்படும் ஆசிரியர்களுக்கு, வடகிழக்கில் எத்தனையோ காலிஸ்தானங்களிருந்தும்கூட நியமனம் கொடுபடுவதாயில்லை. 1960ம் ஆண்டுவரை பயிற்றப்பட்டு வெளியேறிய ஆசிரியர்களுள் பெண் ஆசிரியைகளனைவருக்கும் நியமனங்கள் கிடைத்துவிட்டன. மட்டக்களப்பு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரிய சங்கம் தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் மூலம் கல்வி இலாகாவைத் தூண்டியதனுலேயே இந்நியமனங்கள் கொடுக்கப்பட்டன என்று தெரிகிறது.

வேலையற்ற ஆசிரியர்கள் சங்கத்தினர் 17-10-62ல் தமிழரசுத் தந்தையைப் பேட்டி கண்டபோது, ஆசிரியர்களுக்கான நியமனங்களைத் துரிதப்படுத்தும்படி கல்வி அமைச்சைத்தான் தூண்டப் போவதாக திரு. செல்வநாயகம் கூறினர். மீண்டும் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள், கடந்த 11-1-62ல் தமிழரசுத் தந்தையுடனும், மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரையுடனும், மட்டக்களப்பு வாடி வீட்டில் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர்.

அண்மையில் கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளை நியமனங்கள் சம்பந்தமாக திரு. செல்வநாயகம் பேட்டி கண்டபோது, வடக்கிலுள்ள காலி இடங்களை வடபகுதியிலுள்ள ஆசிரிய கலாசாலைகளினின்றும், வெளியேறியவர்களுக்குக் கொடுப்பதெனவும், கிழக்கிலுள்ள ஆசிரிய கலாசாலைகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு கிழக்கு மாகாணத்திலேயே இடங்கள் கொடுப்பதெனவும்; வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உண்டாகும் காலி ஸ்தானங்களுக்கும் வழங்குவதெனவும் அதிகாரிகள் வாக்களித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இம்முறைப்படியே தற்போது நியமனங்கள் நடை

(9-ம் பக்கம் பார்க்க)

**சுதந்திரன்**

**சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இதழ்**

18-11-62 இதழ் 'சுதந்திரன்' சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இதழாக வெளிவருகிறது. தலைவர்களின் கட்டுரைகள், விசேட புகைப்படங்கள், சித்திரங்கள், கவிதைகள் இதழில் இடம் பெறுகின்றன.

20 பக்கங்கள் விலையில் மாற்றமில்லை.

**பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963**

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5) (இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பின்னல் பேர்ஸ் டயறி (Business) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்கப் டயறி (கலிகோ பைண்ட்) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி (2-50 பெறுமதியான வலற் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender) (பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |

குறிப்பு : விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினல் பார்சலில் அனுப்பப்படும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
161, செட்டியார் தெரு, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி விசாரணைக் குழு சிபார்சு

# முஸ்லிம்களுக்கு பெரும் தீங்கு பயக்கும்

# மொழித்திரையினுள்ளே மூடு மந்திரங்கள்

## ஏகோபித்து எதிர்க்கவேண்டும்

**கல்வி விசாரணைக் குழுவினர் இலங்கை வாழ் முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளை சிங்களமய [illegible]க்கிவிடத் தீர்மானித்துள்ளதை அனைவரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும். இது முஸ்லிம்களுக்கு விளைக்கப்படும் பெரும் அநீதி. மொழித்திரை யினுள்ளே மூடுமந்திரங்கள் மலிந்துள்ளன. உரிமைகள் பறிபோகும் இதே வேளையில், ஏதோ சில சலுகைகளுக்காக, ஆபத்து எதுவுமேயில்லை என்று பலர் உண்மையை மறைத்துக் கூற முனைந்துள்ளனர். வெள்ளம் வருமுன்னர் அணை கட்டுவோம்.**

இனவாரியாக அமைந்துள்ள ஆசிரிய கலாசாலைகள் மொழி வாரியாக அமைந்துவிட வேண்டும், என்பதே கல்வி விசாரணைக் குழுவின் சிபார்சு. இச் சிபார்சு சமூகப் பெயரைமட்டும் எடுத்துவிடுவதற்குச் செய்யப்பட்டதொன்றல்ல. மொ[illegible]வாரி திரையுள்ளே மூடு மந்திரங்கள் பல மறைந்திருக்கின்றன. இந்த உண்மையை முஸ்லிம்கள், முஸ்லிம் சமூகத்தி[illegible] அக்கறையுள்ளவர் உணர[illegible]மலில்லை. அச் சிபார்சுக்கு எ[illegible]ர்ப்புத் தெரிவிப்பதோடு, [illegible]பார்சை அங்கீகரிப்பதாயின் முஸ்லிம்களுக்கு மிகப் பாதகமாக அமையும் என்பதை அரசாங்கத்திற்கு பத்திரிகை வாயிலாகவும், தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் தெரிவித்து, வெள்ளம் வருமுன்னே அணை கட்ட முயற்சிக்க வேண்டும்.

கடலின் மேற்பரப்பின் அமைதி கண்டு அடி மட்டமும் அவ்வாறே என்று நியாயங்கள் கூறுபவர்கள் ஆபத்து ஒன்றுமில்லை என்கின்றனர். இது மனச்சாட்சியைப் பலாத்காரமாக மூடி மறைத்து எதையோ மறுக்கவேண்டுமென்பதற்காகப் பிரயத்தனம் செய்திருப்பதை அவர்கள் கருத்தே தெளிவாக்கி வைக்கிறது. அவற்றை அலசுவதற்கு முன் மொழி வாரி அமைப்பு முறை எப்படி அமையும் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். இலங்கையரின் மொழி இரண்டு. ஒன்று சிங்களம்; மற்றது தமிழ். இவ்விரு மொழிகளிலும் போதிக்கும் ஆ. ப. கலாசாலைகள் இருபத்தைந்து இருக்கின்றன. இவற்றுள் சிங்களத்தில் பதினைந்தும் தமிழுக்கு ஆறும் முஸ்லிம்களுக்கு நான்கும் என வகுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாசிரிய கலாசாலைகள் மொழிவாரியாகப் பிரிக்கப்படும் பட்சத்

### ஏ. சி. எம். இபுருகிம்

தில் முஸ்லிம் கலாசாலை நான்கும் சிங்களத்தை போதனா மொழியாக ஏற்கவேண்டும் அல்லது தமிழைப் போதனா மொழியாக ஏற்கவேண்டும். சிங்களத்தைப்போதனாமொழியாகக் கொண்டு தமிழை இரண்டாம் மொழியாகக் கொள்ளலாம் என்பது தானும் கல்விக் கமிஷன் சிபார்சு. இச் சிபார்சு உண்மையாயின் சிங்களம் முஸ்லிம் மக்கட்குத் திணிக்கப்பட்டிருக்கிறது.

போதனா மொழி முஸ்லிம்களுக்குத் தமிழே தான் என்று அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்க மகாநாட்டில் கல்வி மந்திரி ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அதே கல்வி மந்திரி முஸ்லிம் மக்களின் தாய் மொழி தமிழ் மொழி அல்ல அரபுத் தமிழ் என்று விளக்கிப் பேசிய கூட்டங்களும் பல இருக்கின்றனவே. பத்திரிகைகளில் படித்துமிருக்கின்றோம். ஆகவே கல்வி மந்திரி சொல்வதெல்லாம் வேதவாக்கு என்று நாம் கொள்ள முடியாது. மேலும் சிங்களம் போதனா மொழியாக்கப்படும் போது சிங்களத்தில் பயிற்சி பெற விரும்பும் எவரும் பயிற்சி பெறலாம். அப்படியேற்படும்போது பெரும்பான்மையாக சிங்களவர்களும் சிறுபான்மை முஸ்லிம் தமிழர்களும் பயிற்சி பெற வேண்டிய நிலை ஏற்படும். இதன்றி தமிழ் போதனா மொழியாக்கப்பட்டாலும் பயிற்சிக்குரியவர்கள் முஸ்லிம்களாக மட்டும் இருக்க மாட்டார்கள்; தமிழர்களும் அங்கீகரிக்கப்படுவர். மொழிவாரி அடிப்படையில் அமையும் போது கலாசாலை முஸ்லிம்களுக்காக மட்டும் என்றிருப்பது பொருந்தாது என்பது நியாயவாதத்திற்கு ஒப்புக்கொள்ளக் கூடியது.

அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆரம்பம், மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பழக்க வழக்கங்களில் சில கலாசாலைப் பண்பாடுகளும் ஒத்துவராமையால் தமிழர்கள் மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்டு, முஸ்லிம்களுக்காக மட்டும் அட்டாளச்சேனை ஆக்கப்பட்டது. இப்படி ஆக்கப்பட்டமையால் தான் முஸ்லிம்கள் தமது தனித்தன்மையோடு, கலாச்சாரப் பண்பாட்டை ஒட்டிய போதனை பெறமுடிந்தது. அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் தான் முஸ்லிம் பாடசாலைகளில் இதே அடிப்படையை வைத்துப் படிப்பிக்கவும் முடிந்தது. மொழிவாரி அமைப்பு அங்கீகரிக்கப்படுமாயின் முஸ்லிம் பாடசாலைகளும், சிங்களம் அல்லது தமிழ்ப் பாடசாலையாக மாறும். அப்படி மாறுமாயின் ஒரு வேளை இன்றுள்ளது போல மத பாடம் கட்டாயப்பாடமாயில்லாமல் இஷ்ட பாடமாகக் கூடமாறலாம். இலங்கை முஸ்லிம்களுக்கு அரபு அவசியமில்லை என்று வேறொரு குழு சிபார்சு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியேற்படுமாயின் தனித்துவம் பறிபோகாது வேறென்ன செய்யும்?

இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இந்தப் பாடசாலைகள் இருப்பதை நாம் காண்கிறோம். அரசாங்கமுஸ்லிம் தமிழ்ப்பாடசாலைகளும் அரசாங்கத்தமிழ்ப் பாடசாலைகளும் இருக்கின்றன. அரசாங்கமுஸ்லிம்பாடசாலைகள் முஸ்லிம் சமூகத்தினருக்கு மட்டும் சரியானவை. இவற்றில் இஸ்லாம் கட்டாயப் பாடமாகவும், அரபி கலாச்சார மொழியாகவும் இருப்

(13-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### சிங்களப் பத்திரிகை வேண்டும்

சென்ற 21-10-62 சுதந்திரனில் வெளிவந்த மக்கள் குரல் பகுதியில் தமிழரசுக் கட்சிக்கு சிங்களப் பத்திரிகை வேண்டும் என்ற தலையங்கத்தை நான் வரவேற்கின்றேன். சிங்கள மக்கள் பலர் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளுக்குப் பலமாக எதிர்ப்புக் காட்டிவரும் இந் நேரத்தில், தமிழரசுக் கட்சியின் பொறுப்பில் சிங்களப் பத்திரிகை ஒன்று உருவாவது அவசியம்.

மூதூர் முதல் பாராளுமன்ற உறுப்பினரின் பிரேரணைக்கு ஒப்பவும் திரு. வில்மட் ஏ. பெரேரா அவர்கள் தமிழ்த் தலைவர்கட்கு விடுத்த வேண்டுகோளுக் கொப்பவும் இந்த தமிழரசுக் கட்சியின் சிங்களப் பத்திரிகை அமையுமென்று நாம் நம்புகின்றோம். இதனால் ஒரு போதும் கட்சியின் உயர்வுக்கு பங்கமேற்படாது. அத்தோடு தமிழரசுக் கட்சி சிங்கள மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

திருவர்.

### தந்தையே வருக!

தமிழரசின் நற்கொள்கைகளையும், நற்பணிகளையும் அறிந்த மலைநாட்டு மக்கள் அதை ஆதரிக்கின்றனர். இதுவரை தூங்கிக் கிடந்த மக்கள் இப்போது விழித்துக் கொண்டனர். இனிமேலும் அரசாங்கமோ, அல்லது கட்சித் தலைவர்களோ மக்களை மடையராக்கலாம் என எண்ணுவது மடமைத்தனம்

தந்தையே! எமது பகுதியிலும் உமது கட்சி வளம் பெற, எமது வாலிபர் குழு முழு உதவியையும் அளிக்கும் என்பது என்றென்றும் உறுதி. அத்துடன் அமோக வெற்றிக்கும் இடமுண்டு.

கலையரசன்குழு

இங்கோயா தோட்டம்,
கித்துல்கல

### இறுதிவரை எதிர்ப்போம்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் சிங்களம் திணிப்பதை இறுதி மூச்சுள்ள வரை எதிர்ப்போம்.

இந்த அரசாங்கம் சிங்களத்தை எமது பாடசாலைகளில் திணிப்பதாக இருந்தால் அது பகற் கனவாகவே முடியும் என்பதைப்பகிரங்கமாகக் கூற விரும்புகிறேன். ஆட்சியாளருக்குக் கூறுவது என்னவென்றால் சிங்கள மொழி எப்படி உங்களுக்குப் பெரிதோ அதே போன்று நமக்கு நமது தாய் மொழியாகிய தமிழ்மொழி பெரியது.

எமது மொழிக்குத் தீங்கு ஏற்பட்டால், எமது மொழிக்கு இன்னல்கள் கொடுத்தால், சிங்களத்தை எம்மேல் திணிக்க முற்பட்டால், இறுதி மூச்சுள்ளவரை எதிர்த்தே தீருவோம்.

நாம் வீர பரம்பரையில் வாழ்ந்து வந்தவர்கள், தியாகம் நமக்குப் புதியதல்ல. எனவே எமது மொழியுரிமைக்காக இரவு பகலாக உழைத்து வரும் எமது தந்தை செல்வா அவர்கள் நடத்தப்போகும் போராட்டத்திற்கு மாணவர்களாகிய எமது முழு ஆதரவும் கிடைக்கும்என்பதைத் தெரியப் படுத்த விரும்புகிறேன்.

எம். பாலகுமார்.

ஸ்கந்தவரோதைய கல்லூரி,
கந்தரோடை.

# "உன்னாசை கொண்டழகா—இந்த உலக மெல்லாம் பேரானேன்"

—மண்டூர் ந. டே. குணரத்தினம்—

தன்னைத் தனிமையில் தன் வீட்டுப் பின்புறத் திண்ணையில் வந்து சந்திக்கும்படி கூறியிருந்தாள் காதலி கண்மணி. காதலன் கணபதியும் அந்த அரிய தருணத்தைத் தவற விடுவானா என்ன?

எப்போ பொழுது மறையும், தன் காதலியைச் சந்திக்க எனக் காத்திருந்தான். நேரமும் மாலையாகி விட்டது. விரைந்தான் காதலியின் வீடு நோக்கி. படலையை மெள்ளத் திறந்தான். பதுங்கிப் பதுங்கி அவளின் வீட்டின் பின்புறத் திண்ணை

## கிராமிய இலக்கியம்

யை அடைந்தான். காதலியின் வரவு நோக்கிக் காத்திருந்தான். என்ன காரணமோ தெரியாது, அவள் வரவில்லை.

காத்திருந்து கண்ணும் பூத்துப்போய் விட்டது. இரவோ நடுச்சாமம் கவலையுடன் வீட்டையடைந்தான். அவனுக்கு அன்று உறக்கமே வரவில்லை. சில நாட்கள் சென்றுவிட்டன. அன்று ஒரு நாள், தன் காதலியைத் தனிமையில் சந்தித்தான். தன் காதலி தன்னை ஏமாற்றி விட்டாளே என்னும் ஆத்திரம் மீறுகிறது. [illegible] பிறக்கிறது. பாடுகிறான்.

"உன்னையே நம்பியிருந்தேன்
—அடி சண்டாளப் பாவி
ஒட்டுத் திண்ணை நான்
படுத்தேன்
உறக்கம் வருகுதாடி
இரக்கமற்ற சண்டாளி"

அவளும் தன் காதலனுக்குப் பதில் கொடுக்கிறாள் பாடலிலேயே. அவர்களின் காதலை உலகமறிந்துவிட்டதையும், தன் காதலின் தன்மையையும் விளக்குகிறாள், பாடும் பாடல் மூலம்.

"உன் ஆசை கொண்டழகா—
இந்த
உலகமெல்லாம் பேரானேன்
சன்னியாசி வேடங் கொண்டு
—இப்போ
தவிக்கிறேனே உன்னாலே"

காதலியின் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த காதலன் மீண்டும் பாடுகிறான்.

"ஆசையடி உன்மேலே
ஆதரவு மார்மேலே
பாசம் குறையுமாடி—என்
பச்சைக் கிளி மேலே"

பாடல் முடியும் தறுவாயில் யாரோ வரும் காலடியோசை கேட்கிறது. பிரிய முடியா மனதுடனே பிரிந்து செல்கின்றனர் இருவரும்.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**புரட்சிப்பித்தன், நிந்தவூர்.**

கே: காதலில் ஏற்பட்ட தோல்வியால் கண் பொத்தி வாழ்ந்த என்னை வேருெரு பெண் காதலிக்கிருள். நான் என்ன செய்ய?

ப: பொய் சொல்லுகிறீர். கண் பொத்தியிருந்தால் காதலிப்பது மட்டும் எப்படித் தெரிந்தது?

ஃ

**பொ. தெய்வேந்திரன், சுண்ணுகம்.**

கே: கடவுள் தந்த அறிவைக் கொண்டு நாஸ்திகம் பேசுவோரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: கடவுள் அறிவைத் தரவில்லையென்றல்லவா அவர்கள் கூறுகிருர்கள்!

ஃ

**வை. கணபதிப்பிள்ளை, ஹற்றன்.**

கே: "காதலாவது கத்தரிக்காயாவது" என்கிருர்களே, காதலுக்கும் கத்தரிக்காய்க்கும் சம்பந்தம் எவ்வாறு உண்டானது என உரைத்திடுங்கள்?

ப: தான் விரும்பாதவற்றைக் கத்தரிக்காயுடன் ஒப்பிடுவது சிலரின் வழக்கம். காதலையும் விரும்பாவிட்டால் அதுவும் கத்தரிக்காயாகி விடுகிறது.

ஃ

**க. முருகதாசன், தெல்லிப்பளை.**

கே: இந்தியாவில் இருக்கும் பொதுவுடமைக் கட்சியின் கொள்கைக்கும் இலங்கையில் இருக்கும் பொதுவுடமைக் கட்சியின் கொள்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

ப: சீன ஆக்கிரமிப்பை இந்திய பொதுவுடமைக் கட்சி எதிர்க்கிறது. இலங்கைப் பொதுவுடமைக் கட்சி ஆதரிக்கிறது.

ஃ

**சு. நாகராசா, கம்பளை.**

கே: நான் ஒரு பருவக் கருங்காளை மாடு வளர்த்து வருகிறேன். ஒரு வேலையும் செய்யாது தின் தின்பதால் மதமிஞ்சி குளு மாடு போல் நிற்கிறது. கட்டிய இடத்தில் நின்று தன் காலால் இடறிக் குழி பறித்துக் கொள்கிறது. இதனல் ஏதும் விபரீதமுண்டா குயுக்தியாரே?

ப: மாடு குழிபறிப்பதோடு நில்லாமல் அதில் உங்களையும் தள்ளி விட்டால் தான் விபரீதம் ஏற்படும்!

ஃ

**ஜெகநாதன் சதாசிவம், இங்ஸ்லேன்ட்.**

கே: பிள்ளை பிடிப்பதாக இப்போது ஒரு வதந்தி பரவியிருக்கிறதே! இது உண்மையா? தங்களின் கருத்து யாது? இதை விளங்கக் கூறுங்கள்.

ப: எல்லாம் வெறும் வதந்தியென்று வதந்தி அடிபடுகிறது. பிள்ளை பிடிப்பவர்களெனப் பிச்சைக்காரர்கள் பிடிக்கப்படுகிருர்கள். தாடி வைத்துக்கொண்டிருந்தவர்கள் "க்ளீன் சேவ்" செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

ஃ

**இ. சிவனடியார், அளவெட்டி.**

கே: குயுக்தியாரே, வாழ்க்கையின் நோக்கம் என்ன?

ப: சிவனடியாரது வாழ்க்கையின் நோக்கத்தைக் கேட்கிறீரா?

ஃ

**ஜோதிலிங்கம், மட்டுநகர்.**

கே: நான் தமிழன், என்னை ஒரு சிங்களப் பெண் காதலிக்கிருள். இந்தக் காதல் நிறைவேறுமா குயுக்தியாரே?

ப: சாதி, மத, இனபேதங்களைப் பார்ப்பதற்குத்தான் காதலுக்குக் கண் இல்லையே!

ஃ

**இஸ்மாயில், மூதூர்-3.**

கே: மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது, தான் எதையும் சாதிக்கும் வல்லமையுண்டு என்கிருர். ஆனல் முதல் பிரதிநிதி முகம்மதலி இறைவன் உதவியினுல் இயன்றவரை உழைப்பேன் என்கிருர். இப்படிக் கூறக்காரணமென்ன?

ப: முன்னையது கரடப்பா—பின்னையது நிறைகுடம்.

ஃ

**எல். அரிரெட்ணம், அம்பாறை.**

கே: உமது நண்பன் யார்?

ப: பிறர்பெயரால் கேள்வி கேட்காத ஒவ்வொருவரும் எனது நண்பரே!

ஃ

**கே. பி. கருணசாந்த, திருகோணமலை.**

கே: இந்தியாவுக்கும் சீனுவுக்கும் நடக்கும் யுத்தத்தில் இலங்கை யாருக்கு உதவி செய்யும்?

ப: உஸ்...அது பற்றி மூச்சு விட வேண்டாம். அது நமது பெண் பிரதமரின் சிதம்பர இரகசியம்!

ஃ

**"அவசரகாலப் பிரியன்" ஏழாலை மேற்கு.**

கே: அண்மையில் இந்தியாவில் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகாலப் பிரகடனத்திற்கும், இலங்கையில் கடந்த 2 வருடங்களாக வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் அவசர காலப் பிரகடனத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அது நாட்டுக்கு ஆபத்து வந்துள்ள வேளையில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச் சட்டம். இது பதவிக்குச் சதா ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள அவசர காலச் சட்டம்.

ஃ

**குணம், மாதகல்.**

கே: மினி வண்டியில் செல்லும் இளங்குமரர்களுக்கு இளம் குமரிகள் தடியால் அடிப்பது ஏன்?

ப: தடியடி வாங்க...

ஃ

**க. பாலசந்திரன், சாவகச்சேரி.**

கே: மிஸ்டர் குயுக்தியாரே, உங்களிடம் இதுவரை கேட்காத கேள்வி எது?

ப: நீங்கள் கேட்டுள்ள இக் கேள்விதான்.

ஃ

**திவோளி ஏஜன்ட், நுவரேலியா.**

கே: நான் இலங்கை தமிழரசுக் கட்சி இயங்கும் அங்கத்துவ விண்ணப்ப பாரம் ஒன்றை நிரப்பி தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புவதற்கு வைத்திருந்தேன். அந்தப் பத்திரத்தின் மகிமை தெரியாத ஒருவர் அதை எடுத்து 6 துண்டாகக் கிழித்து எறிந்துவிட்டார். நான் என்ன செய்வேன்?

ப: நீங்கள் அரசியலுக்குத் தகுதியற்றவர் என்பதை உங்களின் கவனயீனமே எடுத்துக் காட்டுகிறதே!

ஃ

**அ. அமரேந்திரன், பருத்தித்துறை.**

கே: "கியூபா மீது கை வைக்காதே!" என்னும் ஆர்ப்பாட்டம் போல் "இந்தியா மீது கைவைக்காதே" என்னும் ஆர்ப்பாட்டம் ஏன் நடைபெறவில்லை?

ப: நடைபெற்றதே! சர்வகலாசாலை மாணவர்கள் தான் ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்களே! "கியூபா" ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் தாக்கினர். "இந்திய" ஆர்ப்பாட்டத்தை இடது சாரிகள் தாக்கினர்.

கே: மயிலே மயிலே என்றல் இறகு போடாது. அன்பு அகிம்சை என்றல் அரசாங்கம் அசையாது. ஆகவே.........

ப: ஆகவே அரசாங்கத்துக்குப் பந்தம் பிடித்துக் காரியத்தைச் சாதிக்கலாம் என்கிறீரா?

கே: சென்ற வருடம் தொடங்கப்பட்ட தமிழின்பம், அமுதம், வெண் தாமரை ஆகிய பத்திரிகைகள் இப்போ எங்களூர்ப் பத்திரிகைக் கடையில் இல்லையே?

ப: "சோடா புட்டி ஆர்வம்" எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்கும்?

ஃ

**எம். ஏஸ். எம். முவாரக், கிண்ணியா.**

கே: நான் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதிக்குப் போட்டியிடப் போவதில்லை, எஸ். ஏ. ஹமீட் அவர்கட்கு இடம் கொடுக்கப் போகிறேன், என்று மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது கூறித் திரிகின்றரே, இதன் அர்த்தமென்ன?

ப: அத்திவாரம் ஆட்டங் கண்டுவிட்டது என்பதுதான் அர்த்தம். வாக்காளர்களை ஒரு தடவைக்கு மேல் ஏமாற்ற முடியாது என்பது அவருக்கும் தெரிந்து விட்டது.

ஃ

**டி. நடராஜா, மாவத்தகம.**

கே: ஐயா! பிரஜா உரிமை பெறத் தகுதியுடையவர்கள் மனுப்பண்ணினலும் அதை அரசாங்கம் நிரா்கரிப்பதேன்?

ப: தகுதி மட்டும் போதாது—காக்காய் பிடிக்கவும் தெரிய வேண்டும்.

ஃ

**ஏ. ஆர். ஏ. ரகீம், குச்சவெளி.**

கே: மாமா! இரண்டு வருடங்களாக தலை மயிர் உதிர்கிறது. என்ன செய்வது?

ப: தலையிலே ஒரு குல்லாய் மாட்டிக் கொள்ளுங்கள். விஷயம் இரண்டாம் பேருக்குத் தெரியாமலிருக்கும்.

ஃ

**க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.**

கே: இலங்கைப் பிரதமருக்கும் சீனப் பிரதமருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இவர் பெண்...அவர் ஆண்.

# சந்தி வி(வ)காரம்

திணை : குற்றவியல் துறை : காவல்துறை

—பா. சத்தியசீலன்—

குண்டாந் தடிகள் குதிவரைப் பொலிந்த
திண்டோள் வீரர் திடுக்கிடு தோற்றம்
கண்டனன் பெரும; கண்டெவன் செய்கோ?
"மண்டிய இருளில் மணி,விளக் கில்லை;
சண்டியன் பிடி"யெனச் சார்ந்தனர் இவனை.

வண்டியென் றரோ வழுத்தினர் இதனை!
பண்டெவர் இதனைப் பயன்படுத் தினரோ!
கொண்டபேர் விரைவு குறைத்திடு கருவி
உண்டென அன்றே உரியதை இறுகப்
பிடித்தனன் பெரும! பிடித்தெவன் பயனே?
முடித்தனே கதையை? முரணுடை வண்டி,

வண்டெனப் பறந்து, வலனுடை காவலர்
அண்டையில் என்னை அடிபட விழுத்தி,
சந்தியிற் புகுந்து சனங்களை இடறி
சுந்தரி ஒருத்தி சுரிகுழற் பறித்து
வந்ததோர் காளை வலக்கரம் வழங்கி
தந்தி மரமாய்த் தகைபெற நின்ற
அந்திக் காவல்—அவர்களை இடித்துப்
பிந்தியுந் தனது பெருஞ்சிலைச் சுழற்ற

அடித்தனர் இவனை; அதை எது செயுமோ
துடித்தனன் பெரும; துடித்தென பயனே!
ஐயிரண் டுக்கு அவிழ் மிதிவண்டி
செய்வினை அனைத்தும் செவிப்பட உணர்ந்த
காவி மேவிய அவரின்,
கோவே என்கைக் கொடுவிலங் கெடுமோ!




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739

**அடுத்த இதழ்:- இந்தியாவை ஆதரித்து: விசேட கட்டுரைகள், புகைப்படங்கள், அதிக பக்கங்கள்.....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## துரோகியாகிய துரோகி

50 வயதுக்குப் பின்னரும் சிங்களத்தைப்படித்து, பரீட்சையெழுதி சித்தியடைந்து பெருமையுடன் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க ஆவலுற்று, அந்த ஆவலினுலேயே பரிதாபகரமாக அடித்தளத்தில் தள்ளப்பட்ட ஒரு 'பிரமுகரின்' திருப்புராணம் இவ்வாரம் சந்திக்கு வருகிறது. ஆட்சி மொழியில் மோகம் கொண்டு பதவியை ஸ்திரப்படுத்தப் படாத பாடுபட்டுழைக்கும் 'பெருமான்'களுக்கு இந்தச் செயல் ஒரு நல்ல பாடமாக அமையுமென்று கருதுகிறேம்.

கொழும்புத் துறைமுக அதிகார சபையில் நிர்வாக அதிகாரியாகக் கடமைபார்த்த திரு. ஏ. எல். பெனடிக்ட் என்பவர் அரசாங்கத்துக்கு தீவட்டி பிடித்து தனது விசுவாசத்தைப் பல வழிகளாலும் காட்டிக் கொண்டிருந்தவர். தனது வயதையும் மறந்து தன் திரிகரண சுத்தியை வெளிக்காட்ட ஓடோடிச் சிங்களம் படித்தார். பரீட்சை எழுதினர். சித்தியடைந்து பதவியில் 'நிலைத்தும்' விட்டார்!

ஒய்வு பெறும் வயதைத் தாண்டி மேல் பதவியில் இருக்கும் இத் தமிழருக்கு உலைவைக்க, அப்பகுதியில் வேலை செய்த தீவிர சிங்கள வாதிகள் முயற்சிஎடுத்தனர். சிங்களம் சித்தியடைந்ததனுல் அவரைப்பதவியிலிருந்து துரத்துவது கடினமாக விருந்ததுபோலும்.

### கொம்யூனிஸ்டுகள் கும்மாளம்

சங்கானையில் நடைபெற்ற காந்தி விழாவில் குழப்பம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு, அப் பகுதியில் உள்ள சில பத்தாம் பசலிக் கொம்யூனிஸ்ட் தோழர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பற்றி அம்மானுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது பற்றி அடுத்த வாரம் அம்மான் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்.

உடனே அவரைப்பற்றிய விஷமப் பிரசாரத்தை அவிழ்த்து விட்டனர். மந்திரிமாருக்கு மகஜர்கள் பறந்தன.

சதா தமிழரசுக் கட்சிக்கு வசைபுராணம் பாடிக்கொண்டிருக்கும் திரு. பெனடிக்ட், தூய தமிழரசுவாதி யென்றும், சிங்களச் சட்டத்தின் துரோகியென்றும் வர்ணித்தனர். படித்ததும் வீணுகி, குடிகெடுத்ததும் வீணுகித்திணறிய திரு. பெனடிக்ட் தன் இனத்துக்குச் செய்த துரோகத்தை எண்ணிக்கொண்டு பதவியை விட்டோடி விட்டார் எனக் கூறப்படுகிறது.

திரு. பெனடிக்டுடன் கடமையாற்றிய சில சிங்களவர்கள் மந்திரிமாருக்கும், அதிகாரிகளுக்கும் எழுதிய மகஜரின் தமிழாக்கம் கீழே உள்ளது:-

### எதிர்ப்பு மகஜர்

கொழும்புத் துறைமுக அதிகார சபையில் ஒரு பிரிவில் ஏறத்தாழ 3000 ஊழியர்கள் இருக்கிறுர்கள். அப்பிரிவின் நிர்வாகம் நிர்வாக செயலாளரான ஏ. எல். பெனடிக்ற் என்ற தீவிர தமிழரசு வாதியும், கத்தோலிக்கருமானவருடைய கைகளிலேயே தங்கியுள்ளது. அவர் தமது 55-வது வயதையும் தாண்டிவிட்டார். அவரால் சிங்களத்தில் வேலை பார்க்க முடியாது. அத்துடன் அவர் சிங்களத்தின் விரோதி.

1-1-61 முதல் உத்தியோக மொழியை அமுலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், கப்பற்போக்குவரத்துப் பிரிவில் ஸ்தாபன வேலையில் ஈடுபட்டிருந்த தமிழ் எழுதுவினைஞர் கணக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டு, அவர்களிடத்தில் சிங்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இது திரு. பெனடிக்றின் இரகசிய தமிழரசு வேலைக்கு ஒரு பலத்த அடியாகிறது. அவர் மீண்டும், தமிழ் எழுதுவினைஞர்களின் வேலையைச் சிங்கள எழுது வினைஞர் சரிவரச் செய்ய மாட்டார்கள் என்றும், சிங்களவர்கள் மடையர்களென்றும் சாட்டுச் சொல்லி, உத்தியோக மாற்றத்தை வாபஸ் பெற முயற்சி செய்தார்.

55 வயதானதும் கட்டாயமாக ஓய்வு பெறவேண்டுமென்ற தீர்மானத்தின் போது, இந்த உத்தியோகத்தர் அரசாங்கத்தைப் பகிரங்கமாகத் தாக்கிப் பேசி வந்தார். ஆனுலும் அவருக்கு சேவையில் ஒரு வருடம் நீடிக்கப்பட்டது. ஆனுல், திறைச்சேரி சுற்று நிருபம் இல. 555ன் படி, இரண்டாம் தடவையும் 5-10-62 முதல் இவ்வுத்தியோகத்தரின் சேவை நீடிக்கப்படுமானுல், அவர் சிங்களத்தில் வேலை பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும். ஆகவே, உத்தியோக மொழிக் கொள்கையில் மாற்றம் வருமென்று அவர் காத்திருந்தார். உத்தியோக நேரங்களிலேயே சிங்களம் படிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்த போதும் அவர் அவ்வசதிகளை உபயோகப்படுத்தவில்லை.

சிங்களத்தில் வேலை செய்யக்கூடிய சிங்கள உத்தியோகத்தர்கள் இருந்த போதிலும், அவ்வேலைகளை அவர்கள் சிங்களத்தில் செய்வதை அவர் தடுக்கிறுர்.

இதற்கிடையில் 5-1-62ல் வேலைநிறுத்தம் ஏற்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தின் மூலம் அரசாங்கத்தை வீழ்த்தலாம் என்றுஎண்ணிய இவ்வுத்தியோகத்தர், அவ்வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற முயற்சி செய்தார். அவர் ஒவ்வொரு உத்தியோகத்தரையும் தம்மிடம் அழைத்து, வேலைக்கு வராமல் இருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

30-12-61தொடக்கம் வேலைக்கு வராமல் இருந்துவிட்டார். வேலைநிறுத்தம் தோல்வி அடையவே 13-1-62ல் வேலைக்குத் திரும்பினர். அச்சமயத்தில், விளக்கங்கள் கேட்கப்பட்டு, சம்பளங்களும் மற்ற உத்தியோகத்தர்களைப் பொறுத்தமட்டில் வெட்டப்பட்டபோதும், இந்த உத்தியோகத்தரைப் [illegible] மில்லை. இவர் தான் 2-1-62 தொடக்கம் வரை தென்னிந்தியாவில் இருந்ததாகக் கூறி, மேல் உத்தியோகத்தர்களைக் கிண்டல் செய்ததுடன், தமது பிரயாணத்துக்கு இலவச ரயில்வே சீட்டுக்களையே தாம் உபயோகித்ததாகவும் கூறினுர். அவர் அச்சீட்டுக்களின் அடியிதழ்களை ஒரு குமாஸ்தா வைக்கொண்டு நிரப்புவித்தார்.

அவருடைய வழுக்கமான கேள்வி, தாங்கள் சிங்களத்தை எங்கள் தொண்டைக்குள் திணிக்கப்பார்க்கிறீர்களா? என்பதே. வேலை நிறுத்தத்துக்குப் பிறகு அவர் இட்ட முதற் கட்டளை இது தான்:ஒவ்வோரு உத்தியோகத்தரும் 9 மணிக்கு முதல் காரியாலயத்தில் பிரசன்னமாக வேண்டும். ஒரு நிமிடம் பிந்தினுலும், அவர் ஒரு பௌத்த, சிங்கள உத்தியோகத்தரானுல், அவரைத் தம் அறைக்குக் கூப்பிட்டு ஏசுவார் இவ்வுத்தியோகத்தர். ஆனுல், இவருடைய கிறிஸ்தவ சிஷ்யர்கள் எந்நேரமும் வரலாம்.

### புகையிரத நிலையப் பெயர்ப்பலகை

சாவகச்சேரி புகையிரத நிலையத்திலுள்ள நிலைய அதிபரின் பெயர்ப்பலகை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும்தான் இருக்கிறதைச் சில வாரங்களுக்கு முன்னர் அம்மான் சுட்டிக் காட்டியிருந்தார். அதையிட்டு சாவகச்சேரி புகையிரத நிலைய அதிபர் திரு. ரூபஸ் குணவர்தன ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

"பெயர்ப்பலகைகள் யாவும் அரசாங்கத்தால் செய்து விநியோகிக்கப் படுகின்றன. நானுகப் பெயர்ப்பலகை செய்யும் நிலையேற்பட்டால் தமிழையும் சேர்த்துக் கொள்ளுவதில் நான் முழுக் கவனமும் எடுத்திருப்பேன்.

"இந்தப் பகுதியில் வாழும் தமிழ் பேசும் சகோதரர்கள் மத்தியில், அவர்களுக்காகச் சேவை புரிவதில் நான் பெருமையடைகிறேன். சேவையே எனக்குப் பெருமை அளிக்கும்:" என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மூதூரில் மலிந்து வரும் 'விஷப் பிரசாரம்

"மூதூர் தொகுதியிலுள்ள கிண்ணியா மக்களை முட்டாள்களெனக் கருதிக் கொண்டுள்ள சிலர் சில பொய்களையும்புரட்டுக்களையும்பரப்பிவிடமுயற்சித்து வருகின்றனர். தாம் ஒட்டிக்கொண்டுள்ள பதவி பறிபோகாது காத்துவிடலாம் என்று மனப்பால் குடிக்க முனையும் இவர்களிடம் எச்சரிக்கையாகஇருக்க வேண்டும்' என்று அம்மானுக்கு பல வேண்டுகோள்களை மூதூர் மக்கள் விடுத்துள்ளனர். அவர்கள் பல ஆணித்தரமான உண்மைகளை அம்பலப்படுத்துகின்றனர்.

மூதூர் இரண்டாவது பிரதிநிதியான ஜனுப் மஜீது அவர்களும் அவரைச் சார்ந்த வேறு சிலரும்சேர்ந்து கொண்டு மூதூர் தொகுதியில் விரிக்கும் சூழ்ச்சிவலை பற்றிய சில தகவல்களை அடுத்த வாரம் தருகிறேம்.

### முஸ்லிம்கள் இடத்தில் புத்தர் சிலை

அனுராதபுரம் புனித நகரமாகப் பிரகடனம் செய்யப்பட்டதும், எல்லைக்குள்ளிருந்த இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ தேவஸ்தலங்கள் யாவும் அகற்றப்பட்டமை பற்றி முன்னர் சந்தியில் குறிப்பிட்டிருந்தோம். தேர்தல் காலத்துக் கண்

(9-ம் பக்கம் பார்க்க)

திறமையுடன் தயாரிக்கப்படுவதும்!
நம்பிக்கையுடன் வாங்கப்படுவதும்!!
திருப்தியுடன் உபயோகிக்கப்படுவதும்!!!

சிறந்த ரக
ஜப்பானிய
"ஒனுடா" போட்லண்ட் சிமெந்தே
(பிரிட்டிஷ் நிர்ணயத் திட்டத்திற்குச் சமதையானது)

விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னேர்ஸ் ரேட் தெற்கு,
கொழும்பு-10.

## கவிதைப் பூங்கா

# போர் தொடுப்போம்!

''யாழரசன்''

பூக்காடாய்ச் செந்தமிழே பொலியும் நாட்டில்
புதுமையற்ற சிங்களத்தைப் புகுத்து கின்றுர்!
பாக்காடாய்த் திகழ்கின்ற தமிழை விற்றுப்
பரதேசிக் கூட்டமென வாழ்தல் நன்றே?
வேக்காடே பரிசாகக் கிடைத்திட் டாலும்
தாவிவரும் சிங்களத்தைத் தடுத்து நிற்போம்!
சாக்காடாய்த் தீக்காடாய்ச் சாம்பல் மேடாய்த்
தமிழ்நாட்டைப் பொசுக்கிடினும் பணிய மாட்டோம்!

சிங்களவர் சேனையின்மேல் சீறிப் பாய்ந்து
செருக்களத்தில் எல்லாளன் செத்த தேனே?
சங்கிலியன் பறங்கியரைத் தடுத்துத் தாக்கித்
தன்னுயிரைத் தூக்கினிலே சாய்த்த தேனே?
பொங்குதமிழ்த் தாய்நாட்டுக் காக வன்றே
போர்முனையில் புலிகளெனப் பொருதி நின்றுர்!
துங்கமுயர் மானத்தைக் காக்க வன்றே
துச்சமென மரணத்தைத் தழுவிக் கொண்டார்!

சிந்துவெளி நாகரிகச் சிறப்பின் தொன்மை,
சேரமன்னன் ஆரியரை வென்ற வன்மை,
குந்திமைந்தர் இராமகதை போன்ற தல்ல!
கூறுமெங்கள் வரலாறு! ஆனுல் இன்றே
குந்தவொரு நிலமில்லை! கொற்றம் இல்லை!
கொத்தடிமைக் கொடுஞ்சிறையில் வீழ்ந்து விட்டோம்!
இந்தநிலை வளருவதோ? இல்லை, இன்றே
இப்பொழுதே இக்கணமே போர் தொடுப்போம்!

செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த சேய்கள், அன்னுள்
செத்தொழியப் பார்த்திருக்கும் நாய்கள் அல்ல!
இந்தஉடல் முதுமையினுல் நோயால் திண்மை
இழந்தொருநாள் சுடலையிலே எரிதல் உண்மை!
அந்தவிதச் சாவினிலே ஏது நன்மை?
அன்னையினைக் காவாமை அன்றே பெண்மை!
நந்தமிழ்த்தாய் அடிமைவிலங் கறுப்ப தற்கு
அறப்போரில் குதித்திடுவோம், அதுவே ஆண்மை!

வெருட்டுக்கும் மிரட்டுக்கும் பயமே இல்லை!
வெட்டுண்டு வீழ்ந்தாலும் கவலை இல்லை!
பருகட்டும் இன்னுயிரைப் பலியாக் கட்டும்!
பாயட்டும் பசுங்குருதி பரந்தோ டட்டும்!
பெருகட்டும் பிணக்குவியல் மலையா கட்டும்
பிளக்கட்டும் தடமார்பைக் கலங்க மாட்டோம்!
உரிமைப்போர்! விடுதலைப்போர்! சுதந்திரப் போர்!
உயிர்த்துடிப்பு ஓயுமட்டும் தொடுத்தே நிற்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசோதாவை முறியடிக்க மலையக மக்கள் அணி திரள வேண்டும்

## கட்சி வழி காட்டினால் வெற்றி நிச்சயம்

"மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு மற்றொரு பேரிடி" என்ற தலைப்பின் கீழ் சென்ற வாரம் சுதந்திரனில் பிரசுரிக்கப் பட்டிருந்த செய்தி மலையக மக்களாகிய எம்மை எதிர் நோக்கி யுள்ள பயங்கரமான ஓர் அபாயத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது

தேசியப் பதிவு இடாப்பு மசோதா சட்டமானல் "நாடற்றவர்கள்" என நாமம் சூட்டப்பட்டுள்ள மலைநாட்டுத் தமிழர்களின் நிலைமை மிகவும் மோசமாகி விடுமென்பதில் ஐயமில்லை. மலை நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள தமிழ ரசுக் கட்சிதான் இந்த மசோதாவை முழு மூச்சுடன் எதிர்த்து முறியடிக்க முன்வரவேண்டும். இல்லையேல் மலை நாட்டு மக்கள் படுகுழியில் தள்ளப்பட்டு விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. மலையகத் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தக் கூடிய சக்தி தமிழ ரசுக் கட்சிக்கு மட்டுமே உண்டு.

இம்மசோதா தயாரிக்கப் பட்டதே நேர்மையான எண்ணத்துடனன்று.

நாடற்றவர்கள் பிரச்சினை பற்றி இந்தியாவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும் போதே இந்த மசோதாவையும் சட்டமாக்க அரசாங்கம் முயற்சி செய்தது—செய்கிறது. இதிலிருந்து அந்தரங்க சுத்தியுடன் இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த வில்லை என்பது தெளிவு.

பேச்சு வார்த்தைகள் நடந்தாலும் சரி, நடக்கா விட்டாலும் சரி, பேச்சு வார்த்தைகள் வெற்றிபெற் ருலும்சரி, பெருவிட்டாலும் சரி, "நாடற்றவர்களை", இலங்கையரல்லாதாராக்கி விடுவதென்று அரசாங்கம் கங்கணம் கட்டிக் கொண்டி ருக்கிறது. அதுவே இந்த மசோதாவின் நோக்கம்.

இம் மசோதாவில் இரு பதிவு இடாப்புகள் இருக்கு மாம். ஒன்று பிரஜைகளுக் குரியது. மற்றது பிரஜை களல்லாதாருக்குரியது.

நாடற்றவர்கள் எனக் கூறப்படும் சுமார் 10 லட் சம் மலைநாட்டுத் தமிழ் மக் களின் பெயர்கள் பிரஜை களுக்குரிய இடாப்பில் நிச்ச யம் பதிவு செய்யப்பட மாட்டா.

அவர்கள் அனைவரும் பிர ஜைகளல்லாதார் இடாப் பில்தான் பதியப்படுவர். அரசாங்கத்தின் தேவையும் அதுதான். அதற்காகத் தானே இந்தச் சட்டமே கொண்டு வரப்படுகிறது. ஆனல்—

"நாடற்றவர்"களெனக் கூறப்படும் தமிழ் மக்கள் தங்களை இலங்கையரல்லாதாரெனப் பதிவு செய்து கொள்வார்களா?

**எஸ். ஆர். குமாரவேல்**
**நுரலை**

அப்படிச் செய்ய மறுத்தால் நிலைமை என்னவாகும்?

### வேலை பறிபோகும்

இடாப்பில் பதிவு செய்ய மறுத்தால் பெருந்தொகை அபராதம் விதிக்கப்படுமாம். அத்தோடு பதிவு செய்யப் படாதவர்களுக்குத் தோட் டங்களில் வேலை கொடுக்கக் கூடாதாம்.

அபராதம் செலுத்தி, வேலையும் இழந்து நின்று திண்டாடவேண்டும். இல்லை யேல் தாங்கள் பிரஜைக ளல்ல எனக் கூறிப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இத்தகைய ஒரு சங்கட இடுக்கிலே மலைநாட்டுத் தமிழ் மக்களைச் சிக்க வைக் கவே இக்கொடிய சட்டம் வருகிறது.

(13-ம் பக்கம் பார்க்க)




## வியர்வையைக் குருதியாய்க் கொட்டி ஈழத்தை வளமாக்கியவர் இன்று 'நாடற்றவர்'!

## இவர்களின் எதிர்காலம் என்ன?

ஈழத்திரு நாட்டை அன்னியன் ஆண்ட நேரத்தில், கொள்ளை அடிக்க-வர்த்தகத்தை விருத்தி செய்ய ஆசைப்பட்டான். எனவே தான் எண்ணிறைந்த தேயிலை, கோப்பி, கொக்கோ வாத் தோட்டங்களை நிர்மாணிக்க அவா கொண்டான்.

மலையகத்தின் காடுகளில் புகுந்து பாடுபட ஈழநாட்டுச் சிங்கள மக்கள் மறுத்து விட்டார்கள். கொடிய வன விலங்குகளுக்குப் பலியாகவும், கடும் உடல் உழைப்பைத்தரவும் அவர்கள் விரும்பவில்லை. என்ன நடந்தாலும் மலைநாட்டில் தேயிலை பயிரிடத் திட்டமிட்ட வெள்ளையன் இந்தியாவிலிருந்து தமிழர்களைப் பெருவாரியாகக் கூலிகளென்ற பெயரில் இறக்குமதி செய்தான்.

வியர்வை வெள்ளமாக ஓடியது. செங்குருதிகொட்டி உழைப்பை நல்கினர்கள். மலைநாட்டுக்காடுகள் மலர்ந்தன. தேயிலை, ரப்பர், கொக்கோவாத் தோட்டங்களாக, தமிழர்களின் இரத்தத்தால் பொருளாதாரம் கொழுத்தது. ஈழ நாடு தென் கிழக்காசியாவின் ஜோதியாகியது.

1947ல் இந்தியாவில் சுதந்திர சூரியன் உதயமானன். இதன் எதிரொலி ஈழத்திரு நாட்டில் கத்தியின்றி, இரத்தமின்றி விடுதலை அடைந்ததுதான். வெள்ளையன் வெளியேறினன். சுதேசிகள் ஆட்சிபீடத்தில் அமர்ந்தனர். ஆட்சிபீடத்தில் ஏறியதும் அளவற்ற திமிர்பிடித்தது. மலையகத்து மக்களுக்கு

**கரவைக் கிஷோர்**
**(நுவரேலியா)**

வாக்குரிமை மறுக்கப்பட்டது. கள்ளத்தோணிகள் என்று நாடற்றவர்களாக நடைப்பிணமாக்கப்பட்டனர்.

இந்த நிலையில் மோதிலால் பெற்றெடுத்த பெருரத்தினம், ஆசியாவின் ஜோதி, மனிதகுல மாணிக்கம், பாரதத்தின் பிரதமர் ஆவன செய்வார்; அவருக்கு 'ஜே' போடுங்கள் என்று தொழிற் தலைவர்கள் புத்திமதி கூறினர்கள். அந்த மனிதகுல மாணிக்கம் 'சிம்பில்' விடயத்தில் ஈடுபட விரும்பவில்லை. நாம் இலங்கையர் என்பதை மறந்து இன்னமும் அவருக்காகக் காங்கிரசுகள் காத்திருக்கின்றன. வித்தை மனிதர்கள்தான் என்ருலும் உலகின் கண்மண் தூவுவதற்காக ஒருநாள் வேலை நிறுத்தத்தை நிகழ்த்திக் காட்டிப்பதவியைக்காப் பாற்றிவிட்டனர். பதவியும் பவிசும் பல்லாயிரக்கணக் கானவரின் வாழ்வைக் குலைக்கிறதே.

### கல்வி

தோட்டப் பாடசாலைகளின் கல்வி நிலை பரிதாபத்திற்குரியது. பாடசாலையில் போதிய மாணவர்களுண்டு. ஆசிரியர் கிடையாது. மருந்துக்கு ஒருவர். அவர் வீட்டுத் தோட்டத்தைவிருத்தி செய்வாரே தவிர, மூளைவளர்ச்சியில் அக்கறைகாட்ட மாட்டார். தேயிலைக்காட்டானுக்கு படிப்பில்லாவிடில் என்ன கெட்டு விடும் என்று கருதி கூலிப்பட்டாளத்தைப் பெருக்குவார்.

தொழிற் தலைவர்களோ கல்வி விடயத்தை மறந்தே

(13-ம் பக்கம் பார்க்க)

<u>நாடக விமர்சனம்:</u>

### புகழ் தந்த பொன் நாடு

மடுவக் கொல்லையைச் சேர்ந்த மாவுசா தோட்ட மேல் கணக்கு பாரதி மன்ற அங்கத்தினரின் "புகழ் தந்த பொன் நாடு" என்ற சிறந்த சரித்திர நாடகம், ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கண்டு களிப்புற, யோகிராஜ் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி அவர்களின் தலைமையில், மாவுசா பாடசாலை மண்டபத்தில், நடித்துக் காண்பிக் கப்பட்டது.

நாடகத்தை மாவுசா தோட்டத் தலைமை ஆசிரியர் திரு. பொன். இராசையா சிறந்த முறையில் தயாரித்துள்ளார். வீரம், சோகம், காதல், வாள் சண்டை முதலியன ஒருங்கே அமையத் தக்கதாகத் தயாரித்து வெற்றி மாலை சூடியுள்ளார்.

முதல் தயாரிப்பிலேயே, தோட்டங்களில் நாடகக் கலை சாகவில்லை, அழிந்து போகவில்லை என்பதையும் தரமான நடிகர்கள் இருக்கிருர்கள் என்பதையும் வேலுச்சாமி, வீரப்பன், அழகர்சாமி, சத்திவேல் போன்ற நடிகர்கள் நிருபித்துக் காட்டினர்கள்.

பெண் வேடம் தாங்கி நடித்த குப்பமுத்து, கிருஷ்ணன் வேஷமும் நடிப்பும் மிகவும் பிரமாதம். நகைச் சுவை நடிகர்கள் சுப்பிரமணியமும் சு. அழகும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து சபாஷ் பெற்ருர்கள்.

தங்கவேல், சு. அழகு, பிச்சை, சாமிநாதன், தங்கள் பாத்திரங்களைக் கச்சிதமாக நடித்தார்கள். த. ஆறுமுகம், சின்னையா, பெரியண்ணன் ஆகியோரின் மேற் பார்வையில் ஒளிப்பதிவு மிகப் பிரமாதம், அழகுவின் ஆர்மோனிய வாசிப்பும் கன கச்சிதமாக இருந்தது. உப நடிகர்களின் நடிப்பும் பிரமாதம்.

## மானம் காத்து வாழுவோம்!

—சக்தி—

தமிழராக வாழுவோம்
    தகையுடனே வாழுவோம்
தமிழரென்ற பெருமையோடு
    தலை நிமிர்ந்து வாழுவோம்.

அடிமை என்றே தமிழினம்
    அலட்சியப் படுவதோ?
அடிமை என்றே நம்மவர்
    அவதியுட் படுவதோ?

தஞ்சம் என்று அன்னியர்
    தாள் பணிந்து வாழ்வதோ?
பஞ்சையாகித் தலை கவிழ்ந்து
    பாழடைந்து வீழ்வதோ?

உரிமை இல்லாச் சாதியோ?
    உணர்வு இல்லாச் சாதியோ?
உரிமை இல்லா வாழ்வை வெல்ல
    உறுதி இல்லாச் சாதியோ?

அஞ்சி, அஞ்சி வாழ்வதோ?
    அறிவிழந்து வீழ்வதோ?
நெஞ்சில் வீர ஆண்மை கெட்டு
    நிலை இழந்து தாழ்வதோ?

பத்து லட்சம் தமிழர்கள்
    படைத்த தென்ன என்கிருர்!
பத்து லட்சம் உழைப்பவர்
    பண்பு இல்லார் என்கிருர்!

ஏழைகள் இக் கூலிகள்
    எமதடிமைக் காலிகள்
கோழைகள் இவர்களுக்கேன்
    குடியுரிமை என்கிருர்!

இன வெறியர் சூழ்ச்சியால்
    எமது தாய்த் தமிழினம்
மன மயங்கிச் சிங்களத்து
    மாய இன மாவதோ?

மானம் காத்து வாழுவோம்
    மகிழ்ச்சி பொங்க வாழுவோம்
ஈனம் கொன்று தமிழர் என்ற
    இதயத்தோடு வாழுவோம்.

உறவு கொண்டு வாழுவோம்
    உரிமை கொண்டு வாழுவோம்
உறவு, உரிமை, நமது என்ற
    உறுதியோடு வாழுவோம்.

பிறப்புரிமைச் சுதந்திரப்
    பிச்சை கேட்டு வாழ்வதோ!
இறப்பினுக்கு அஞ்சி மானம்
    இழந்து இங்கே வீழ்வதோ!

நமது சொந்த நாட்டிலே
    நமக்குரிமை இல்லையோ!
நமது நாடு எனும் உணர்ச்சி!
    நம்மினத்துக் கில்லையோ!

சொந்த நாட்டில் அடிமையென்ற
    சோதனைக்குள் வாழ்வதோ?
இந்த நாடும் எமதே; ஆனல்
    ஏங்கி, ஏங்கி வீழ்வதோ?

மானத்தோடு வாழத் தமிழ்
    மனிதராக வாழுவோம்.
மானத்தோடு வாழத் தமிழ்
    [illegible]

# தமிழ்
**G. C. E.**
**101 வினு விடை**

**பரீட்சை துணை நூல்கள்**
**கடந்தகால**
**வினு விடைகள்**

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்ததல்ல. வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தரவல்லன.

| | ரூ.ச. |
| --- | --- |
| தமிழ்ப் பாஷை | 3-00 |
| எண் கணிதம் | 3-00 |
| குடியியல் | 3-00 |
| சரித்திரம் | 3-00 |
| பூமிசாத்திரம் | 3-00 |
| சுகாதாரம் | 3-00 |
| ஆங்கிலம் | 3-00 |
| பயிற்சிச் சிங்களம் | 3-00 |
| ரோமன் கத்தோலிக்கம் | 3-00 |
| இந்து சமயம் | 3-00 |
| இஸ்லாம் சமயம் | 3-00 |

வி. பி. பி: கிடையாது.
தபாற் செலவு 35 சதம்

விபரங்கட்கு:
**அற்லஸ் ஹோல்**
723, மருதானை ரோட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைநீலாவணைக்கு கிடைக்கும் குழாய்நீர் வசதி

## நிதி நெருக்கடியிலும் நிறைவேறும் திட்டம்

### இராசமாணிக்கத்தின் முயற்சி பலனளிக்கிறது

பட்டிருப்புத் தொகுதியில் மிக முக்கிய கிராமமாக விளங்கும் துறைநிலாவணைக்கு குடி நீர் வசதி குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படுவதற்கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுவிட்டன. இக் கிராமத்தோடு நற்பிட்டிமுனை, சேனைக்குடி ஆகிய கிராமங்களுக்கும் குழாய் நீர் பெறுவதற்கான திட்டம் நடைமுறைக்கு வருகிறது. பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக எடுத்த தீவிர முயற்சி இப்பொழுதுதான் பலனளித்துள்ளது. நிதிநெருக்கடி மிகுந்த இவ்வேளையில் சுமார் மூன்றரை லட்ச ரூபாய் செலவில் இத் திட்டம் நடைமுறைக்கு வருவதையிட்டு இப்பகுதி மக்கள் பெருமைப்படாமலிருக்க முடியாது.

பட்டிருப்பு, கல்முனைத் தொகுதிகளுக்குள் இன்று அடங்கியிருக்கும் துறைநீலாவணை, நற்பிட்டி, சேனைக்குடி ஆகிய கிராமங்களில் வசிக்கும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் வருடத்தில் பல மாதங்கள் பெரிதும் துன்ப



பட்டிருப்பு எம். பி.
திரு. சி. மூ. இராசமாணிக்கம்.

மனுபவித்து வருபவர்கள். இக்கிராமங்களுள் துறைநீலாவணை ஒருஒதுங்கு புறமாக விருப்பதன் காரணமாக குடிதண்ணீர் தேடி பெரும்பாலான பெண்கள் தினசரி பல மைல்கள் நடந்து, வேறு கிராமங்களுக்குச் சென்று நேரத்தை விரயம் பண்ண வேண்டியேற்பட்டு வந்தது. சுத்தமான நீராகாரம் கிடைக்காத காரணத்தினால், கிராமத்தின் பல துறைகளிலும் சீர்குலைவுகள் இருந்து வந்தன. குறிப்பாக மேற்படி கிராமங்களின் முன்னேற்றம் தடைப்பட்டு வந்தது.

1953ல் இம் மூன்று கிராமங்களும் பட்டிருப்புத் தொகுதியினுள்ளிருக்கும் போது, அத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் பாராளுமன்றத்தில் குடிதண்ணீர் விநியோக வசதி கோரிய போது ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1956ம் ஆண்டில் இத் திட்டம் அமுலாகும் வேளையில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. பொதுத் தேர்தலின் பின்னர் திட்டம் அமுலாவது தடைப்பட்டது.

1960ல் பாராளுமன்றத்திலும்; உள்ளூராட்சி மன்றங்களிலும் திரு. சி. மூ. இராசமாணிக்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின்பேரில் இத் திட்டம் மீண்டும் கையேற்கப்பட்டுவிட்டது. உள்ளூராட்சி இலாகா, தண்ணீர் விநியோகத் திட்டத்திற்கான கேள்விப் பத்திரங்களைக் கோரியுள்ளது இன்னும் சில மாதங்களில் வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுவிடுமெனத் தெரிகிறது.

துறைநீலாவணையைத் தவிர்ந்த மற்றும் நற்பிட்டி முனை, சேனைக்குடி ஆகிய கிராமங்கள் தற்போது கல்முனைத்தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன. துறைநீலாவணையுடன் சேர்த்து சேனைக்குடியும், நற்பிட்டிமுனையும் இத் திட்டத்தின் கீழ் குழாய் நீர் பெற வசதியும் வாய்ப்பும்கிடைக்கிறது.



சமாதானத் தூதுவராக மேற்கத்தைய நாடுகளுக்குச் சென்றிருந்த ராஜாஜி அவர்களுக்கு லண்டன் தமிழ்ச் சங்கத்தினர் ஓர் வரவேற்பளித்தனர். தேசிய உடையிலுள்ள ராஜாஜி வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுவதையும், மகாத்மா காந்தி மண்டபத்தில் கூடியிருந்த மக்களையும் படம் காட்டுகிறது.

## பட்டிருப்புக்கு மின்சாரம் வழங்கல்

மண்முனை தென் கிழக்கு எருவில் கிராமச் சங்க எல்லைக்குட்பட்ட கிராமங்களான குருக்கள் மடம், செட்டிப்பாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சி மடம், கோட்டைக் கல்லாறு, பட்டிருப்பு, குருமண்வெளி, மகிழூர், மகிழூர் முனை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் யாவும் முடிவடைந்து விட்டதாகத் தெரிகிறது.

பட்டிருப்பு பிரதிநிதியும், ம. தெ. கி. எ. கிராமச்சங்கத் தலைவருமான திரு. சி. மூ இராசமாணிக்கம் அவர்களின் விடாமுயற்சியினால் இத் திட்டம் நடப்பு வருடத்தில் அமுலுக்கு வருகிறது. களுதாவளை, களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, எருவில் ஆகிய நான்கு கிராமங்களுக்கும் மின்சார விநியோகிக்க ஏற்பாடுகள் யாவும் முடிவுற்றுள்ளன. இதற்கான செலவுத் தொகை ரூபாய் 80 ஆயிரத்தையும் அரசாங்கம் மேற்படி கிராமச் சங்கத்துக்கு மானியமாக வழங்கி உள்ளது.

இத்திட்டத்திற்கு ஒருலட்சத்து அறுபத்திரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மூன்று வருடகாலங்களில் இத் தொகையை அரசாங்கம் வாக்களித்திருந்தது. இரண்டு வருடங்களிலேயே முழுத் தொகையையும் அளித்து திட்டம் முழுவதையும் பூர்த்தி செய்துவிடவேண்டுமென்று பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், ம. தெ. கி. எ. கிராமச் சங்கத்தலைவருமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

கமத் தொழில் வளர்ச்சிக்கும், கைத் தொழில்கள், குடிசைக் கைத் தொழில்கள் வளர்ச்சிக்கும் இப்பகுதி மக்களுக்கு இம் மின்சார விநியோகத் திட்டம் அமுலுக்கு வந்ததும் நல்ல வாய்ப்புகளை வழங்கும்.

மேற்கூறப்பட்ட நான்கு கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான கேள்விப் பத்திர அறிவித்தல்கள் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிப்பாளையம், கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், மகிழூர், மகிழூர்முனை ஆகிய கிராமங்களுக்கு அடுத்த நிதி வருடத்தில் மின்சாரம் விநியோகிக்கப்படும்.

மட்டக்களப்பு தென்பகுதியில் இதுவரை மின்சாரம் பெற்றுள்ள கிராமச் சங்கங்கள் அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்லடி உப்போடை ஆகியவையாகும்.

## தமிழரசுக் கட்சியும் தீண்டாமையும்

கடந்த சில ஆண்டுகளாக சிறுபான்மைத் தமிழரின் ஏக ஸ்தாபனம் என்று சிலரால் கருதப்படும் ஒரு ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தில்

**க. நடராசா**
(தென் மராட்சி மக்கள் முன்னேற்ற மன்றச் செயலாளர்)

செய்து வரும் பிரசாரத்தை நோக்கும் போது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையில் அக்கறையுள்ள எவரும் வருந்தாமலிருக்க முடியாது. சமீபத்தில் ஒரு தினசரியில் "300 சிறுபான்மைத் தமிழர்கள், தீண்டாமை ஒழிவதற் பொருட்டும், வேலையில்லா பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டும் பௌத்த மதத்தைத் தழுவி இருக்கிறார்கள்" என்ற செய்தி கேட்டு சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள பலர் வருந்துகின்றனர்.

தீண்டாமை தமிழர்களுக்கிருக்கும் ஒரு சாபக்கேடு என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். கடந்த சில ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி செய்து வந்த சில காரியங்களாலும் நல்லெண்ணமுள்ள சில பெரியார்களின் ஒத்துழைப்பாலும் ஓரளவு தீண்டாமை பிரச்சினை குறைந்து வந்திருக்கிறது. அண்மையில் எம் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பின்வருமாறு:—

1- சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் திறந்து விடப்பட்டன.

2- யாழ் நகரிலுள்ள தேநீர்ச் சாலைகள், உணவு விடுதிகள், யாவும் திறந்து விடப்பட்டன.

3- செனட் சபைக்கு, சிறுபான்மைத் தமிழர்களின் குறைகளை எடுத்துக் கூறுவதற்கும், அவர்களுக்கு உதவி செய்வதற்குமாக அவர்களின் பிரதிநிதி திரு. ஜி. நல்லையா செனட்டராக நியமிக்கப்பட்டார்.

4- யாழ் நகர சபைக்கு உதவி மேயராக திரு. என். ரி. செல்வத்துரை அவர்கள் நியமிக்கப்பட்டார்.

5- கிராமம் கிராமமாக தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் நடைபெற்றது. இன்னும் இதற்கான பொறுப்பு வாய்ந்த சபை இயங்குகின்றது.

மேற் கூறிய ஐந்து பெரிய காரியங்களோடு வேறு பல வகையிலும் சிறுபான்மைத் தமிழர்களாகிய எமக்கு உதவி செய்த கட்சி தமிழரசுக் கட்சியேயாகும். இதை நாம் எளிதில் மறந்து விடக்கூடாது.

தீர்க்கப்படாமலிருக்கும் எமது பிரச்சினையை தீவிரமாகச் செயலிலிறங்கித் தீர்க்கும்படி நாம் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப்பெற்ற தமிழரசுக் கட்சியின் தலைவர்களை வற்புறுத்தலாம். அவர்களின் உதவியோடு நாம் இப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கலாம். இதை விட்டு இப் பிரச்சினையை மேலும் மோசமாக்கக் கூடிய வகையிலே நாம் சென்றால் 5 வருடத்தில் தீர்க்கக்கூடிய இப் பிரச்சினை 50 வருடங்களுக்காவது பின் செல்லும். தீண்டாமைப் பிரச்சினையைக் கருவியாக்கி அப்பாவிச் சிறுபான்மைத் தமிழர்களைத் தமது வலையில் வீழ்த்தப் பார்க்கும் ஒரு கட்சியினர் இதை உணர வேண்டும்.

சமீபத்தில் தமிழரசுக் கட்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'சாதி ஒழிப்புக் குழு' தீவிரமாக வேலை செய்வதற்கு நாமும் உதவியாயிருக்க வேண்டும்.

(13-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி—அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன் போன் : 3411

அடுத்த வாரம்:- சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இதழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகித்திய மண்டலத்தில் தமிழ் ஒழிப்பு

**இலக்கியம்:**

## கூற்றமோ? கண்ணே? பிணையோ?

— தேனீ —

அவள் எனது காதலி. நான் விரும்பும் பெண். தமிழ்க் குலத்துதித்த தளிர்க் கரத்தினள். என் இதயத்தைக் கவர்ந்து விட்ட இன்பக் கன்னி.

ஆனால், அவளை அறியத்தான் என்னால் முடியவேயில்லை!

அவள் எத்தன்மை வாய்ந்தவள்?

அவளுடைய குணங்கள் எனக்கு விளங்காத புதிராக இருக்கின்றனவே!

என்து அன்புக்குப் பாத்திரமான அணங்கு அவள். அப்படியிருந்தும் சில சமயம் அவள் என்னைத் துன்பப் படுத்துவதும் ஏனோ?

அவள் எனக்குச் சில சமயங்களில், என் உயிர் கவரும் கூற்றாகவே தென்படுகிறாள்.

ஆனால், வேறு நேரங்களில், அவள் கருவிழிகள் என் மீது கழிவிரக்கத்துடன் பார்வையைச் செலுத்துகின்றன.

அப்பொழுது அவளின் அடிமையாகி விடுகிறேன் நான்.

அப்பொழுது அவள் எனக்குக் கூற்றாகத் தென்படவில்லை. மாற்றாக, என் காதல் நோய்க்கு இதமான மருந்தாகத் தோற்றுகிறாள்.

அவள் விழிகளில் தேங்கியுள்ள இரக்கம், அவள் என்னைப் பார்க்கும் கருணை நிறைந்த பார்வை இவை அத்தனையும் என்னை மகிழ்விக்கின்றன.

அவளுக்கு என் மீது அன்பு உண்டென்பதை அறிவிக்கின்றன.

சில சமயம் அவள் என்னைக் கண்டு விட்டு அஞ்சி ஒதுங்குகிறாள்.

நாணத்தினால் பிறந்த அச்சம்!

வெட்கத்தினால் பிறந்த வெருட்சி!

அவள் விழிகள் வினாக் குறியை எழுப்புகின்றன. "உங்களை நம்பலாமா? நம்பி உங்களருகில் வரலாமா?" என்று நாணங் கலந்த பயத்துடன் அவை கேள்விக் கணையைத் தொடுக்கின்றன.

இந்த அழகியின் இத்தகைய அச்சம், அவள் பிணையா என்று என்னைக் கேட்க வைத்து விடுகிறது;

அவள் அச்சத்தில் பெண் மான் தான்! அதில் ஐயமேயில்லை!

பார்வையில் கூர்மை—அவள் கூற்றுகின்றாள்!
பார்வையில் இரக்கம்—அவள் கண்ணாகின்றாள்!
பார்வையில் மருட்சி—அவள் மானாகின்றாள்!
ஆனால் உண்மையில்................அவள் எது?
கூற்று? கண்ணோ? அல்லது மானோ?

வள்ளுவரின் தலைவன், திசை திரிந்த நிலையில் கேட்கும் கேள்வியும் அது தான்!

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து.

## உறுப்பினர் உறவினர்களுக்கே பரிசில்கள் வழங்கப்படுகின்றன

**இலங்கைச் சாகித்திய மண்டலம் தமிழ் ஒழிப்பில் ஈடுபடுகிறது. இம்மண்டலம் நூல்களுக்கு வழங்கும் பரிசில்களிலே தமிழுக்கு உரிய இடம் கொடுக்கப் படுவதில்லை. வழங்கப்படும் பரிசில்களும் மண்டல உறுப்பினருக்கும், உறவினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தமிழ் நூல்கள் தகுதியான முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பரிசிலுக்கு அனுப்பப்பட்ட நூல்களையும், ஆய்ந்தோர் பட்டியலையும் வெளியிடல் வேண்டும்.**

இலங்கைச் சாகித்திய மண்டலம் சிங்கள மொழியை மட்டுமன்றித் தமிழ் மொழியையும் வளர்க்க நிறுவப்பட்ட அரசாங்க ஆதரவுடையதொரு நிலையமாகும். எனினும் இதுவும் இக்கால அரசாங்கத்தின் தீவிர கொள்கையான தமிழ் ஒழிப்பினையே பெரும்பாலுங் கடைப்பிடிக்க முயன்று வருகிறது. சில ஆண்டுகளின் முன் இம்மண்டலம் கொழும்பிலே நூற்காட்சி ஒன்றினை நடத்திற்று. இக்காட்சியிலே தமிழ் நூல்களைப் போதிய அளவு சேர்த்து வைத்தற்கு எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. தமிழர்கள் உள்ளம் வருந்தத்தக்க முறையிலே தமிழ் மொழி ஒதுக்கப்பட்டிருந்தது. இதனைச் 'சுதந்திரன்' அம்பலப் படுத்தி எதிர்ப்புக் குரல் எழுப்பிற்று. இதன் விளைவாகப் பின்னர் நடைபெற்ற புத்தகக் காட்சிகளிலே சில திருத்தங்கள் செய்யப்பட்டன.

இப்பொழுது சாகித்திய மண்டலம் தமிழ் நூல்களுக்குப் பரிசில் வழங்குதலில் கையாளும் அகடவிகடங்களை வெளிப்படுத்த வேண்டிய நிலைமை உண்டாகியுள்ளது.

இந்த ஆண்டிலே இம்மண்டலம் சிங்கள நூல்களுக்கு ஆறு பரிசில்கள்கொடுத்தது. ஆனால் தமிழ் நூல்களுக்கு இரண்டு பரிசில்களே வழங்கிற்று. சென்ற ஆண்டிற் கொடுக்கப்பட்ட நான்கு பரிசில்கள் இவ்வாண்டில் இரண்டாகக் குறைக்கப்பட்டன. அடுத்த ஆண்டில் ஒன்றுமே கொடுக்கப்படாமலும்போகலாம். தமிழை இந்நாட்டிலிருந்து ஒழித்துக்கட்ட முனைந்துள்ள சிங்கள வெறியர்களிற் சிலர் இம்மண்டலத்தில் ஆட்சி பெறத் தொடங்கியுளர். இம்முறை இம்மண்டலங் கொடுத்த எட்டுப் பரிசில்களிற் பலவற்றை இம் மண்டல உறுப்பினர்களும், அவர்களின் குடும்பத்தினரும் பெற்றுளர் என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

### சிங்களமயச் செயற்குழு

சாகித்திய மண்டலத்தில் மொத்த உறுப்பினரின் தொகை ஏறக்குறைய முப்பதாகும். இவர்களில் ஐவரே தமிழராவர். இந்த முப்பது பேரும் ஏழுபேரைத்தெரிந்த ஒரு செயற்குழுவை நிறுவுவர். இச்செயற்குழுவே சாகித்திய மண்டலத்தின் அலுவல்களை நடத்தும். பரிசிலுக்கு அனுப்பப்படும் நூல்களை ஆய்வாளருக்குஅனுப்புவதும்,ஆய்வாளரை நியமிப்பதும், ஆய்வாளரின் அறிக்கையைப் பரிசிலனை செய்வதும், பரிசில் பெறுதற்குத் தகுதியுடையோரைத் தெரிவதும் இச்செயற்குழுவின் கடமையாகும்.

இப்பொழுதுள்ள செயற்குழுவிலே தமிழர் ஒருவரும் இல்லை என்பது பலருக்குத் தெரியாது. இச்செயற்குழுவே தமிழிலே பரிசு பெறுதற்குரியாரையும் தெரிந்தெடுத்ததென்றால், தமிழுக்கு இக்குழு அளிக்கும் மதிப்பை யாவரும் நன்கு அறியலாம். ஒரு தமிழரைத் தானும் இச் செயற்குழுவில் சேர்க்க வேண்டுமென்று இம்மண்டலங் கருதாமையும், சாகித்திய மண்டலத்திலுள்ள தமிழ் உறுப்பினர்கள் தங்களில் ஒருவரையாகுதல் இக்குழுவிற் சேர்க்க எண்ணாமையும் தமிழ்மொழி வளர்ச்சியில் இம் மண்டலத்தினர் கொண்டுள்ள அக்கறையை நன்கு காட்டுகின்றதன்றோ!

### மர்மச் செயல்

இப்புதிய செயற்குழு செயற்பட முன்னர் இருந்த செயற்குழுவினர் இவ்வாண்டு சிங்கள நூல்களுக்கு ஆறு பரிசில்களும் தமிழ் நூல்களுக்கு ஆறு பரிசில்களும் கொடுப்பதென முடிவு செய்திருந்தனராம். எனினும், இப்பொழுதுள்ள குழுவினுட் புகுந்த சில சிங்கள தீவிரவாதிகள்- தமிழொழிப்பு வீரர்கள் — தமிழுக்கு வழங்கும் பரிசை இரண்டாகக் குறைத்துவிட்டனராம். தட்டிக் கேட்கப் பேருக்குத்தானும் ஒரு தமிழருமில்லாத செயற்குழு எதனைத்தான் செய்யாது?

இம்முறை சிறுகதை, வரலாறு, ஆராய்ச்சி முதலிய பல துறைகளில் எழுதப்பட்ட தமிழ் நூல்கள் பரிசிலுக்கு அனுப்பப்பட்டன. இவற்றிலே ஒன்றுக்கேனும் பரிசில் அளிக்கப்படாமை தமிழ் எழுத்தாளர்களிடையே பற்பல சந்தேகங்களை உண்டாக்கியுளது. பரிசில் பெறத்தக்க சில நூல்களைப் பிந்திக் கிடைத்தன என்ற சாட்டுக்கூறி ஒதுக்கியும் விட்டதாம், தமிழரில்லாத முழுச் சிங்களச் செயற்குழு. சில நூலாசிரியர்களுக்கு எழுதி அவர்களுடைய நூல்

(15-ம் பக்கம் பார்க்க)

சிறுபான்மை மக்களின்

## உரிமைகள் பெறவே தமிழரசு போராடும்

### குடியேற்றவாசிகள் மத்தியில் மூதூர் முதல்வர் ஜனுப் முகம்மதலி

**மற்றவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் எவையும் முஸ்லிம் மக்களுக்கும் பொதுவாக தமிழ் பேசும் மக்களுக்கும் வழங்கப்படவில்லை. அவ்வுரிமைகளை மீண்டும் பெறவே தமிழரசுக் கட்சி போராடுகிறது. போராட்டங்களில் இன்னல்கள் பல நேரிடலாம். கேலியும் கிண்டலும் செய்யும் சில்லறைப் பத்திரிகைகளும், சுயநலமிகளும் தூற்றினால் அதற்கு அஞ்சப் போவதில்லை.**

"தமிழ் பேசும் மக்களாகிய தமிழ், முஸ்லிம் மக்கள், மற்றவர்கள் எவ்வாறு சகல உரிமைகளுடன் வாழுகிறார்களோ அதே போல வாழுவதற்கு உரிமையுடையவர்கள். ஆனால் இந்த உரிமை இப்பொழுது பறிக்கப்பட்டுள்ளன. மற்றவர்களால் பறிக்கப்பட்டு, இழக்கப்பட்ட உரிமைகளை நாம் பெற போராட வேண்டியுள்ளது." இவ்வாறு மூதூர் முதல்வர் ஜனுப் முகம்மதலி முள்ளிப்பொத்தானை குடியேற்றவாசிகள் நடத்திய பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.



ஜனுப் முகம்மதலி.


அவர் தொடர்ந்து பேசுகையில், "போராட்டம் நடத்தும் போது நமக்குப் பல இன்னல்கள் ஏற்படும். எது நேரிட்டாலும் நாங்கள் அதற்குத் தயாராகவே இருக்கிறோம். இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு, எமது கட்சியாகிய தமிழரசுக் கட்சி பாடுபட்டு வருவதை நீங்கள் யாவருமறிவீர்கள். எங்கள் மீது பொறாமை கொண்டுள்ள சில சுயநலவாதிகளும், சில்லறைப் பத்திரிகைகளும் எங்கள் தலைவரையும், கட்சியையும் குறை கூறித் திரிகிறார்கள். இவர்களின் போலிக் கண்டனங்களுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை. கண்டனங்களை நாங்கள் வரவேற்கிறோம். ஜனநாயக நாட்டில் இவைகள் சகஜம். இப்படியான கண்டனங்கள் எங்களுக்கு இன்னும் விழிப்புணர்ச்சியூட்டி தொண்டு புரிய உதவுகிறது."

மக்களின் பிரதிநிதி என்ற முறையில் தனது தொகுதி மக்களுக்குத் தன்னாலியன்ற உதவிகளை — சேவைகளைச் செய்வதாகக் கூறினார். நேர்மையான முறையில் சேவை செய்வதே தனது நோக்கமென்றும், மற்றவர்களைப் போன்று மக்களை ஏமாற்றவோ— பொய் வாக்குறுதிகள் கொடுக்கவோ தான் தயாராகவில்லை என்றும் கூறிய ஜனுப் முகம்மதலி, குடியேற்ற மக்கள் ஐக்கியமாக, பாகுபாடின்றி, அனைவருடனும் ஒற்றுமையுடன் வாழுமாறும் கேட்டுக் கொண்டார். இக் கூட்டத்திற்குத் தம்பலகாமப் பற்றுக் காரியாதிகாரி திரு. கே. கோபாலரட்ணம் தலைமை வகிக்க திரு. வே. சிவப்பிரகாசம் வரவேற்புரை நிகழ்த்த, திரு. கே. றசாக், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, குடியேற்ற அதிகாரி திரு. வி. எச். விஜயசிங்க ஆகியோர் பேசினர்.

### ஜனசக்தி இளைஞர் மன்றம்

கரணவாய் தெற்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. பாலசுப்பிரமணியம், செயலாளர்: திரு. ச. விநாயகமூர்த்தி, உப செயலாளர்: திரு. தா. குகேந்திரம்: தனாதிகாரி: திரு. இ. அருமநாதன், உப தனாதிகாரி: திரு. வீ. ஞானசுந்தரம், பொறுப்பாளர்கள்: [illegible] முருகானந்தம், இராசரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1962 நவம்பர் மாதம் 11-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## பொருளாதார நெருக்கடி

அரிசிப் பங்கீடு வெட்டு மீண்டும் வரும்—அத்தோடு அரிசி விலையும் உயரும், என்று கூறுகிறது ஒரு செய்தி. அரிசிப் பங்கீடு வெட்டை நாம் அன்றும் எதிர்த்தோம். இன்றும் எதிர்க்கிறோம்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா மந்திரியானார். உடனே திரு. சி. பி. டி. சில்வா நிதி மந்திரி பதவியைக் கைவிட்டார். மற்றொருவர் நிதி மந்திரியாக வந்தார். மந்திரிகள் வருகிறார்கள்—போகிறார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியோ அப்படியே இருக்கிறது—இம்மியும் தளரவில்லை.

திரு. பீலிக்ஸ் ஓடவில்லை—திரும்ப வருவார் என்று அன்றே திட்டவட்டமாகக் கூறியது சுதந்திரன். அச்செய்தி இன்று உண்மையாகிவிட்டது அவர் அன்று ஓரடி பின்வாங்கினார். இன்று ஈரடி முன்னால் பாய்ந்துள்ளார்.

திரு. பீலிக்ஸ் திரும்பி வந்திருப்பது நெருக்கடியிலிருந்து நாட்டைக் காக்கவாம். அவரில்லாத மந்திரிசபையால் ஒரு மாற்றுத் திட்டத்தைக் கூடத் தயாரிக்க முடியவில்லையாம். ஆதலால் அவர் மீண்டும் அழைக்கப்பட்டாராம். இது ஒரு தினசரியின் கூற்று.

பொருளாதார நெருக்கடி இன்று மென்னியைப் பிடிப்பதற்குக் காரணமே அவர்தான். இம்மாதிரி நெருக்கடி ஏற்படுவதை ஓராண்டுக்கு முன்பே சுட்டிக் காட்டினர் எதிர்க் கட்சியினர். இன்னும் 25 ஆண்டுகளுக்கு நெருக்கடியே ஏற்படாது என்று மார்தட்டினார் அன்று திரு. பீலிக்ஸ். நெருக்கடியை மூடி மறைத்தார். அதன் விளைவு நீறு பூத்த நெருப்பு இன்று காட்டுத் தீயாக மாறியதுதான்.

இன்றைய நெருக்கடிக்கு யார் பொறுப்பு? தனிப்பட்ட மந்திரிகள் மட்டுமல்ல. முழு மந்திரி சபையும் பொறுப்பாகும்.

திரு. பீலிக்ஸ் மந்திரியானதும் அரிசி வெட்டுப் பேச்சும் தொடங்கிவிட்டது. இம்முறை வெட்டோடு மட்டும் போகாது. அரிசி விலையும் கொத்துக்கு 5 அல்லது 10 சதம் உயர்ந்துவிடுமாம்.

அரைக் கொத்து வெட்டில் இனிப்பயனில்லை-இரண்டு கொத்தையும் வெட்டவேண்டியதுதான் என திரு. பீலிக்ஸ் ஒரு கூட்டத்தில் கூறினாராம். அவர் மீண்டும் மந்திரியானது இரண்டுகொத்தையும் கபளீகரம் செய்யத்தானா?

அவர் மந்திரியானதும் நாட்டில் மட்டுமல்ல-மந்திரி சபையிலும் நெருக்கடி குமுறுகிறது. அதன் முதற்படி திரு. சில்வாவின் ராஜிநாமா. அடுத்து நிதிமந்திரி பதவியேற்க திரு. மைத்ரிபால, திரு. இலங்கரத்தின மறுப்பு. மந்திரி சபையில் மீண்டும் கோஷ்டிச்சண்டையா? இனி அரசாங்க எம். பி. களும் இரு கூறுகப்பிரிந்து சிண்டுபிடிப்பார்கள். அரசியல் நெருக்கடி தலைதூக்கும். பொருளாதார நெருக்கடி கடுமையாகும். திரு. பீலிக்ஸ் வருகையால் நெருக்கடி கூடுகிறது - குறையவில்லை.

அரிசி போதுமான அளவு உண்டு, கவலை வேண்டாம் என்கிறார் ஒரு மந்திரி. ஜனவரி முதல் பட்டினி தான் என்கிறார் மற்றொரு மந்திரி. யார் சொல்லுவதுஉண்மை? மக்கள் யாரை நம்புவது? மந்திரி சபைக்குள் இத்தனை கருத்து வேற்றுமையா? இந்த மந்திரி சபையில் கூட்டுப் பொறுப்பு எப்படியிருக்க முடியும்? ஒவ்வொரு மந்திரியும் வெவ்வேறு திசையில் செல்கிறார்—நாட்டு நிர்வாகம் நாசம் தான்.

பொருளாதார நெருக்கடி, உணவுப் பஞ்சம் பற்றிய முழு விபரங்களையும் மக்களுக்குக் கூறப்போகிறாராம் பிரதமர். இதுவரை மக்களிடம் கூறியவை உண்மையான விபரங்களில்லையா? உண்மையை மக்களிடமிருந்து மறைத்து வைத்ததேன்? மக்களையும் நம்பமுடியவில்லையா?

உண்மையை மறைத்ததுதான் இன்றைய நெருக்கடிக்கு முக்கிய காரணம். 1961—62 பட்ஜெட் விவாதத்தின்போதே உண்மையைக் கூறியிருந்தால் நிலைமையில் மாற்றம் கண்டிருக்கலாம்; நெருக்கடி தவிர்க்க நடவடிக்கை எடுத்திருக்கலாம். பொருளாதார நெருக்கடி இன்று பயங்கர உருவெடுத்துள்ளது. விரைவில் அரிசிப் பஞ்சம் ஏற்படுமென மக்கள் அஞ்சுகின்றனர்.

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கினால் உணவுப்பற்றுக்குறை தீரும். ஆட்சியாளருக்கு அதில் அக்கறையேகிடையாது. உழைக்கத் தயாராயிருக்கும் மலையகத் தமிழர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தாததென்ன? அவர்கள் உற்பத்தி செய்து குவித்து உணவுப் பஞ்சத்தை ஓட்டிவிடுவார்களே! ஆளும் கும்பலின் வகுப்புவாதம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

வகுப்புவாதம்தான் உற்பத்தியை நாசமாக்கிறது. தமிழர் காணிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதிலேயே அரசாங்கத்தின் முயற்சிகளெல்லாம் வீணாகிறது. சிறுபான்மையோரின் உரிமைப் போராட்டங்களை நசுக்குவதிலே அரசாங்கத்தின் உழைப்பும், கவனம், சக்தி அத்தனையும் விரயமாகின்றன.

உணவு உற்பத்தியிலே வகுப்புவாதக் காய்ச்சல், தொழில் வளர்ச்சியிலே அசிரத்தை, இந்நிலையில் நெருக்கடி படாமல் வேறு என்னதான் ஏற்படும்?

நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கத்திடம் இரு நாசகாரத் திட்டங்கள் உண்டு. ஒன்று இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல்—மற்றொன்று அரிசி வெட்டு. இவ்விரண்டும் புதிய நெருக்கடிகளைத்தான் ஏற்படுத்தும்.

வேறு உருப்படியான திட்டமுமில்லை. உறுதியான நடவடிக்கையுமில்லை. கண்மண் தெரியாமல் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தினர். வர்த்தக மந்தம், தொழில் மந்தம், மூலப்பொருள் பஞ்சம், தொழிற்சாலைகள் அடைப்பு, சிப்பந்திகள் வேலை நீக்கம், வேலையின்மை அதிகரித்தல் ஆகியவைதான் இக்கட்டுப்பாட்டின் நேரடி விளைவுகள்.

இறக்குமதிக் கட்டுப்பாடு எல்லைமீறியதால் மக்கள் அவசியப் பொருட்களின்றி அவதிப்படுகின்றனர். விலைவாசிகளும் விஷம்போல ஏறுகின்றன. இந்நிலையில் மீண்டும் அரிசி வெட்டை மக்கள் அனுமதிக்கவே மாட்டார்களென்று இப்பொழுதே எச்சரிக்கின்றோம்.

# பெரும்பான்மை பலத்தை எதிர்க்க சத்திய நெறியே ஒரே வழியாகும்

## சங்கானை காந்தி ஜெயந்தி விழாவில் வட்டுக்கோட்டை எம். பி.

"பெரும்பான்மையினரை எதிர்த்துப் போராடுவதற்குச் சிறந்த ஆயுதம் சத்தியாக்கிரகம். இதை அண்ணல் காந்தி தென் ஆபிரிக்காவிலே நடாத்திக் காண்பித்தார். வரலாறு தெரியாதவர்கள் புரிந்து கொள்ளட்டும்".

இவ்வாறு கடந்த 4-11-62 அன்று சங்கானையில் திரு. எஸ் இராசசேகரம் தலைமையில் நடைபெற்ற காந்தி விழாவில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:—

1927ம் ஆண்டு அண்ணல் காந்தி இலங்கைக்கு வந்த பொழுது, ஈழத்து தமிழ் அரசியற் தலைவர்களைச் சந்தித்து சுதந்திரப் போரில் தீவிரமாகப் பங்குகொள்ளும் வண்ணம் வேண்டிய பொழுது, அப்பொழுது இருந்த தமிழ்த் தலைவர்கள் "இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தால் பெரும்பான்மைச் சமூகத்தினரான சிங்கள மக்கள் நம்மை நசுக்கி விடுவார்கள்" என்று கூறினார்கள். அதற்கு அண்ணல் காந்தி, நம்மிடம் சத்தியாக்கிரகம் என்னும் மிகப்பெரிய ஆயுதம் இருக்கும் பொழுது, நாம் எதற்காக அஞ்சவேண்டும்' என்று தமிழ்த் தலைவர்களைப் பார்த்துக்கேட்டார்.

இச்சம்பவம் நான் பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது. ஆனால் இதைத்தெரிவித்தவர் சமசமாஜக் கட்சியின் வடபிரதேசத் தலைவர்களில் முக்கிய பிரமுகரான திரு. நாகலிங்கம் அவர்களே.


இன்று நாம், அன்று அண்ணல் காந்தி கூறிய வழி நடப்பதைப் பார்த்து இதே சமசமாஜப் பிரமுகர்கள் கிண்டலும் கேலியும் செய்கிறார்கள்.

அண்ணல் 'காந்தி பாரதத்தில் சிறுபான்மை வெள்ளையரை எதிர்த்தே சத்தியாக்கிரகம் செய்தார். அப்படியிருக்க நாம் எப்படிப்பெரும்பான்மையினரை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்ய முடியும் என்று சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாகக் கூற ஆசைப்படுகிறேன்.

அண்ணல் காந்தி முதல் முதல் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்ததே பெரும்பான்மையினரை எதிர்த்தே. பெரும்பான்மையினருடன் போரிடுவதற்கு சத்திய யுத்தத்தை தவிர வேறு மார்க்கம் இல்லை யென்பதைக் காந்தியடிகள் தென் ஆபிரிக்காவிலே கண்டார். தென் ஆபிரிக்காவிலே அவர்கள் நடாத்திய சத்திய யுத்தம் யாவும் பெரும்பான்மையினரை எதிர்த்தே. வரலாறு தெரிந்தவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள். எனவே சத்தியாக்கிரகம் பெரும்பான்மையினருக்கு எதிராகப் போராடுவதற்கு ஏற்றது அல்ல என்று கூறுபவர்கள் சற்றுத் திரும்பிப்பார்க்கட்டும் தென் ஆபிரிக்க வரலாற்றை என்று வேண்டிக் கொள்கிறேன்."

### சீன—இந்திய யுத்தம்

அவர் தொடர்ந்து சீன—இந்தியா விடயமாகப் பேசும் பொழுது கூறியதாவது: "ஆசியாவில் மட்டுமல்ல, பார் முழுதும் பாரதத்தின் செல்வாக்கு அபரிதமாக வளர்ந்துள்ளது. இதைச் சீனாவால் தட்டிக் கொள்ள முடியவில்லை. காரணம் சீனாவின் சர்வாதிகாரப் போக்கே. எனவே இந்தியாவின் ஜனநாயகத்துக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற ஒரு நோக்குடன், இந்தியா மீது ஆக்கிரமிப்பை நடாத்த முனைந்துள்ளது. ஆகவே இது வெறும் எல்லைப் போராட்டமல்ல, ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் ஏற்பட்டுள்ள போராட்டமாகும்—இந்தியாவின் நடுவு நிலைமைக் கொள்கைக்கு- இந்தியாவின் செல்வாக்கிற்கு களங்கம் ஏற்படுத்தவென்று தோன்றியவொரு போராட்டமாகும்.



திரு. அ. அமிர்தலிங்கம்

மனிதாபிமானம் உடைய ஒவ்வொருவரும் — மனிதத் தன்மைக்கு மதிப்பளிக்கும் ஒவ்வொருவரும் இந்தியாவின் பக்கமே உளர்.

நமது நாட்டில் உள்ள கொம்யூனிஸ்டுகளும், சமசமாஜக் கட்சியினரும் பக்கத்தில் இருக்கும் பாரதத்தை மறந்து, எங்கோ இருக்கும் கியூபாவிற்காகக் கண்ணீர் விடுகிறார்கள், இரத்தம் சிந்துகிறார்கள். கியூபா பிரச்சினை சாதாரண பிரச்சினையல்ல, உலக அபாயத்திற்கு உள்ள சில அறிகுறிகள் தென்பட்டன. ஆனாலும், சீன—இந்தியப் பிரச்சினையுடன் பார்க்கும் பொழுது, நமக்கு அண்மை நாட்டுப் பிரச்சினையே மிக முக்கியமானதாகும்; இதை யாரும் மறுக்க முடியாது.

சாதாரண கப்பல் மறிப்புக்கு இரத்தம் சிந்தியவர்களுக்கு, ஒரு நாடு ஆக்கிரமிக்கப்படுவது கண்ணுக்குப் புலப்படவில்லைப்போலும்!

### மொழி வழி அரசு

அடுத்து உடுவில் பிரதிநிதி திரு. வி. தருமலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

ஆங்கிலேயர்கள் நிர்வாக வசதிக்காக இந்தியாவை மாகாணவாரியாகப் பிரித்து வைத்திருந்தார்கள். ஆனால் காந்தியடிகள், மொழி வழி பிரித்தே காங்கிரஸ் கிளைகளை அமைத்திருந்தார். எனவே மொழி வழி ஆட்சியை காந்தியடிகள் எவ்வளவு தூரம் வற்புறுத்தியுள்ளார் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

இந்தியாமீது சீனா நடத்தும் ஆக்கிரமிப்பைக் கண்டித்து கீழ்க்காணும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது:

"சுதந்திரமடைந்த காலந்தொட்டு உலக சமாதானத்தின் ஒப்பற்ற மணியாய் விளங்கிவரும் இந்தியா மீது கொம்யூனிஸ்ட் சீனா ஆக்கிரமிப்பு யுத்தத்தை எல்லைப் பிரச்சினை என்ற சாக்கில் தொடுத்துள்ளதை, வட இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் ஏகமனதாக எதிர்க்கிறார்கள் என்பதனையும், என்றும் எங்கள் ஆதரவும், அனுதாபமும் இந்தியாவிற்கே உள்ளது என்பதனையும், மகாத்மா காந்தியடிகளின் ஜயந்தியைக் கொண்டாடும் இத்தினத்தில், இந்தியப் பிரதம மந்திரி நேரு அவர்களுக்கும், நாட்டைக் காக்கப் போராடும் இந்திய மக்களுக்கும் மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

திருவாளர்கள் நாவேந்தன், மு. சிவானந்தன், பஞ்சரத்தினம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பாடசாலையில் தமிழ் ஒழிப்பு ஆரம்பம்

கொழும்பிலுள்ள நில்வீதி அரசினர் பாடசாலையில் திட்டமிடப்பட்ட வகையில் தமிழ் ஒழிப்பு ஆரம்பமாக்கப்படுவதாக நமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆரம்ப வகுப்புகளுக்கு காலையில் சிங்களப் பிள்ளைகளுக்கும், பிற்பகல் தமிழ் பிள்ளைகளுக்கும் பாட போதனை நடை பெற்று வருகிறது. இங்கிருக்கும் தமிழ்ப் பகுதியை முற்றாக ஒழித்துவிட்டு, சிங்கள மாணவர்களுக்கே முழு உபயோகத்தையும் அளித்து விடவேண்டுமென்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளனவாம். இதற்கு சில 'முற்போக்கு' எம். பிக்களும் உடந்தையாக உள்ளனராம். இது பற்றிய முழு விபரமும் அடுத்த வாரச் சுதந்திரனில் இடம் பெறும்.

## அண்ணாவின் பேச்சு

அறிஞர் அண்ணாவின் பேச்சு இவ்வாரம் வெளியிடுவதாகக் குறிப்பிட்டிருந்தோம்.

அடுத்த வாரம் சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இதழாக சுதந்திரன் வெளிவருவதால், அவ்விதழிலேயே அறிஞர் அண்ணாவின் பேச்சின் முழு விபரமும் இடம் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புறவுப் போர்வையில் உறவாடி நயவஞ்சகம் புரிந்துவிட்டது சீனா

## அதன் கொடுஞ்செயலைக் கண்டிக்கிறோம்

## மட்டுநகர் மைதானத்தில் திரு. எஸ். ஜே. வி. மற்றும் தமிழரசுத் தலைவர்கள் முழக்கம்

**இந்தியாவோடு நட்புறவு கொண்டாடிய செஞ்சீனா இன்று இந்திய மக்களின் சத்துராதியாக மாறிவிட்டது. இத்தகைய கொடூரச் செயலை இந்தியா ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை. 1954ம் ஆண்டில் பாண்டுங் மகாநாட்டில் செஞ்சீனா பஞ்சசீலத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தது. ஆனால் இன்று சீனா பசுத்தோல் போர்த்த கொடும் புலியாக மாறிவிட்டது. சீனாவின் இந்தப் படையெடுப்பை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.**

இந்தியா மீது சீனாவின் ஆக்கிரமிப்பை ஆட்சேபிக்கும் முகமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவில் மட்டுநகர் மைதானத்தில் திரு. ஜே. எஸ். திசவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டனக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

சீனா தேசம் செஞ்சீனாவாக மாறிய காலத்தில் உலகத்திலுள்ள வல்லரசுகள் பல செஞ்சீனாவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஐக்கியநாடுகள் சபைக்குள் செஞ்சீனாவை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்ற பிரச்சினை கிளம்பியபோது அமெரிக்காவும் வேறு பல தேசங்களும் செஞ்சீனாவை ஐக்கிய நாடுகள் சபைக்குள் சேர்க்க வேண்டாமென மறுத்து நின்றன.

அந்த நேரத்தில் இந்தியா செஞ்சீனாவை ஏற்றுக் கொண்டு, அந்தத் தேசத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதாடி நின்றது. அதுவுமின்றி வேறு பல துறைகளில் செஞ்சீனாவுடன் நட்பை வளர்த்தது.

### கிடைத்த வெகுமதி

இவையெல்லாவற்றிற்கும் செஞ்சீனா செய்த பதில் இந்தியாவுக்கு விரோதமாகப் படையெடுத்து முப்பதினாயிரம் துருப்புக்களைக் கொண்டு இந்தியாவிற்கு விரோதமாக ஆக்கிரமித்ததே. ஒருபோதும் செஞ்சீனா இப்படி நடக்குமென்று எதிர்பார்த்திருக்காத இந்தியா இந்தப் படையெடுப்புக்குத் தன்னை ஆயத்தப் படுத்திக்கொள்ளவில்லை.

இந்தியாவோடு சிநேகிதம் பேசிய செஞ்சீனா இப்படி சத்துராதியாய் மாறும் என்று இந்தியா ஒருபோதும் காத்திருக்கவில்லை.

சீனாவின் இந்தப் படையெடுப்பை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தியா இப்போது சீனாப்படையெடுப்புக்கு விரோதமாய் நடாத்தும் இந்தப் போர் இந்தியாவின் பாதுகாப்பிற்கு மாத்திரமல்ல இலங்கையின் பாதுகாப்புக்குமாகும். ஆகவே சீனாவின் ஆக்கிரமிப்பை இலங்கையராகிய நாம்ஒவ்வொருவரும் கண்டிக்க வேண்டியதவசியம்.

---

### நமது கடமை

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை பேசியதாவது:- சீனாவின் ஆக்கிரமிப்பு இந்தியாவிற்கு மட்டும் விரோதமான செயல் என்று சொல்லிவிட முடியாது. உலகத்தில் சமாதானத்தை விரும்பும் தேசங்கள் எல்லாவற்றிற்கும் விரோதமான செயலாகும். உலக நாடுகளின் சுதந்திரத்திற்காக இந்தியா போராடும் நெருக்கடிமிக்க இந்நிலையில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் மட்டுமன்றி உலகம் முழுவதுமே உள்ள தமிழ் மக்கள் இந்தியாவுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.

தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசியதாவது:- இந்திய சீன விவகாரத்தில் இலங்கை நடுநிலைமைக் கொள்கையை அனுஷ்டிப்பதைத் தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. சுதந்திரத்தை விரும்பும் எந்த நாடாவது சீனாவின் கொள்கையை எதிர்க்காமல் இருக்கமுடியாது. சீன ஆக்கிரமிப்பு வலுப்பெறுமானால், கிழக்காசிய நாடுகளே இதனால் பெரிதும் பாதிக்கப்படும்.

மற்றும், செனட்டர் மாணிக்கம், உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், நகர சபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம், வித்துவான் எஸ். இ. கமலநாதன், திரு. டொ. சை. க. வணசிங்கா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

---

## தூதராலயத்தில் ரகசிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னிஸ்ட் கட்சியைச் சந்தேகக் கண் கொண்டே பார்க்கின்றனர். கொம்யூனிஸ்டுகளின் தந்திரோபாயங்களைப் பற்றி மக்கள் ஏற்கனவே அறிந்திருப்பதால் அவர்களின் அந்தரங்கசுத்தியில் மக்களுக்கு நம்பிக்கை கிடையாது.

உலகக் கொம்யூனிஸ்டு இயக்கத்தின் ஓர் "யூனிட்" தான் இந்தியக் கொம்யூனிஸ்டு கட்சி என்பது பகிரங்க இரகசியம். உலகம்முழுவதுமுள்ள கொம்யூனிஸ்டுக் கட்சிகள் சீனாவின் ஆக்கிரமிப்பை ஆதரிப்பதாக தத்தம் பத்திரிகைகள் மூலம் அறிவித்துள்ளன.

### உலக கொம்யூனிஸம்

எனவே இந்தியக் கொம்யூனிஸ்டு கட்சி மாத்திரம் வேறு திசையில் செல்ல முடியாதல்லவா? உலகக் கொம்யூனிஸ்டு இயக்கத்திலிருந்து அது பிரிந்து தனித்து நிற்க முடியாது.

ஆகவே இந்தியக் கொம்யூனிஸ்டுக்கட்சியும் சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கிறதென்பது தெளிவு. ஆனால் அதனை இந்தியாவில் பகிரங்கமாகக் கூறினால் அவர்கள் நாசமாகி விடுவார்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகையால்தான் இந்த உபாயத்தைக் கையாண்டுள்ளனர்.

### அந்தரங்க அறிக்கைகள்

அதே சமயத்தில் பிறநாடுகளிலுள்ள தங்களின் போக்கைத் தவறாகப் புரிந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு வெளிநாட்டுக் கொம்யூனிஸ்டுகளுக்கு அந்தரங்க அறிக்கைகள் அனுப்பி வைத்துள்ளனர். அந்த அறிக்கைதான் இலங்கை கொம்யூனிஸ்டுக் கட்சிக்கும் கிடைத்திருக்கிறதெனக் கூறப்படுகிறது.

இந்த அறிக்கையில் 'சீனா சோஷலிஸ முகாமிலே இருப்பதை தாங்கள் அங்கீகரித்திருப்பதாகவும், இந்த யுத்தத்தில் சோவியத் நாடு சீனாவுக்கு ஆதரவு அளிப்பதைத் தாங்கள் கண்டிக்கவில்லையென்றும், தற்காலிகமாக நாசத்திலிருந்து கட்சியைப் பாதுகாப்பதற்காகவே [illegible] ஆக்கிரமிப்பை எதிர்ப்பதாகவும், சீனா சம்பந்தமாக உலகக் கொம்யூனிஸ்டுக் கட்சிக் கொள்கையே தங்களின் கொள்கையென்றும் இந்தியக் கொம்யூனிஸ்டுக் கட்சி உறுதி கூறியிருக்கிறதாம்.

இலங்கைக்கொம்யூனிஸ்டு கட்சி சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயமே. ஆனால் ஆக்கிரமிப்பை ஆதரித்து, சீனாவுக்குச் சார்பாக இந்நாட்டு மக்களிடையே ஆதரவு திரட்டுவதற்காக எத்தகைய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது சம்பந்தமாக இலங்கைக் கொம்யூனிஸ்டு கட்சி இன்னும் இறுதி முடிவு செய்யவில்லையென்று தெரிகிறது.

### தூதராலயத்துடன் தொடர்பு

ஆனால் கட்சி இலங்கையிலுள்ள சீனத் தூதராலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதென்பதும், இவ்விஷயம் சம்பந்தமாக கொம்யூனிஸ்டு கட்சியும் சீனத் தூதராலயமும் கலந்தாலோசித்துத்தான் நடவடிக்கை எடுக்கின்றனரென்றும் கூறப்படுகிறது.

கொழும்பு டரட் வீதியிலுள்ள சீனத் தூதர் அலுவலகத்தில் 6-11-62 செவ்வாய்க்கிழமை காலை 11-30 மணிவரை ஒரு அந்தரங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகவும், இந்தக் கூட்டத்தில் இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர்களிலொருவரும், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான திரு என். சண்முகதாசனும், சீனத் தூதராலய அதிகாரிகளும் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது. அறைக் கதவுகளை அடைத்துக் கொண்டு மிக இரகசியமாக நடைபெற்றதாம் இக்கூட்டம்.

இந்தக் கூட்டத்தில் இந்திய—சீன யுத்தம் பற்றி இந்திய கொம்யூனிஸ்டு கட்சி அனுப்பிய அந்தரங்க அறிக்கை சம்பந்தமாக விவாதம் நடைபெற்றதோடு, இலங்கைக் கொம்யூனிஸ்டு கட்சி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பரிசீலனை செய்யப்பட்டதாக என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

---

சம்மாந்துறையில்

**சுதந்திரன்**

கிடைக்குமிடம்

எஸ். என். எஸ்.

நெய்னா முஹம்மது சாகிபு

ப. நோ. கூ. சங்க சமாசம்

சம்மாந்துறை.

---

## யாருக்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக்கொண்டது சில மந்திரிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

விரைவில் மந்திரி சபையில் பெரிய மாற்றங்கள் செய்யப்படுமென்றும் திரு. சி. பி. டி. சில்வா மந்திரி சபை மாற்றம் பற்றிப் பிரதமருடன் நீண்டநேரம் சம்பாஷணை நடத்திய பிறகே நிதி மந்திரி பதவியிலிருந்து விலகினாரென்றும் கூறப்படுகிறது.

மந்திரிசபை முற்றாக ராஜிநாமாசெய்து விட்டு, புதிய மந்திரிசபையொன்றைப் பிரதம மந்திரி அமைக்கக் கூடுமென்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

---

## வேலையற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுகின்றன. 1960ம் ஆண்டுவரை பயிற்சிமுடித்து வெளியேறிய பெண்கள் எல்லோருக்கும் (மட்டக்களப்பை பொறுத்த வரையில்) நியமனங்கள் கொடுக்கப் பட்டுவிட்டன.

ஆண்கள் அனைவருக்கும் விரைவில் நியமனங்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

நியமனங்களைத் துரிதப் படுத்தி, தங்கள் கஷ்டங்களைப் போக்க உதவுமாறு செயலாளர் திரு. வி. த. குமாரசாமி, தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்களையும் கோரியுள்ளார்.

---

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துடைப்புக்காகவே புதியநகரப் பகுதியில் இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும் வணக்க ஸ்தலங்களுக்கான இடங்கள் கொடுக்கப் பட்டுள்ளன என்றும் அதில் குறிப்பிட்டிருந்தோம்.

அம்மானின் கூற்று உண்மையாகிவிட்டது என்பதை அண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று எடுத்துக் காட்டுகின்றது.

புதிய நகரப் பகுதியில் முஸ்லிம்களுக்கான பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணிக்க இடம் ஒதுக்கப்பட்டது. கடந்த மாதம் சில தீவிர பௌத்தர்கள் அந்த இடத்தில் தோரணங்களைக் கட்டி ஒருபுத்தர்சிலையை நிர்மாணித்து விட்டுள்ளனர். விஷயம் வெளியாகியதும் அனுராதபுரத்தில் பெரும்பரபரப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, பொலிசார் தலையிட்டு நிலைமையைச் சமாளித்தனர்.

காலம் போகும் போக்கிலும், கருத்து மாறும் வேகத்திலும், அவ்விடமும் பறிபோய் விடலாம். ஆகவே முஸ்லிம்கள் உடனடியாக அவ்விடத்தை ஆக்கிரமித்து, கட்டிட வேலைகளைத் தொடங்கிவிட வேண்டும் என்றும் அம்மான் தயவாகக் கேட்டுக் கொள்கிறார்.

---


மேனியின் எழிலை மேம்பட வைப்பவை

லதா

மணிப்புரி சாரிகளே!!

லதா மணிப்புரி சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினாலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப் பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி, 110&114, மெயின் வீதி:

கொழும்பு:

—Mylads/KL 603/62—


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்கள், இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு அறப்போர் நடத்திக் கொண்டிருந்த விரத காலம்.........!

விடுதலை இயக்கத்தின் குறுகிய கால ஆணையை மக்கள் வீரத்துடனும், தீரத்துடனும் ஏற்றுச் செயல் படுத்திக்கொண்டிருந்த புனித வேளை......மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, திருமலை, மன்னார் என்று தமிழர் பகுதியும் திருவிடங்களெல்லாம் சுதந்திரத் தீ எரிந்து கொண்டிருந்த வேள்விக் காலம்.....!

வடக்கிலும், கிழக்கிலும் ஏறத்தாழ ஆட்சி செத்து விட்ட நிலை.........!

அரசாங்க அலுவலகங்கள் மக்கள் கூட்டத்தால், முற்று கையிடப்பட்டு ஸ்தம்பித்துக் கிடந்தன!

இயற்கையின் குரங்குச் சேஷ்டைகள் விடுதலை இயக்கத்துக்கு முன் செயலிழந்தன.

பசியும் தாகமும் மக்கள் உள்ளத்தில் எழுந்த புதிய உணர்ச்சித் தீயில் எரிந்து சாம்பலாயின! ‘வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ?’ என்ற ஆவேச நிலை. ஆட்சி வெகுண்டெழுந்தது. மக்களின் உணர்ச்சியை, அடக்கியொடுக்க இராணுவம் சீறிப் புறப்பட்டது; ஏவு கணைகள் பல எய்யப்பட்டன, மக்கள் மீது!

காட்டு மிராண்டி வேஷம் போட்டுக் கொண்டு ஆட்சி பீடம் பைசாச ஆட்டம் ஆடியது, மக்கள் சுதந்திரமாக நடமாடும் உரிமை பறிக்கப்பட்டது, உடமை பறிக்கப்பட்டது, உயிர் பறிக்கப்பட்டது, உலகம் போற்றும் ஜனநாயகம் பறிக்கப்பட்டது, உண்ணும் உணவு பறிக்கப்பட்டது!

வெட்கம்.........! பட்டினி போடப் போட நெஞ்சில், உரமும், வைராக்கியமும், குமுறி எழும் என்ற அரிச்சுவடி உண்மைகூட ஆட்சி பீடத்துக்குப் புரியவில்லை. உலக உத்தமர் காந்தி, பட்டினி கிடந்தே பாரதத்தை மீட்டார் என்ற சங்கதி அதற்குத் தெரியாமற் போயிற்று!

அரிசியைப் பறித்தால், ஆட்சியின் காலைப் பிடிப்பார்கள் மக்கள் என்று கருதியவர்களது காலை வாரி விட்டனர் மக்கள்.

இரத்த வெறிபிடித்த இராணுவத்தினரை ஏவி விட்டது ஆட்சி— களைத்ததா சுதந்திர வேட்கை?

போட்டிக் கதை 6.

# இரத்தம்

‘சொத்தைப் பறிப்போம்’ என்று ‘வெருட்டிப்’ பார்த்தது ஆட்சி—சட்டப் புத்தகத்தைத் தூக்கி நெருப்பிலே இட்டனர் சுதந்திர வீரர்கள்!

துப்பாக்கியை நீட்டியது அரசு!

‘சுடு’ என்று மார்பை நிமிர்த்தியது மக்கள் அணி!

சிறைக் கதவுகள் வாயைப் பிளந்தன.

‘உனது பசி தீரமட்டும், எங்களை நாங்களே உனக்கு உணவாகத் தருகின்றோம்! என்று திரண்டு சிறையை நிறைத்தது மறவர் கூட்டம்! தோல்வி கண்ட அரச பீடம் விடுதலை இயக்கத்தின் ‘ஆணி வேரை’க் கல்லி யெறியும் திருப்பணியை மேற்கொண்டது. இயக்கத்தின் ஆணி வேரான தலைவனின் தலையைச் சீவிவிட்டால், உணர்ச்சி ஒடுங்கிவிடும், இயக்கம் படுத்துவிடும் என்று கணக்குப் போட்டது ஆட்சிபீடம்.

அன்று அறப்போரின் உச்சக் கட்டம்! விடுதலை இயக்கத் தந்தை, தமிழ்க்கிழவன், ஆணிவேர், தமிழ் மொழியின் மீட்சிக்குப் போராடி தசையைக் கரைத்து விட்டு, எஞ்சிய எலும்புடன் நடந்து கொண்டிருந்தார் விடுதலைக் கன்னியை நோக்கி!

அவரைத் தாங்கிப்பிடித்தவாறு சென்று கொண்டிருந்தான் சுந்தரம். அவனுக்கருகில் தூக்க முடியாத தன் நிறை வயிற்றைத் தூக்கிக் கொண்டுஅசைந்து அசைந்து நடந்து கொண்டிருந்தாள் சுந்தரத்தின் மனைவி தங்கம்!

ஆண்களும், பெண்களுமாக நூற்றுக்கணக்கானோர், அவர்களைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

ஆட்சி பீடத்தின் மனிதாபிமானமற்ற அட்டூழியச் செயலில் தம் நிலை மறந்து—தாம் எடுத்துச் கொண்ட ‘அகிம்சை’என்ற விரதத்தை மறந்து, சில பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கி விட்ட ஒரு சில மக்களைச் சாந்திப் படுத்தும் முகமாகத் தலைவர் விடுத்த அறிக்கை மக்களின் மத்தியில் சொரியலாக வினியோகிக்கப்பட்டது.


“பலாத்காரப் போராட்டத்தை நிறுத்துங்கள், அறத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. என்னைத் தொடருங்கள். நாம் அகிம்சை என்ற ஆயுதத்தால் உங்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருகின்றேன்” என்று அதில் உருக்கமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. மந்திரத்தால் கட்டுண்டதுபோல் ‘இம்சை’ உணர்வு

‘சுபத்திரா’

ஒடுங்கியது. தமிழ்க் கிழவனின் தலைமையில் வீரநடை இட்டுக் கொண்டிருந்த அறப்படை முதலாவதாக நீதி மன்றத்துள் புகுந்தது அமைதியாக!

“படார்......!படார்......! டுமில்.........!டுமில்.........!”

துப்பாக்கி வேட்டுகளின் ஒலி வானைத் தகர்த்தது,



வீரர்களின் நெஞ்சைப் பிளந்தது.

தியாகிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தனர். துப்பாக்கி வேட்டொலி கேட்டுக் கொண்டே இருந்தது. நீதிமன்றம் பிணக்காடாகியது!

பறந்து வந்தது ஒரு ‘ஜீப்’.........தலைவரைத் தூக்கிப் போட்டுக் கொண்டு “விர்...” என்று பறக்க முனைந்த போது—

‘கிறீச்......’ என்று பாய்ந்தாள் தங்கம் ‘ஜீப்’புக்குள்! அந்த நேரத்தில் அவளுக்கு அந்தப் பலம் எங்கிருந்து தான் வந்ததோ?

அதே விநாடி சுந்தரமும் ‘ஜீப்’புக்குள் ‘தடார்.........’ என்று பாய்ந்தான்!

“.........................?”

நகரத் தெருக்களை நசுக்கியெறிந்துவிட்டு எங்கோ ஓடி மறைந்தது ‘ஜீப்’ அந்த மூவரோடும்!

மக்கள் [illegible] தலைவரைச் சூழ்ச்சியாகப் பிடித்துக் கொண்டு போகும் இந்த ‘விசர் நாய்’கள் அவருக்கு என்ன உற்பாதங்களைச் செய்யுமோ? என்று பதறினர்.

“அந்தோ! நிறை மாதக் கர்ப்பிணி’ தங்கம், அவளை என்ன செய்கிறார்களோ?” பரிதவித்தனர் பெண்கள். “சுந்தரம்.........ஏறு நடை போடும் அந்த வீரனுக்கு என்ன கொடுமை புரிவார்களோ?” அலறியது வாலிப அணி சற்று நேரத்தில்—

வானொலி நாடெங்கும் அலறியது!

“உங்கள் தலைவரை நீங்கள் மீண்டும் காணவேண்டுமானால், உடனடியாக நீங்கள் போராட்டத்தை நிறுத்துங்கள்!”

வெட்கம் கெட்ட ஆட்சி வீர கர்ச்சனை புரிந்தது. வெளியில் இருந்த விடுதலை இயக்கத் தலைவர்கள் செய்வது என்ன என்று தெரியாது தவித்தனர்.

விடுதலை இயக்கத்தை நிறுத்திவிட்டால், தலைவரை விடுதலை செய்வார்கள் என்று நம்ப இந்த ஆட்சி அவ்வளவு கௌரவமுள்ளதா? அப்படித்தான் ஆட்சி சொன்னதைப் போலவே நடந்துகொண்டாலும், தலைவர் நம்மையும், நம் இயக்கத்தையும் பற்றி என்ன நினைப்பார்?

“தியாகம் என்ற சொல்லையே களங்கப்படுத்தி விட்டீர்களே! இதற்குத்தான் அர்த்தம் தியாகமா?” என்று கேட்டால்!

மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது தவித்தனர் மக்கள்.

வானொலி அதே பல்லவியை அடிக்கடி ஒலிபரப்பிக் கொண்டேயிருந்தது...

காடு!

அதன் மத்தியில் ஒரு கூடாரம்.

அதனுள் மூன்று உருவங்கள்!

ஒன்று பிரக்ஞையற்ற நிலையில் கிடந்தது. மற்ற இரண்டும் கொட்டுக் கொட்டென்று கண்விழித்துக் கொண்டிருந்தன.

அந்தக் கூடாரத்தை ஒரு சில இராணுவ வீரர்கள் காவல் புரிந்துகொண்டிருந்தனர்.

நேரம் பின்னிரவு! இராணுவ வீரர்கள் தூங்கி வழியும் ‘சோம்பல்’ நேரம்.

‘பறார்...!’

கூடாரத்தின் துணி கிழிந்தது.

முதலாவது உருவம் பிரக்ஞையற்றுக் கிடந்த அந்த உருவத்தைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வெளியே வந்தது!

அதைத் தொடர்ந்து மற்ற உருவம் வெளியே வந்தது! கூடாரத்தை ஒட்டினாற் போல் இருந்த காட்டுக்குள் புகுந்தன அந்த உருவங்கள்!

இருபது யார் கூட நடந்திருக்க மாட்டார்கள்...! நடந்து வந்த உருவங்களில் ஒன்று முனங்கத் தொடங்கியது! “சற்றுப் பொறுத்துக் கொள்......!”

தோளில் கிடந்த உருவத்தைக் கீழே இறக்கியவாறு கூறியது மற்ற உருவம்.

சோர்ந்து கிடந்த உருவம் விழித்துக் கொண்டது.

“என்ன இது காடு!”

“...................................!”

“என்ன நாம் தப்பி ஓடுகின்றோமா...? உயிருக்கா...? சுந்தரம் நீர் என்ன தவறு செய்துவிட்டீர்? நீர் வேண்டுமானால் உமது மனைவியைக் கூட்டிக் கொண்டு தப்பி ஓடியிருக்கலாம், என்னை ஏன் இங்கு கொண்டு வந்தீர்” பிரக்ஞை தெளிந்த தலைவர் ‘பட்’ என்று கேட்டார்.

“உஷ்...! இரைந்து பேசாதீர்கள். கொஞ்சம் சந்தடி கேட்டாலும் ஆபத்து! அவர்கள் அப்படியே வந்து மொய்த்து விடுவார்கள். அப்புறம் நமது மக்களை வழி நடத்த யாருமே இல்லை. நமது இயக்கத்துக்குத் தங்களுடைய தேவை மிக மிக அவசியமாகின்றது....

“அம்மா......அம்ம்...” பக்கத்தில் நின்ற உருவத்தின் முனங்கல் பலத்தது.

“தங்கம்! சற்றுப் பொறுத்துக்கொள் அம்மா!” சுந்தரம் குரலைத் தாழ்த்திக் கூறினான்.

தேய் பிறை வானில் தோன்றி மறையும் தறுவாயில் இருந்தது.

“ம்...ஒ...ஓ...ம்...ஆ...” தங்கத்தின் முனங்கல் இன்னும் வலுத்தது.

சுந்தரத்தின் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன...முனங்கல்...! தங்கத்தைப் பிரசவ வேதனை பிழிந்தெடுத்தது!

தலைவரை நிமிர்ந்து பார்த்தான் சுந்தரம்.

“சுந்தரம்... உலகத்தில் அறத்தை எவரும் ஏமாற்றிவிட முடியாது. பார்த்தாயா, உண்மையைக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடப் பார்த்தோம் அது முடிந்ததா? சரி; என்னைப் பற்றிக் கவலைப்படவோ சிந்திக்கவோ இது வேளையல்ல; தாய்மையுறத் துடிக்கும் அந்தத் தமிழ்க் குல மாணிக்கத்தை, உன் மனைவியைக் கவனிப்பதும், காப்பதும் தான் இப்போதய நமது பணி. நம்மை அழிக்கத் துடிக்கும் இராணுவ வீரர்களிடம் நானே நேரில் சென்று; உன் மனைவி குழந்தையைப் பெற்றுப் பிழைக்க வேண்டிய உதவியைக்கோருகிறேன். அதுவரை அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்” என்ற தலைவர், சுந்தரத்தின் பதிலுக்கே காத்திருக்காமல் தமது தளர்ந்த உடலைச் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கினார்.

சுந்தரம் அதிர்ந்து போனான்!

“ஐயோ......அம்மா!”

வேதனை தாழாது துடித்த மனைவியைப் பார்த்தான் சுந்தரம்.

நொடிக்கும் பொழுதில் இத்தலைமுறையில் நடந்த தமிழரின் உரிமைப் போரில் அவன் எடுத்துக் கொண்ட பங்கின் வரலாறு, தொடர்ச்சியாக அவன் மனத்திரையில் விரிந்தன—

(13-ம் பக்கம் பார்க்க)




ரிஷி

அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி, சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்திய மில்லை.

விலை 1 றுத்தல் ரூபா 35/00
” ½ ” ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தடுப்புக் காவலில் நாம்’ 16.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
22-5-61

மகளே அன்பரசி!

“தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரில் சிலர் விடுதலை செய்யப்படுவர்” என இன்றைய வானொலிச் செய்தி கூறிற்று. தாமாக விருக்கலாமோ, தாமாக விருக்கலாமோ எனச் சிலர் எண்ணினர். தமது மனைவி, மக்களை, உறவினரை, சொந்த மண்ணைக் காண்பதில் யாருக்குத் தான் விருப்பமில்லை? சில வேளை பாராளுமன்ற உறுப்பினரை விடுத்து மற்றையோரை விடுதலை செய்யலாம் எனவும் சிலர் பேசிக் கொண்டனர். உன் அப்பாவும் சில வேளை விடுதலையடைவார்; ஓடோடி வருவார், தூக்கி அணைத்து முத்தம் விதைப்பார் என எண்ணுகிருயா? என்னமோ எனக்கு விடுதலை, நாளைய குழுவினருடன் கிடைக்கும் என என்னுல் எண்ண முடியவில்லை. ஒரு சிலர் விடுதலையடைய, மற்றவர்கள், திரும்பவும் இங்கே ‘தவம்’ செய்வதை எண்ண எனக்கு வேதனையாகவே உள்ளது. எல்லாம் நாளை தெரியும்தானே.

அன்பு! என்னுடன் இங்கே தடுப்புக் காவலில் உள்ள மற்றவர்களை இம் மடலில் அறியத் தந்து முடித்து விடலாமென எண்ணுகிறேன், தொடர்ந்து படி.

### வ. ந. நவரத்தினம்

இங்கே சில ‘தாடிகளும்’ உலாவுகின்றன. அதில் சில பழைய தாடிகள், சில புதுத் தாடிகள். பழைய தாடியைக் கொண்ட திரு. நவரத்தினம் அவர்கள் கைச்சாத்தை மட்டுமிட்டார்கள். நவரத்தினம் என்ற பெயரைக் காரணப் பெயராகத் தான் பெற்ருேர் இட்டிருக்க வேண்டும். நவரத்தினங்கள் இவரால் மாண்படைகின்றனவா? அல்லது இவர் நவரத்தினங்களால் மாண்படைகின்ருரா? இதன் பதில் என்ன? அப்பதிலே இவர். அதிகம் பேசாது மௌனமாகக் கடமையைச் செய்து வருமிவர், இங்குமப்படியே உலவுகிருர். தனது நீண்ட சங்கிலியைத் தோளில் புரட்டி விட்டபடி, தாடியைத் தடவியபடி, அவருக்கே உரித்தான நடையுடன் மேன்மாடியிலங்குமிங்கும் திரிகின்ருர். ஆங்கிலக் கதை நூல்கள் வாசிப்பதும் பழைய சில தமிழ்நூல்களைப் படிப்பதுமாக இருப்பதையும், இடைக்கிடை ‘கரம்’ அடிப்பதையும், மாலையில் கைப்பந்தாட்டமாடுவதையும் தனது பொழுது போக்குகளாகக் கொண்டுள்ளார். யார் எதைக் கேட்டாலும் பதில் கூருது, சிரித்தபடி மௌனமாயிருப்பது மூலம் தப்பி விடுகின்ருரா? அல்லது அது தான் பதிலோ தெரியவில்லை. ஆழ்ந்த அன்புள்ளமும் அமைதியாக எதையும் எண்ணிச்செய்யும் செயற்றிறனும் ஒருங்கே அமைந்த இவர், சாவகச்சேரித் தொகுதி மக்களுக்குச் செய்த சேவை குறிப்பிடக் கூடியவை. எத்தனை புதிய பாடசாலைகள்! எத்தனை ஆசிரியருக்கு வேலை!—இவை நவரத்தினம் அவர்களின் சேவைக்கு எடுத்துக் காட்டு.

எல்லோரும் மதிக்க நடக்கும் பொறுமையாளரான இவர் இப்போது நன்ருகச் சொற்பொழிவாற்றும் வன்மையும் கொண்டவராக மாறிவிட்டார். ஆரம்பகாலத்தில், முதன் முதல் பாராளுமன்றம் நுழையும் போது, ஐந்து நிமிடம் தமிழில் பேசுவதே கஷ்டமாகக் கொண்டிருந்த இவர், தற்போது அழகாக, விரல்களைக் கூட்டிக் காட்டியபடி அதிக நேரம் பேசக் கூடியவராகி விட்டார்.

இங்கே கத்தோலிக்கமதத்தவர்களுடன் சேர்ந்து வணக்கம் செய்வதைக் காண்கின்றேன். எல்லா மதத்திலும் மதிப்பும் அன்பும் கொண்டவரென்பதை இதன் மூலம் காண முடிகின்றது.

சாவகச்சேரி மக்களின் ஏகோபித்த குரலாக, ஒப்பற்ற இரத்தினமாக அமைந்து விட்ட இவர், சிறந்த ஒரு தலைவருக்குரிய தன்மைகள் கொண்டு திகழ்கின்ருர். இவர் ஒரு பட்டதாரி, அத்துடன் நியாயதுரந்தர். சாவகச்சேரிப் பிரதிநிதி என யான் கூறியா தெரிய வேண்டும்? என்றும் சாவகச்சேரிப் பிரதிநிதி யார் என மக்களைக் கேட்டால், ‘நம்ம நவம்’ தான் என்பதைப் பல முறை பலரது வாயிலிருந்தும் கேட்டுள்ளேன். இவருக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என நம்புகின்றேன்.

### வி. தர்மலிங்கம்

‘எம் கடன் பணி செய்து கிடப்பதே’ என எழுதிக் கைச்சாத்திட்டார் உடுவில் பிரதிநிதி திரு. தர்மலிங்கம் அவர்கள். அவர் உடுவில் கிராமச் சங்கத் தலைவருமாவார். குழந்தை போன்ற உள்ளமும், எதையும் எண்ணிநடக்கும் பண்பாடும் உடையவராகவுள்ளார். சிகறட், சுங்கான், சுருட்டு என்பவற்றை மாறிமாறி உபயோகிக்கும் இவர் சிலப்பதிகாரம், உமர் கயாம் பாடல்கள் என்பவற்றை சுவைத்துப் படிப்பதைக் காண்கின்றேன். கரிகாலனும் இவரும் சேர்ந்து ஆங்கிலச் சொற்களை ஏற்படுத்தும் விளையாட்டை விளையாடுவதிலும், ‘பட்மின்ரன்’ விளையாடுவதிலும் நேரம் கழிக்கின்றனர். யார் மனமும் நோக நடவாத இவர் என் அறைக்கு முன் உள்ளதால், அடிக்கடி என்னுடன் கலந்துரையாட வருவார். புதிய எண்ணங்கள் பல கொண்ட இவர், எதிர்க் கட்சியினரும் மதிக்க நடக்கும் தன்மை கொண்டவர். பாராளுமன்றப் பிரதிநிதி என்ற எண்ணமின்றி, கல்லூரி மாணவர் போலவே இங்கு உள்ளார். வழக்கறிஞருக்குரிய கடைசிப் பரீட்சைக்கும் ஆயத்தம்செய்கின்ருர். உடுவில் தொகுதி மக்களின் அபிமானம் பெற்ற இவர், என்றுமே மக்கள் மதிக்கும் பண்புடையாளராக இருப்பார் என்பது என் நம்பிக்கை. தன் தொகுதித் தன்மை, தனது தேர்தல் கால நிகழ்ச்சிகள் என்பவற்றை அடிக்கடி என்னுடன் கலந்துரையாடும் போது கூறுவார். தனது பெரிய தந்தை பி. எஸ். சுப்பிரமணியம் (டாக்டர்) மேல் நீங்காத பாசம் கொண்டு காணப்படுகிருர். எல்லாரும் போற்ற மகிழ்வாக இங்கே உள்ளார்.

### இ. மு. வி. நாகநாதன்

கைச்சாத்தை மட்டும் இட்டுத் தந்தார் நாகநாதன் அவர்கள். இவர் சிறந்த ஒரு ஆங்கில வைத்தியர். அரசியல் வாழ்வில் புகுந்து சுழலுமிவரால் தனது வைத்தியத்தை ஒழுங்காகச் செய்து கொள்ள முடியவில்லை. சிங்களத் தலைவர்களது குடும்ப நண்பராக இருக்கும் இவர், பிரதமரது குடும்ப நண்பருங் கூட. ஆனால், தமிழ் உரிமைக்காக நேரிய வழி செல்லும் இவர், அரசியல் உறுதி கருதி இரும்பு மனிதன் என அழைக்கப்படுகின்ருர். ஒவ்வொரு கணமும் அரசியல் சிந்தனையிலேயே கழிக்கும் இவர், இங்கும் பல புதிய திட்டங்களைத் திட்டுவதும், மற்றவர்களுடன் ஆலோசிப்பதுமாகவே உள்ளார். வஞ்சகம், சூது தெரியாத இவர் தமிழ் பேசுமினத்தின் மேல் கொண்டு விட்ட பற்று, சொற்களால் அளவிட முடியாதவை. எங்கள் தொகுதியாகிய நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாயுள்ள இவர் பாராளுமன்றத்தில் யாருக்கும் அஞ்சாத வீரராக ஆங்கிலத்தில் பேசும் போது சிங்கம் கர்ஜிப்பது போலவிருக்கும். பொலிசாரின் தடி முறிய அடி வாங்கிய இவர் உடம்பு முன்னைய அளவு பலமானதாயில்லை. எது வரினும் அஞ்சாது முன் செல்லும் பண்பைப் பலமுறை கண்டுள்ளேன். ஈழத்து பட்டேல் இவர்.

## புதுமை லோலன்

### ஜே. திஸவீரசிங்கம்

கைச்சாத்தை மட்டும் இட்டுத் தந்தார் மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திஸவீரசிங்கம் அவர்கள். ஆஜானுபாகு போன்ற தோற்றமும், சிரித்த முகமும் கொண்ட இவர் தமது நகரசபை உயர எத்தனையோ புதுப் பாதைகளை வகுப்பவர், நல்லவர், பண்பாளர். மட்டக்களப்பில் அறப்போர் நடக்க மிக உதவியாக அமைந்தவருள் ஒருவர்.

### க. செ. கதிரேசு

கைச்சாத்தை மட்டுமிட்டார் கதிரேசு அவர்கள். இவர் வவுனியாவைச் சேர்ந்தவர். வவுனியாப் பிரதிநிதியுடன் சேர்ந்து வவுனியாக் கச்சேரி முன்பு அறப்போர் செய்து கைதானவர் இவர். தமிழரசுக் கட்சியை ஆதரியாவிட்டாலும், தமிழ் வாழ உழைக்கும் தன்மை கொண்டவர். முயற்சி செய்து செல்வந்தரானவர். பொறுமையான இவர் சிவசிதம்பரம் மேல் நீங்காத பாசம் கொண்டு காணப்படுகின்ருர்.

### செ. ஞானசேகரம்

“தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை” என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ஞானசேகரம் அவர்கள். இவர் வவுனியாவிலுள்ள குடியிருப்பில் வாழ்பவர். தமிழரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினர். கட்சிக் கொள்கையில் நீங்காத பற்றுக் கொண்டவர். “தன் தாய் முதிய நேரமென்றும், அவருக்கு உதவி செய்ய மட்டுமே முடியவில்லை; மற்றப்படி ஒன்றுமில்லை” எனக் கூறிக்கொள்ளுமிவர், கொள்கை தவறுபவரைக் காணும்போது நக்கீரர் ஆகி விடுகின்ருர். வவுனியாவில் கட்சி வளர உழைத்தவர்களுள் ஒருவர். “தமிழரசுக் கட்சியை ஆதரியாதவர்கள்- சிந்திப்பது கிடையாதோ” என அடிக்கடி என்னைக் கேட்பார். என் அறையிலிருந்து, அரசி[illegible] கேட்டுக் கொண்டேயிருப்பார். உறுதியும் கொள்கைப் பற்றும் நிரம்பிய இவர் நன்ருக என்னோடு, இங்கே வந்த பின்பே பழகினுர். நண்பராஞர்.

### இ. வ. வில்வராசா

“வெல்க அறப்போர்! வாழ்க தமிழ் மொழி!! வாழ்க தமிழினம்!!! என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. வில்வராசா அவர்கள். இவர் வவுனியாவைச் சேர்ந்தவர்; வழக்கறிஞர். வவுனியாப் பிரதிநிதியின் அரசியல் கொள்கையைத் தமது கொள்கையாகக் கொண்டவர். இங்கு வந்த பிற்பாடு தாடி வளர்க்க ஆரம்பித்தார். சிவப்பு நிறமான இவருக்குக் கறுப்புத் தாடி கிசு கிசு என வளர்ந்துவிட்டதே! அடிக்கடி தாடியை எமது கரத்துடன் தேய்க்கிருர்; சிரிக்கிருர். பேதமற்று எல்லாருடனும் நட்புரிமையுடன் நடந்து கொள்ளுமிவர், தமிழ் உரிமை காணத் துடிக்கும் இளைஞராவர்.

### வே. த. சுப்பிரமணியம்

கைச்சாத்தை மட்டும்இட்டுத் தந்தார், திரு. சுப்பிரமணியம் அவர்கள். இவர் வவுனியா பட்டினசபை உபதலைவர். எனது அறையில் என்னருகே கட்டில் போட்டு இருந்து வருபவர். ஆகவே நன்ருக அவரைப்பற்றி இப்போது எனக்குத் தெரியும். நேர்மைக்கும், தன்பாடும் தானுமாக வாழும் பான்மைக்கும் இவர் ஒரு உதாரண புருஷர். எவ்வளவோ நட்டத்தை நாட்டுக்காக அர்ப்பணித்து விட்ட இவர், அமைதியாகவே இருக்கின்ருர். குற்றம் புரிபவர்களைக் கண்டால், இவரால் தாங்கவே முடியாது. அப்படியான நெறிநிறை தவருத உள்ளம் இவரிடம் உள்ளது. எனக்கொரு தந்தை போலவுள்ளார்.

### கு. ஐயாத்துரை

கைச்சாத்தை மட்டுமிட்டார் திரு. ஐயாத்துரை அவர்கள். இவர் வவுனியாவைச் சேர்ந்த வழக்கறிஞர். அமைதியான போக்குடன், படிப்பதிலே தன் பொழுதைக்கழிக்குமிவர், வவுனியாப் பிரதிநிதியின் அரசியல் கொள்கையை ஆதரிப்பவர். எல்லாரையும் மதித்துப் பெருமையுடன் வாழ்கின்ருர்.

### சி. ஐ. குலசேகரபிள்ளை

“துணியின்மை ஞாலத்திற்கு ஏற்றதே வேந்தன் அணியின்மைவாழும் உயிர்க்கு” என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. குலசேகரபிள்ளை. இவர் வவுனியாவைச் சேர்ந்தவர்; வவுனியாப்பிரதிநிதியின் கொள்கையாளர். வயதுக்கேற்ற அமைதியுடன், சுருட்டைப் புகைத்தபடி, கடதாசிக்கூட்டம் (Card) விளையாடுவதில் நிபுணராகவுள்ளார். இருப்பதே தெரியாது வாழ்கின்ருர்.

### சூ. மரியாம்பிள்ளை

“தமிழ் மொழி வாழ்க” என எழுதிக் கைச்சாத்தை மட்டுமிட்டார் திரு. மரியாம்பிள்ளை அவர்கள். முல்லைத்தீவு பட்டினசபைத் தலைவர் ஆகிய இவர், தன்னை ஏன் கைது செய்ததெனத் தெரியவில்லை என்கிருர். தான் அறப்போர் எதிலுமே ஈடுபடவில்லையாம். இந்த ஆட்சியாளரின் இரகசியபொலிஸ் பகுதியினரின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு இது. கடதாசிக் கூட்டம் விளையாடுவதும், கலந்துரையாடி மகிழ்வதும், வீட்டை, பிள்ளைகளை எண்ணுவதுமாகவுள்ளார்.

### ஜி. பி. வின்சென்ற்

“வாழ்க தமிழினம்—வாழ்க தமிழ் மொழி” என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. வின்சென்ற் அவர்கள். ஆசிரியர், சென்ற தேர்தலில் வவுனியாவில் தமிழரசுக் கட்சி அபேட்சகராக நின்றவர்; நல்லவர்; வஞ்சகமற்ற பிறவி; சுகயீனம் கொண்டவராக உள்ளார். மிக மெலிந்து காணப்படுகின்ருர். சாப்பிட வருவது கூடக் குறைவு. நூல்கள் வாசிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டுள்ளார்.

### மி. அருளப்புகூஞ்ஞை

“தமிழ் வாழ்க” என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. அருளப்புகூஞ்ஞை அவர்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

கிடைக்கும்

சிமிந்தி

சங்கர் பிராண்ட் (இந்தியன்)

இரும்பு சாமான்

எம். எஸ். ரவுண்ட்ஸ்

எல்லா அளவுகளிலும்

எம். எஸ். ஆங்கிள்ஸ்

எம். எஸ். பிளாட்ஸ்

கல்வனைஸ்ட் கூரை தகடுகள்

28, 30, 32 பி. டபிள்யூ. ஜி.

முள் கம்பிகள்

14 கேஜ் அன்ட் 12½ கேஜ்

டி நேச்சர்ட் ஸ்பிரிட்

கலந்து கொள்ளுங்கள்:

ஜாபர்ஜி பிரதர்ஸ்,

நிர் 161, குமார வீதி,

புறக்கோட்டை, கொழும்பு-11.

போன்: 78501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாடக விமர்சனங்கள்:

# காலத்துக் கேற்றவாறு அமைந்துள்ள 'கர்னன் போர்'

காலத்துக் கொவ்வாத கர்நாடகம், கருத்துக்குப் பொருந்தாத கலைக் கொலை, புதுமையே சிறிது மற்ற பழைய சரக்கு என்றெல்லாம் மட்டக்களப்பு நாட்டுக் கூத்தைப் பற்றிப் படித்தவர்கள், பட்டதாரிகள "நாகரீகத்தின் அவதாரங்கள்" பழித்து இழித்துக் கூறிவந்த காலமொன்றுண்டு. லத்தின் அமெரிக்க இசையிலே மூழ்கி, 'ரொக் அன்ட் ரோல்', 'ருவிஸ்ட்' போன்றவற்றைக் கைக்கொண்டு அவையே கலை என மதித்துப் போற்றுபவர்களும் நம்மிடையே இல்லாமலில்லை.

முத்தமிழில் சிறப்பான கூத்துத் தமிழ் பண்டைய தமிழகத்தில் பெரும் பேறுபெற்று வாழ்ந்திருந்தது. இக் கலையின் ஓர் அம்சமாகப் பண்டு தொட்டுத் திகழ்ந்து வந்த இன்றைய நாட்டுக் கூத்தெனக் கணிக்கப்படும் கூத்து முறை மட்டக்களப்பில் தொன்மை கெடாது வளர்ச்சியடைந்து வருகிறது. பழம்பெரும் கலைகளைப் பேணிக் காத்து வருவதில் மட்டக்களப்பு மக்களுக்குள்ள பற்று நாட்டுக் கூத்து முறையை இன்றும் பேணிப் போற்றி வருவதிலிருந்தே தெரிகிறது.

ஆரம்பத்தில் கூறப்பட்டிருப்பது போன்று ஞானமற்று, பகட்டு நாகரீகத்தில் மூழ்கியவர்கள் பலர் மலிந்துள்ள இக்காலத்திலும், மட்டக்களப்பு, நாட்டுக் கூத்தைக் கைவிடவில்லை.

## பாராட்டு

காலப் போக்கை அனுசரித்து நாட்டுக் கூத்தில் சிற்சில மாற்றங்கள் தேவைப்பட்டன. தமிழ் பேசுவோரல்லாதவர்களும் கூத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ளவும், பார்ப்போரைப் பரவசப்படுத்தவும் சில மெருகுகள் தேவைப்பட்டன. அத்தகைய பணியில் துணிந்து காலடியெடுத்துவைத்த பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தாரையும், குறிப்பாக கலாநிதி திரு. சு. வித்தியானந்தனையும் பாராட்டாமலிருக்க முடியாது.

மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்கு உயிராய் அமைவது தாளம்—தாளத்துக் கேற்ற ஆட்டம். தாளக் கட்டுக்கேற்றபடி பல பிரிவுகளுமுண்டு. அப்பிரிவுகளுக்குரிய நுணுக்கமான தாள மாற்றங்களை அனுசரிப்பதற்குப் போதுமான பயிற்சி தேவை. மட்டக்களப்புப் பகுதியில் வாழ்ந்து கூத்துக்களை அவதானித்துப் பழகியவருக்கு இது அவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்காது. அப்படிப் பழகியவர்களையும், நாட்டுக் கூத்தைப் பற்றித் தெரிந்திராதவர்களையும் ஒன்று சேர்த்து ஓர் ஒப்பற்ற கலா சிருஷ்டியை ஏற்படுத்தியுள்ளார் திரு. வித்தியானந்தன்.

## பெண்கள் பங்கு

நாட்டுக் கூத்தில் பெண்களுக்கான பாத்திரத்தையும் இதுவரை ஆண்களே புனைந்து வந்துள்ளனர். திரு. வித்தியானந்தன் தயாரித்துள்ள 'கர்னன் போரில்' பெண்களே, பெண்கள் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளனர். மட்டக்களப்பு கூத்து மேடைகளில் ஆடி அனுபவம் பெற்றவர்கள் தாளக் கட்டுகளுக்கு ஆடும்போது கடுமையான பல கட்டங்களைத் தாண்ட வேண்டியிருக்கும். அங்கங்களுக்கு அளிக்கப்படும் அப்பியாசங்கள் விபரிக்க முடியாதவை. 'கர்னன் போ'ரில் அதிக கடுமை புகுத்தப்படவில்லை. மிக மென்மைத் தாளங்கள் தான் கையாளப்பட்டுள்ளன. அதனால் 'கர்னன் போர்' அசல் நாட்டுக் கூத்தல்ல என்றும் முடிவு கட்டலாம்.

எவ்வாருயினும், நாட்டுக் கூத்தினை புது மெருகுடன் வழங்கிய பெருமையை கலாநிதி வித்தியானந்தனுக்கே வழங்க வேண்டும்.

## நடிகர்கள்

'கர்னன் போர்' நாடகத்தில் கர்னனாகத் தோன்றிய திரு. சி. மௌனகுரு, வீமனாகத் தோன்றிய திரு.ப. கனகரெத்தினம், சல்லியனாகத் தோன்றிய திரு. பொ. பேரின்பராஜா ஆகியோரிடம் முன்னரே இக் கலையில் ஈடுபட்டிருப்பதற்கான தன்மையைக் காணமுடிந்தது. கர்னனும், சல்லியனும் ரதத்தில் செல்லும் கட்டமும், கர்னன், வீமனுடன் பொருதும் கட்டமும் நாடகத்தின் உயிர் நாடிபோல் விளங்குகின்றன.

பொன்னுருவி வேடம் தாங்கும் செல்வி ஹம்சவல்லி பாத்திரத்துக்கேற்ப நடித்துள்ளார். தோழியாக வரும் செல்வி மாலதியும் அப்படியே. குந்தியாக வரும்செல்வி ஈஸ்வரநிதிக்கு சற்றுக் கூடுதலாக ஆடுவதற்கு வசதிசெய்து கொடுத்திருக்கலாம். கொடுக்கப்பட்ட வரை சிறப்புடன் செய்துள்ளார். கிருஷ்ணனாகத் தோன்றிய திரு. சு. சண்முகநாதனுக்கு நல்ல தொனி இருக்கிறது. ஆட்டத்தில் இன்னும் கொஞ்சம் பயிற்சி தேவை.

துரியோதனனாகத் தோன்றும் சு. நாகேந்திரன், பிராமணனாகத் தோன்றும் செ. விஜசித்தம்பி, தருமராகத் தோன்றும் செ. அழகரெத்தினம், அருச்சுனனாக வரும் நா. தணிகாசலம்பிள்ளை நகுலனாக வரும் கிருஷ்ணமூர்த்தி எல்லோரும் அவரவர் பாகத்தைச் சிறப்புடன் நிறைவேற்றினர். ஒப்பனை, உடை அலங்காரம், மேடை அமைப்புகள் எவற்றிலும் குறையில்லை. ஒளி அமைப்பில் கொஞ்சம் சிரத்தை காட்டியிருந்தால் நன்ருயிருந்திருக்கும்.

ஏடுபார்ப்போராக வந்து மேடையில் அலங்காரப் பொம்மைகளாக அலங்கரித்தவர்களுக்கு உள்ள பொறுமை உணர்ச்சியையும் பாராட்ட வேண்டித்தானுள்ளது.

## அண்ணாவியார்

எடுப்பாக, அடக்கமாக, சுருக்கி, சுவை கெடாமல் நாடகத்தை உருவாக்க முனைந்தவரும், மத்தளத்தில் 'கட்டுப்பாட்டு'டன் தாளம் இசைத்தவருமான அண்ணாவியார் திரு. க. செல்லையாவுக்கும் எமது பாராட்டுக்கள்.

இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று 'கர்னன் போர்' புரிய வேண்டுமென்று அவாவுறுகின்ருேம்.

—நாதன்

—

# நீ சாகக்கூடாது

வில்லனே இல்லாத கதை அமைப்பு. ஆனால் உயிரில்லை. மனப்பூர்வமாகக் காதலித்த மனைவி சாந்தியின் அகால மரணத்தால் மதிமயங்கிய வரதன் ஷாஜகானின் காதல் சின்னமான தாஜ்மகாலைக் கருத்திலிருத்தி சாந்தி நினைவுப் பள்ளியை ஏற்படுத்தி அமைதி காணுகிருன். இக் கதையில் நாடகத்துக்கு வேண்டிய திருப்பங்களெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்றுள்ள நாடக மேடைக்கு பல திருப்பங்கள் இருந்தால்தான் சோபிக்கும். ஒரே ஒரு மையத்தை வைத்துக்கொண்டே மேல் நாடு நாடுகளில் நாடகமோ, சினிமாவோ தயாரித்துப் பெயரெடுத்துவிடுவார்கள். ஆனால் நமது நாடுகளில் அத்தகைய சூழ்நிலையும், பூரண பக்குவமும் ஏற்படவில்லையாதலினுல் கூடுதலான சம்பவங்களைச் சேர்ப்பதே நல்லது.

நடிப்பைப் பொறுத்தவரை அதிகம் குறை கூறுவதற்கில்லை ஆனாலும் சில கட்டங்களில் சோபிதமற்றுவிட்டது.

முதலியாரின் மனைவியாகத் தோன்றிய செல்வி சந்திரகலாவின் முகபாவங்களையும், மற்றவர்கள் வசனம் பேசும் போது அவர் முகத்தில் ஏற்படும் பிரதிபலிப்பையும் கொண்டு அவர் நடிப்பில் அனுபவ முத்திரை இழையோடுவதை அவதானிக்க முடிந்தது. முதலியாராகத் தோன்றிய மீரா சந்தன் தன்பாகத்தைச் சிறப்புடன் செய்திருந்த போதிலும் நாடகத்தின் பல கட்டங்களிலும் ஒரே பாவ உணர்ச்சியை வெளிக் காட்டிக் கொண்டிருந்தார்.

மொத்தத்தில் நவீன கலைச் சங்கத்தின் முதல் முயற்சி அவர்களுக்கு ஒரு வெற்றி என்றே கூற வேண்டும்.

—நாதன்.

—

# வாடாமலர்

கலையா? காதலா? இதுவே நாடகக் கதையின் கருப்பொருள். இடையில் இன்றைய பிரச்சினைகள் சிலவற்றைச் சேர்த்து மூன்று மணி நேரத்திற்கு மேல் இரசிகர்களை நாடக அரங்கிலே காக்க வைப்பதற்காகக் கதையை வளர்த்துள்ளார்கள்.

கணபதிப்பிள்ளை ஏழை ஆசிரியர். அவருக்கு மூன்று பிள்ளைகள். முதல மகன் வாசு குடும்பத்திற்கு உதவாதவனுகிருன். இரண்டாம் மகன் இராமு அரைப் பைத்தியம். மகள் சாந்தி சிறந்தவொரு நாட்டிய கலாராணி.

கருப்பையாப்பிள்ளை தோட்ட முதலாளி. அவர் மகன் சங்கர் ஒரு மேல் நாட்டுக் கலைப்பைத்தியம் சாந்தியின் அழகில் சங்கர் மயங்கி அவளைக் காதலிக்கிருன். மேடையில் நாட்டியமாடக் கூடாது என்பதில் காதல் முறிகிறது. சாந்தி கலையுலகின் வாடாமலராகிருள்.

கணபதிப்பிள்ளையாக வரும் என். பி. தருமலிங்கம் சில இடங்களில் உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதாக நினைத்துக் கொண்டு தேவையில்லாமல் கழுத்தை முறிக்கிருர். இராமு என்ற பாத்திரத்தை நகைச்சுவைக்காகச் சேர்த்த போதிலும் அச்சுவையைக் காணவே முடியவில்லை. வாசுவாக வரும் விமலநாதன், நாட்டிய ஆசிரியராக வரும் பழுகாமம் ஞானமணியம் ஆகிய இருவரும பரவாயில்லை-

உமாவாகவரும் சாந்தா குணசிங்கம் சிலகுறைகள் இருந்த போதும், பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளார்.

நாட்டிய நிகழ்ச்சி நாடகத்தை விழுங்கிவிட்டது. புதுமை இல்லாவிட்டாலும், பழமையாகுதல் இருந்திருக்கக்கூடாதா?

—சங்கர்

# கரும்பு இனிக்க சீனி உரம்?

கரும்பு இனிப்பாக இருக்கவேண்டுமென்ருல் கரும்பு சிறு பயிராகவிருக்கும்போது பாத்தியில் சீனி போட்டு வளர்க்க வேண்டுமென்று, யாரோ அறிவுரை கூறியுள்ளனர். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ராகினி தனது தோட்டத்தில் வளர்ந்த கரும்புப் பயிர்களுக்கு சீனியை உரமாக இட்டாராம்.

எதிர்பார்த்ததற்கு எதிர்ப்பலன் தான் அவருக்குக் கிடைத்ததாம். சீனியை உணவாக்க எறும்புகள் படையெடுத்தன. சீனியை முடிவெடுத்த பின்னர், கரும்பையே சாட முனைந்துவிட்டனவாம். கரும்பின் பல பாகங்களையும் அரித்து விட்டதனுல், பயிர் பாழாய்ப் போய் விட்டது.

## ரோஜாச் செடிக்குச் 'சென்ட்'

கரும்புக்குக் கையாண்ட ஆராய்ச்சி போதாதென்று ரோஜாக்களிலும் ராகினி சிரத்தை செலுத்தி வருகிருராம். தனது வீட்டில் வளரும் ரோஜாச் செடிகளுக்கு ஊசி மூலம் மருந்து குத்துகிருராம்.

ரோஜா மலர்களுக்கு அதிகமான வாசனை இல்லையாம். அவற்றுக்கு வாசனையை யூட்ட நல்ல வாசனைச் 'சென்டு'களைக் கலந்து மருந்தூட்டும் ஊசிமூலம் செடிகளில் பாய்ச்சி வருகிருராம்.



'கர்னன் போர்' நாட்டுக் கூத்தில் பொன்னுருவியாகத் தோன்றும் செல்வி பொ. ஹம்சவல்லி, தோழியாகத் தோன்றும் செல்வி ந. மாலதி, கர்னனாக நடிக்கும் திரு சி. மௌன குரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

காலிமுகக் கடற்கரையில் கடுந்தவம் புரியும் போது ஆட்சி பீடத்தின் காலில் மிதிபட்டு, உதைபட்டு இரத்தம் சிந்தியது... மழையிலும் வெயிலிலும், பனியிலும், இருளிலும் கால் நோக நோகக் கண் துஞ்சாது திருமலை யாத்திரையை மேற்கொண்டது... தமிழை ஒழிக்கும் ஏவாயுதமாக முளைத்த 'சிறி'யை அகற்றத் தொடுத்த அறப்போரில் சிறையில் அடைக்கப்பட்டது! அத்தனை நிகழ்ச்சிகளும் அவன் முன் விரிந்து உரோமாஞ்சனத்தை ஏற்படுத்தின.

சன்னதம் கொண்டவனைப் போலத் திமிறி எழுந்தான் சுந்தரம்.

"ம்... அம்மா... ஐயோ... ம்ங்!"

மனைவியின் வேதனை ஓலம் நாராசமாகக் கேட்டது அவனுக்கு.

"தலைவரா?...! மனைவியா?...!. தலைவரா?...! மனைவியா?...!" கேள்விகள் மாறி மாறிப் பூதாகாரமாக எழுந்து அவனைக் கொன்றன—'தங்கத்தின் வேதனை ஒலி தலைவரைக் காட்டிக் கொடுத்துவிட்டால்!" வேதனையில் துடித்துக் கொண்டிருந்த மனைவிக்குச் சமீபமாக நெருங்கிய சுந்தரம். இமைக்கும் நேரத்தில் ஒரு காரியம் செய்தான்......!

பதைக்கப் பதைக்கத் தங்கத்தின் கழுத்தை நெரித்து விட்டான்!

அந்த வினடியில் எழுந்த ஒருவித ஈனக் குரலின் ஒலி, நடந்து கொண்டிருந்த தலைவரைச் சுந்தரத்தின பக்கம் திரும்பச் செய்தது.

நொடிப் பொழுதில் அங்கு நடந்து முடிந்த கோரக் காட்சியைக் கண்டு அப்படியே ஸ்தம்பித்து விட்டார் தலைவா.

சுந்தரத்தைக் கலவரப் படுத்திக் கொண்டிருந்த தங்கத்தின் முனங்கலும் நின்றது.

அடுத்த பணி...! தலைவரைத் தடுத்தி நிறுத்தி அவரைக் காப்பாற்றுவது.

பாய்ந்து சென்று தலைவரை நிறுத்தினன் சுந்தரம்

"சுந்தரம்... நீர் செய்த காரியத்துக்கு அர்த்தமென்ன?" தலைவர் சற்றுக் கடுமையான குரலில்நிதானமாகக் கேட்டார். சுந்தரத்தின் மௌனத்தைத் தலைவரின் கேள்வி கலைக்கவில்லை. தலைவரை அழைத்துக் கொண்டு சுந்தரம் தனது மனைவி கிடந்த இடத்துக்கு வருவதற்குள்......

"வீல்... வீல்... என்று குழந்தை ஒன்றின் சத்தம்.

தங்கத்தின் இறுதி மூச்சில் ஒரு சிசு தியாகதத்தின் முத்திரையாக அவளின் அருகே நிலத்தில் கிடந்தது. சுந்தரத்தின் தலையில் அந்தக் காட்டு மரங்கள் 'சட சட' என்று முறிந்து விழுவது போன்ற ஒரு அதிர்ச்சி!

மனைவியின் முனங்கல் தலைவரைக் காட்டிக் கொடுத்து விடுமேயென்று அஞ்சி அவளைக் கொன்று அமைதியை ஏற்படுதத முனைய-விதி வேறு வழியில் விளையாடி விட்டதே!

தன் இரத்தமே தன்னைத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டதா?

'பேசாமல் கத்தும் அச்சிசுவையும் கொன்றுவிட்டால்...?' அவன் எண்ணியதைச் செயலாக்குவதற்குள் இறைச்சியைக் கௌவும் வெறி பிடித்த வேட்டை நாய் போன்று உறுமிக் கொண்டு வந்து நின்றது இராணுவ 'ஜீப்'.

தலைவர் வதனத்தில் சாந்தி படர 'ஜீப்'பில் ஏறினர் சுந்தரம் அவரைத் தொடர்ந்தான்...

குழந்தையின் அழுகைக் குரலில் தியாக நாதம் கேட்டது.

# முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு உழைத்த மேதை

## தர்கா நகரில் ஜாயா நினைவு

"கல்வித்துறையில் மிகவும் பிற்போக்கான நிலையில், தேடுவாரற்றுக் கிடந்த முஸ்லிம் சமுதாயத்தை, தமது பெரு முயற்சியால் தட்டி எழுப்பி, கல்வித்துறையில் மிகப் பெரிய முன்னேற்றத்திற்கு வழிகோலியுவர் காலஞ் சென்ற டாக்டர் டி. பி. ஜாயா அவர்கள். அந்தப் பெரியார் செய்த அரும் பெரும் சேவைகளையும், கட்டி எழுப்பிய மாபெரும் கல்விக் களஞ்சியங்களையும், அவராலேயே முன்னேற்றம் அடைந்த ஒரு தனி மனிதனை பதியுத்தின் மஹ்மூத் அழித்துவிடத் திட்டந் தீட்டிச் செயலாற்றி வருவதைக் காணும் முஸ்லிம்களாகிய நம் கண்ணை மூடிக்கொண்டிருப்பதா?

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை 4 ம் திகதி பி. ப. 4 மணிக்கு தர்கா நகரில் நடைபெற்ற டாக்டர் டி.பி. ஜாயா அவர்களின் ஞாபகார்த்த கூட்டத்தில் பேசிய போது, ஓய்வு பெற்ற உப சொலிசிட்டர்—ஜெனரல் ஜனுப் ஏ. ஸி. எம். அமீர குறிப்பிட்டார். இக்கூட்டத்திற்கு அழுத்காமம் ஸாஹிருக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் ஜனுப் எம். எஸ். எம். ஷாபி மரைக்கார் தலைமை வகித்தார். தொடந்து மழை பெய்து கொண்டிருந்த போதும்கூட பெருவாரியான மக்கள் திரண்டிருந்தனர்.

ஜனுப் மஷூர் மவ்லானு பேசுகையில், "நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் பிறந்துகொண்டே இருக்கின்றனர். அதேபோன்று இன்னும் ஆயிரக்கணக்கான மககள இறந்து கொண்டும் இருக்கின்றனர். இவர்கள் எல்லோரைப் பற்றியும் நாம் சிந்திப்பது கிடையாது. சிலரை மட்டும் தெரிந்தெடுத்து அவர்களை மட்டும் ஞாபகப்படுத்துகிறோம் என்றல் தெரிந்தெடுக்கப்பட்டவர் ஒரு உத்தமராகவோ, உதாரண புருஷராகவோ, தியாகியாகவோ அல்லது மனிதருள் மாணிக்கமாகவோதான் இருக்கவேண்டும். அந்த வரிசையில் சேர்ந்த ஒருவர்தான் காலஞ்சென்ற டாக்டர் டி. பி. ஜாயா அவர்கள்.

அகில இலங்கை முஸ்லீங்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவும், முஸ்லிம் கல்வியின் முன்னேடியாகவும், ஸாஹிருக்கல்லூரிகளின் பிதாவாகவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அரசியல் ஞானியாகவும், நல் மதிப்புப்பெற்ற ஒரு இராஜதந்திரியாகவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடங்கப்பட்ட புனித தலமான மதீனவில் அடங்கப்பட்ட பாக்கியம் பெற்றுப் பெருமை பெற்றவர் எனக் கணிக்கப்படும் இவரது சேவைக்கும் ஆக்க வேலைகளுக்கும் அழிவு உண்டுபண்ணக்கூடிய "அபூ ஜஹீல்" கூட்டம் எமது முஸ்லிம்களிடைய உலவுவதைக்கண்டு நாம் வெட்கப்படவேண்டும். அவர் இன்றைக்கு உயிரோடு இருப்பாரென்றல் இன்று அவரது ஆக்கங்களாகிய ஸாஹிராக் கல்லூரிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நிலை கண்டு கண்ணீர்தான் விடுவார்.

இன்று வாழும் முஸ்லிம் சமுதாயம் காலஞ்சென்ற பெரியாருக்கு ஏதாவது பிரதி உபகாரம் செய்வதென்றல் அது அவரது ஞாபகத்தை சிறப்பாக முஸ்லிம்கள் மனதிலிருந்தும், பொதுவாக எல்லோர் மனதிலிருந்தும் மறையாது, அழியாது பார்த்துக்கொள்வதாலேயேதான் முடியும். அகம்பாவம் பிடித்து அலையும் ஆணவக்காரருக்கோ அல்லது வீண் வம்பு பேசும் கையாலாகாதவர்களுக்கோ அஞ்சி எமது கடமையைச் செய்ய நாம் தவறக்கூடாது. ஆகவே கொழும்பு ஸாஹிருக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் திட்டமிட்டுள்ள ஜாயா ஞாபகார்த்தக் கட்டட நிதிக்கு அள்ளிக் கொடுக்க முடிந்தவர் அள்ளிக் கொடுத்தும், கிள்ளிக் கொடுத்தும் உதவும்படி வேண்டிக் கொள்கிறேம்— என்று ஜனுப் மவ்லானு தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

இதைத் தொடர்ந்து பேசிய டாக்டர் எம். ஸி. எம். கலீல் அவர்கள் முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை இல்லாமலாக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கமிஷன் செய்துள்ள சிபார்சை வன்மையாகக் கண்டித்தார். முஸ்லிம்களுடைய கலை, கலாச்சாரப், பண்பாடு, மதம் ஆகியவை தனித் தன்மையுடையன வென்றும் அவை வளர அவர்களுக்கென தனிக் கல்லூரிகளும், தனிக் கலாசாலைகளும் அமைய வேண்டுமென்றும் காலஞ்சென்ற ஜாயா அவர்களும் இன்னும் சிலரும் பாடுபட்டபடியால்தான் முஸ்லிம் பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. இவைகளை இல்லாமலாக்க எந்த பதியுத்தினுக்கோ அல்லது எந்தக் குழுவுக்குமோ உரிமை கிடையாது என்று உணர்ச்சிததும்பக் கூறினர்.

ஜனுப்களான ஏ. செய்யது அஹமத் (நியாயதுரந்தரர்) பாக்கீர் மாக்கார், எம். எஸ். அபூபக்கர், எம். எஸ். றசாக் ஆகியோரும் பேசினர்.

கூட்ட முடிவில் வரவேற்புக்குழுத் தலைவர் டாக்டர் நஸீர் அவர்களால் அளிக்கப்பட்ட விருந்தில் பேச்சாளர்களும் மற்றேரும் கலந்து கொண்டனர்.

# அன்பு மகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னர் மேற்கில் கிராமச் சங்க உப தலைவராயுள்ள இவர், மன்னர் அறப்போருக்கு மிகஉதவியாக அமைந்தவர். மிக மிக நல்ல இவர், தன் அறையும் தானுமாகவுள்ளார்.

மகளே! எமது உறவினராக ஒரே குடும்பத்தவராக மாறிவிட்ட தடுப்புக்காவல் தியாகிகளைப் பற்றி எழுத மடல் 'அனுமார் வால்' ஆகின்றது. மீதி அடுத்த மடலில்.—

உனது தந்தை,
புதுமைலோலன்.

(தொடரும்)

# முஸ்லிம்களுக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதைக் காண்கிறேம். முஸ்லிம்களுக்கு தனிக்கலாச்சாரம், வாழ்க்கை முறை இருப்பதனல் இந்நிலை நமக்கு அவசியமாய் இருக்கிறது.

இன்று ஏராளமான முஸ்லிம் இலக்கியங்கள் தமிழ் மொழியில் இருப்பதையும், அதை மாணவ மாணவிகட்கு ஊட்டுவதற்கு முஸ்லிம் ஆசிரியர்கள் அவசியமென்பதையும் யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. ஆகையால் முஸ்லிம்களுக்கான தனி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், பாடசாலைகள் அவசியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதே கொள்கை நிலைத்து இருக்க வேண்டுமென்பது தான் இலங்கை முஸ்லிம்களின் ஆசை. இப்படி இருக்கக் கூடாது என்பதனல் தான் கல்வி விசாரணைக் குழு மொழிவாரி அமைப்பைச் சிபார்சு செய்கிறது. இச் சிபார்சு படுபாதகமானது என்பது தான் முஸ்லிம்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

ஆகவே கல்வி விசாரணைக் குழுவின் சிபார்சு உண்மையில் முஸ்லிம் பயிற்சிக் கல்லூரிகளை மொழிவாரி அடிப்படையில் பிரிக்க வேண்டுமென்றிருந்தால், அப்படிச் செய்வதனல் முஸ்லிம்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கத்திற்கு தாழ்மையோடு எடுத்துக் காட்டி இத் தவறை நீக்குவதில் முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்தவர்களும், செனட்டர்களும், தலைவர்களும் முழு முயற்சி எடுக்க வேண்டும்.

# மசோதாவை முறியடிக்க....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆபத்திலிருந்து மலையக மக்களைப் பாதுகாக்க காங்கிரசுகளும், இதர தோட்டத் தொழிற் சங்கங்களும், தலைவர்களும் முன் வருவார்களா என்பதுதான் கேள்வி. நிச்சயமாக வர மாட்டார்கள் என்று துணிந்து கூறலாம். இதுவரை அவர்கள் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து வந்ததே அதற்குச் சான்று.

மலைநாட்டில் ஆங்காங்கு இரண்டொரு கூட்டங்களைப் போட்டு மசோதாவைக்கண்டித்துப் பேசுவதோடு அவர்களின் சேவை முடிந்துவிடும்.

இதர எல்லாப் பிரச்சினைகளிலும் அவர்கள் இதே முறையைத்தான் கையாண்டு வந்துள்ளார்கள்.

இன்று மலையக மக்கள் நாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதும் அவர்களால் தானே.

ஆகவே மலை நாட்டுத் தமிழ் மக்களை விழுங்க வரும் தேசியப்பதிவு மசோதாவை எதிர்த்து முறியடிப்பதற்கு மலையக மக்களுக்கு துணிச்சல் மிகுந்த, போராட்டத்தின் மத்தியிலே சரணுகதியடையாத, பதவி பவிசுகளுக்காகவும், வர்த்தகச் சலுகைகளுக்காகவும் மக்களைக்காட்டிக் கொடுக்காத, உரிமைகள் கிடைக்கும்வரை உறுதியுடன் முன்னணி தாங்கக் கூடிய, அடக்குமுறைகட்கு அஞ்சாத ஒரு தலை சிறந்த தலைமை மலைநாட்டு மக்களுக்கு இன்று அவசரமாகததேவைப்படுகிறது.

அத்தலைமை அரசியற் தலைமை, தொழிற்சங்கத் தலைமை என இரு பிரிவாக இயங்கவேண்டும். இன்றுஇத் தகைய தலைமை அளிக்கக் கூடிய ஒரே ஸ்தாபனம் தமிழரசுக்கட்சியொன்றே.

இந்தத் தலைமை அரசியற் துறையிலும், தொழிற் சங்கத்துறையிலும் மலைநாட்டு மக்களுக்கு வழிகாட்டி, அவர்களின் கஷ்டங்களைப் போக்கி, இழந்த உரிமைகளை மீண்டும் பெற அவர்களைச் சரியான பாதையில் வழி நடத்துமென்று திடமாக நம்புகின்றேம்.

# வியர்வையைக் குருதியா....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போய்விடுவர். காட்டான் கல்வி கற்றல் தலைமைப் பதவிகளும், மெருகும் குலைக்கபபடும் என்ற பீதிபோலும். கல்வி பெற்றல் மந்தைக் கூட்டங்களாக மதிக்கப்படுபவர்கள் மனிதர்களாக மாறிவிட்டால் வீணர்களை விரட்டி விடுவார்கள் என்ற பயம்!

இந்த நிலையில் தேசியக் கல்வி கமிஷன் சிங்களத்தை தோட்டப் பாடசாலைகளில் புகுத்தச் சிபார்சு செய்திருக்கிறது. தாய் மொழியில் பயில வழிஇல்லாதவர்களுக்குச் சிங்களம் திணிக்கப்பட இருக்கிறதே? இந்த கொடுமையைக் கண்டிக்க வக்கில்லை- செஞ்சட்டை வீரர்களுக்கு, காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு.

இவர்களை எல்லாம் தொழிற் தலைவர்கள் என்று இன்னும் மக்கள் மதிக்கிறர்கள். கியூபாவில் புகைந்தால், காலிமுகக் கடற்கரையில் வாளியும் கையுமாக இருப்பார்கள். மொஸ்கோவில் மொட்டை அடித்தால் மொறட்டுவாவில் கமண்டலம் தயார் பண்ணுவார்கள். ஆனல் ஈழத்தில் இதயமற்ற செய்கைகளைக் கண்டிக்க மறந்து விடுவார்கள். இது முற்போக்கு!

## தொழில்

மொழியில்லை நமக்கு, நாடில்லை எமக்கு. தொழிலும் இனிமேல் கிடைப்பது குதிரைக் கொம்புதான். தேசிய மயக் கொள்கை குதறப் போகிறது. படிப்படியாகத் திட்டமிட்ட சதிகளால் மலையகத்து மக்களைச் சூறை ஆடுகிறது மக்கள் அரசாங்கம்.

ஈழத்து முற்போக்குச் சக்திகள் வாளாவிருக்கின்றன. பசவிப்பித்து தலைக்கேறி பிளவு பட்டிருக்கிறது காங்கிரசுகள். பெரும்பான்மை ஜனநாயகத்தில் சிறுபான்மை மக்களைத் திட்டமிட்டுச் சாகடிப்பது ஒரு விதியாக அமைகிறது போலும்.

மலைநாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்கத் தி. மு. க. உதயமாகியது. அதற்கும் தடை. இனி எங்கள் தலைவிதியை நிர்ணயிக்க ஈழத்தில் ஒருவரால்தான், ஒரு கட்சியால்தான் முடியும். அந்த ஒருவர்தான் தன்மானத் தந்தை, தமிழ் மறவன் செல்வநாயகம். மலையகத்தில் வாழும் பல்லாயிரக் கணக்கானவரின் இதயத்தை ஈர்க்கிறது தமிழரசுக்கட்சி. தமிழரசுக்கட்சியை உள்ளன்போடு வரவேற்கிறேம். அந்தக் கட்சிக்கு எமது ஆதரவை நல்குவோம். நில, குடி, தொழில், மொழியுரிமைகள் எல்லாமே இணைப்பாட்சியில் உருவாகிவிடும் என்பதில் ஐயமில்லை. ஈழத்தில் நாமும், தலைநிமிர்ந்து தன்மானத்துடன்வாழ முடியும், திரு. செல்வநாயகம் தலைமையின் கீழ் எங்களை அந்தப் பெருமகன் ஏமாற்றவே மாட்டார்.

# தமிழரசுக்கட்சி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த மதத்தவர்களுக்கு வேலை கொடுக்க முடியாத அரசாங்கம் புதிதாகச் சேரப் போகிறவர்களுக்கு எதுவும் செய்து விட முடியாது. அரசாங்கம் தரும் சில சலுகைகளுக்காக தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைக்க நாம் முயலக் கூடாது. கிராமங்கள் தோறும் நமது பண்டைய கலாச்சாரத்தை பாதுகாக்கக்கூடிய நாடகக் கலையைப் பேணி வளர்ப்பவர்களில் சிறுபான்மைத் தமிழர்கள் முதன்மை வகிக்கின்றனர்-எனவே தன்மானமுள்ள தமிழர்களாக நாம் வாழ்வதோடு, தேனினுமினிய எமது தாய் மொழியைப் பாதுகாக்கும் பணியிலேயும் நாம் முன்னிற்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பகுதிநேர வேலையும் அமெரிக்க மாணவரும்

செலவுகள் ஏறிக் கொண்டு போகின்றன. கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியர் தொகை கூடிக் கொண்டு போகிறது. திறமையுள்ள மாணவர்கள் ஏழைகளாக இருப்பினும், கற்க வேண்டுமென கல்லூரி அதிகாரிகள் விரும்புகின்றனர். எனவே மாணவர்கள் பகுதி நேர வேலை செய்து படிக்கவேண்டியிருக்கிறது.

டெக்ஸாஸ் மாநிலத்தில் டல்லாங் நகரில் தென் மெதடிஸ்ட் பல்கலைக்கழகத்தில் ஜோன் ரேப், அவருடைய தம்பி டொனல்ட் ஆகியோர் இருவரும் தமது தந்தையிடம் ஒரு காசும் பெருமல், தாமே வேலை செய்து சம்பாதித்து, கல்லூரிக்கல்வியை முடித்திருக்கின்றனர். ஜோன் ஒரு கம்பெனியில் வேலை செய்து மாதத்திற்கு 250 டாலரும், டொனல்ட் ஒரு பெரியகடையில் வேலை செய்து ஆண்டுக்கு 2,000 டாலரும் சம்பாதிக்கின்றனர்.

லாஸ் ஒஞ்செல்ஸில் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் முக்காற்பங்கினர் ஏதேனும் பகுதி நேர வேலை செய்கின்றனர். ஆண்களில் அநேகர் தங்களுக்கு ஏற்படும் செலவில் பாதியை வேலை செய்து சம்பாதித்து விடுகின்றனர்.

கட்டுரைகளைத் திருத்துல்தல், ஆய்வுகூடங்களில் ஆராய்ச்சி நடாத்துதல்,முதலிய வேலைகளைச் செய்யும் மாணவர்களும் உண்டு. கல்லறைக் குழிகள் வெட்டுதல் போன்ற வேலைகளைச் செய்பவர்களும் உண்டு. இவ்வாறு அமெரிக்க கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோர் படிப்புச் செலவுக்காகப்பற்பல பகுதி நேர வேலைகளைச் செய்கின்றனர்.

(முற்றும்)

அடுத்த வாரம்
ஆரம்பமாகிறது!

மட்டுநகர்
மாஸ்டர் சிவலிங்கம்
வரையும்
குட்டி மர்மத்
தொடர்கதை

**பயங்கரக் கூரடி!**

### உங்கள் சிந்தனைக்கு

1. டெலிவிஷனை முதலில் கண்டு பிடித்தவர் யார்?
2. நோபல் பரிசு பெற்ற முதல் தமிழர் யார்?
3. சினிமா புரொஜெக்டர், எலெக்றிக் பல்ப் இவற்றைக் கண்டு பிடித்தவர் யார்?
4. குளொராபாரத்தைத் தயாரித்தவர் யார்?
5. கதிர் வீசும் பொருட்களைக் கண்டு பிடித்தவர் யார்?

தொகுத்தவர்:
எஸ். பூரணி, சாவகச்சேரி.

(விடைகள்
அடுத்த வாரம்)

### உயர்ந்த மரம்

உலகிலுள்ள மரங்கள் யாவற்றிலும் மிகவும் உயரமான மரம் கடலில் இருக்கிறது. நிலத்திலுள்ள மிக உயர்ந்த மரம் "இசு கலிப்ரஸ்" என்ற பெயருடையது. இது சுமார் 500 அடி உயரமுள்ளது. கடலிலுள்ள மிக உயரமான மரம் வட அமெரிக்காவில் இருக்கிறது. இது சுமார் 600 அடி உயரமுடையதென்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

### சூட்டால் சுருங்கும் உலோகம்

உலோகங்கள் எல்லாம் சூட்டினுல் விரிவடைகின்றன. ஆகுல் "பொலோனியம்" என்ற உலோகம் மட்டும் சூட்டினுல் சுருங்குகிறது.



இரண்டாவது எலிசபெத் ராணியாரின் இளைய மகன் இளவரசன் அன்ட்ரு அக மகிழ, முகமலர சிரிக்கின்றான்.

**அன்புள்ள மருமக்களே!**

அடுத்த இதழ் சீன இந்தியா மீது நடாத்தி வரும் ஆக்கிரமிப்புக்கெதிராக வெளிவருகிறது. இவ் விசேஷ இதழில், நீங்களும் சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்து, கட்டுரை, கவிதைகள் எழுதி அனுப்ப வேண்டுமென விழைகின்றேன்.

இதை வாசித்ததுமே எழுத உட்கார்ந்து விடுங்கள். தாமதம் வேண்டாம். செவ்வாய்க்கிழமைக்கு (13—11—62) முன் கட்டுரைகள் அனுப்பப்பட வேண்டும்.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

### சூரியனுக்குப் போவோமா?

மணிக்கு 400 மைல் வேகத்தில் ஓடும் 'ஜெட்' விமானத்தில் இரவு பகலாகப் பறந்தால் சூரியனை அடைவதற்கு 26 வருடங்கள் ஆகுமாம்!

## வளர்மதி புதிய மருமக்கள்

3669 மார்க்கோனி லியோன், பதுளை.

3670 ச. துரைசிங்கம், துணுக்காய்.

3671 க. வீரவாகு, கரவெட்டி.

3672 சி. சிவஞானம், கிளிநொச்சி.

### கொடிய விஷம்

உலகில் உள்ள மிகக் கொடிய விஷம் "பொட்டுயிலின்" என்னும் திராவகமாகும். இதில் ஒரு தேக்கரண்டி யளவால் முழு உலகிலுமுள்ள உயிர்களைக் கொல்ல முடியும்.

## நீர்வேலி

எனது கிராமம்

(கு. தியாகராஜ சர்மா)

யாழ் நகரிலே பல்வளமும் பெற்றுப் பல்லோராலும் போற்றப் படும் கிராமம் நீர்வேலி. சைவமும்,தமிழும்தழைத் தோங்கி இருக்குமிடங்களில் இச்சிறு கிராமமும் ஒன்ருக விளங்குகின்றது.

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" எனும் ஆன்ருேர் வாக்கிற்கமைய உழுதுண்டு வாழும் வாழ்வே இவ்வூர்ப் பெரும்பான்மையான மக்களின் குறிக்கோளாகும். இக் கிராமத்தின் செழிப்புமிகு செம்மண், தோட்டச் செய்கைக்குப் பெரிதும் உவப்பாய் விளங்குகின்றது. அதனுற்ருன் நம் ஈழ நாட்டிலேயே வாழை, வெண்காயம், கிழங்கு வகை ஆதியவற்றைப் பெருமளவாக உற்பத்தி செய்து பிற கிராமங்கட்கும் கொடுத்துப் பெரும் செல்வம் பெற்று விளங்குகின்றது நீர்வை.

கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம் அவர்களை என்றும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் நீர்வேலி வாழைக்குலைச் சங்கம் நாடோறும் இக்கிராமத்திலிருந்து ஆயிரக்கணக்கான வாழைக்குலைகளை வெளியனுப்பி வைக்கின்றது. மேலும் வெங்காயச் சங்கம், புகையிலைச் சங்கம் ஆதியவற்றின் மூலமும் இக்கிராமம் பெரும் செல்வம் ஈட்டுகின்றது. அன்றியும் யாழ்ப்பாணத்திலேயே சிறந்ததாக விளங்கும் காமாட்சியம்பாள் இரும்புக் கைத்தொழிற் சங்கமும், பாலர் பகல் விடுதியும நீர்வையின் சிறப்பை மேலும் ஒளிரும்படி செய்கின்றன எனலாம்.

இவ்விதமாகப் பல வளமும் மிக்கதாக விளங்கும் நீர்வேலியில் கல்விக்கூடம் ஒன்றும், நூல் நிலையங்களும், பழமை மிகு ஆலயங்களும் சிறந்தொளிர்கின்றன. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் பல வெளிநாட்டுப் பெரியார்களும் நீர்வேலியின் சிறப்பைக் காணத் தவறுவதில்லை. இத்தகு செல்வமுடைய கிராமத்திலே சில காலங்களில் அரசினர் வெண்காயம், புகையிலை ஆதியவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் தடைவிதிப்பதனுல் மக்கள் கஷ்டப்பட வேண்டியும் நேரிடுகின்றது.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப் பத்திரம்**

இல. 1

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

____________________ ____________________

பெற்ருேர் அல்லது
ஆசிரியர் கையொப்பம்

கையொப்பம்

## கன்னித் தமிழன் கதை கேளு....!

—"அக்கரை மாணிக்கம்"—

அண்ணு, அண்ணு, கதை சொல்லு!
அழகாய் நல்ல கதை சொல்லு!
கண்ணு, கண்ணு, கதை கேளு!
கன்னித் தமிழன் கதை கேளு!

முன்னர் உலகை முறையோடு
மூன்று தமிழர் அரசாண்டார்
அன்னுர் பெருமை அவனியெலாம்
அறியும்; நீயும் அறிவாயோ?

அண்ணு மன்னர் பெயரென்ன?
அவர்கள் ஆண்ட நாடென்ன?
பாண்டிய சேர சோழர்களாம்
பாரினை ஆண்ட மூவேந்தர்!

சோறு மணக்கும் சோணுடு;
சோழர்களாண்ட நன்னுடு,
ஆறு மணக்கும் அருள்நாடு;
சேரர்களாண்ட வளநாடு!

பல் வளங் கொழிக்கு மொருநாடு
பாண்டியர் ராண்ட திருநாடு!
இல்லையே இந்த வையத்தில்
இவர்கள் பெருமை அறியாதார்!

இயலும், இசையும், நாடகமும்
இணைத்து வளர்த்தார் இம்மூவர்
பயிலும் நல்ல கலைகளையும்
பண்புடன் காத்த மன்னவரிவர்!

ஈதலும், இரத்தலும் தெரியாது
ஏய்த்தலும், களவும் புரியாது!
காதலும், கொடையும் நிறைந்திருக்கும்
கடமையும், வீரமும் சிறந்திருக்கும்!

சாதியும், மதமும் கிடையாது!
சமரசம் எங்கும் குறையாது!
நீதியும் நேர்மையும் நிறைந்திருக்கும்
நெஞ்சில் கருணை சுரந்திருக்கும்!

ஆதலால் கண்ணு இவர்போல
அகிலம் போற்ற நீ வாழ;
போதனையாகும் இது உனக்கு(ப்)
போய் வா...! அம்மா தேடிடுவாள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கல்வி விசாரணைக் குழு முடிவை முஸ்லிம்கள் எதிர்க்க வேண்டும்

கல்வி விசாரணைக் குழு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை முஸ்லிம் கலாச்சாரத்தையும், கல்வி முறையையும், பண்பாட்டையும் குழிதோண்டிப் புதைப்பதாகவுள்ளது. இம்முடிவை முஸ்லிம் சமுதாயம் திரண்டு எதிர்ப்பது முக்கிய கடமையாகும். இக்கல்விவிசாரணைக் குழுவின் முடிவை எதிர்த்து அறிக்கைவெளியிட்ட தமிழரசுக்கட்சியையும், முஸ்லிம் எம். பிக்களையும் தம்பலகாமம் தமிழ் பேசும் வாலிப முன்னணியின் செயலவை பாராட்டுகிறது.

அண்மையில் தம்பலகாமத்தில் கூடிய தமிழ்பேசும் வாலிப முன்னணி செயலவை மேற்கண்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

இவ்வவையால் மேலும் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இவற்றின் நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மூதூர் இரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மூதூர் முதலாவது எம். பி. ஜனுப் எம். ஈ எச். முகம்மதலி, இக்கோரிக்கைகளையிட்டுத் தாம் முழுக் கவனமெடுப்பதாக பதிலளித்துள்ளார்.

### தீர்மானங்கள்

(1) தம்பலகமம் திருகோணமலைக்கிடையே நடைபெறும்பஸ் சேவைபடுமோசமான நிலையில் இருப்பதால், பிரயாணிகள் அலுவல்கள் நிமித்தம் குறித்த நேரத்தில் நகரத்துக்குப் "போய்த்திரும்ப முடியாமல்" இருக்கிறது. எனவே திருமலைக்கும் தம்பலகமத்திற்குமிடையே அரை மணிக்கு ஒரு பஸ் ஓடக் கூடியதாக ஒரு தனி பஸ் - சேவையை ஆரம்பித்து வைக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(2) தம்பலகமத்தில் புதிதாக பஸ் நிலையம் அமைக்கப்படவிருக்கும் இடத்தில் ஆண்-பெண்களுக்கென பொதுசன மலசல கூடங்களை அமைக்க ஆவனசெய்யுமாறு வேண்டுகிறோம்.

(3) கிண்ணியா மக்கள் பஸ் ஏறும்இடமான நாலாங் கட்டையில் பிரயாணிகள் தங்குதவற்கு இடமின்மையால்பிரயாணிகள் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் கஷ்டமுறுகின்றனர். எனவே இவ்விடத்தில் பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு மடம் ஒன்றை அமைக்க ஆக வேண்டியவைகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—

### புங்குடுதீவு கன்னிகா பரமேஸ்வரி ஆலய திருப்பணி

புங்குடுதீவு கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தைச் சீர்படுத்திச் சிறப்பிக்கும் நோக்கத்துடன், ஆலய திருப்பணி நடைபெற்று வருகிறது.

இதற்கான நிதியும் திரட்டப்பட்டு வருகிறது. ஏற்கனவே திரட்டப்பட்ட நிதியின் உதவியினுல், ஆலயத்தின் பணிகளிற் பல முடிவெய்தியுள்ளன. இன்னும் சில முக்கிய பணிகள் நிறைவெய்த வேண்டியிருக்கின்றன. அவற்றையும் வெற்றிகரமாக நிறைவேற்ற, பக்தர்கள் நிதி உதவி அளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர் சண்முகசாமி என்பவர் இப்பணியில் அக்கறையுடன் ஈடுபட்டு உழைத்து வருகிறுர்.

—

### அண்ணுவுக்கு நாவலர் மன்றத்தின் வாழ்த்து

"பல்லவ நாடு தந்த பகுத்தறிவுச் செம்மலே! பழந்தமிழர் வாழ்வு மலர வந்த அறிஞரே! வருக, வருக என வாழ்த்துகிறோம். தமிழகத்து இளைஞர்தம் இதயத்தில் வாழ்கின்ற இங்கர்சாலே வருக. இந்நாட்டு மக்கள்தம் இதயம் கவர்ந்த தென்னுட்டுப் பெர்னுட்ஷாவே வருக! புதுமைகாணப் புறப்பட்டுள்ள தென்னுட்டு இளைஞர் படையின் இணையற்ற தலைவரே வருக! வருக!!"

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் என்றதும் நாட்டின் நலனிலே நாட்டம் கொண்ட நல்லவர்களும் நடு நிலைமையில் உள்ளவர்களும் அவரை இப்படித்தான் வாழ்த்தி வரவேற்க வேண்டும்.

இன்றைய நிலையில் பதவியில் இல்லாத ஒருவருக்கு நாட்டு மக்களும்- சமுதாயத்தின் ஈட்டி முனைகளான இளைஞர் பெருப்படையும் தலைவணங்குகிறதென்றுல் அவர் ஒருவருக்குத்தான் தலைவணங்குகிறது. அதுமட்டுமல்ல, இன்றுள்ள சூள்நிலையில் அவர் மட்டுமல்லாது கட்சிக்குள் ஒருவரால்தான்- மாற்றுக்கட்சித் தலைவர்களையும் அணைத்துக் கொண்டு போக முடியும்".

வேலூர் கலக்டர் ஆபிஸ் முன் மறியல் செய்து சிறை சென்ற அறிஞர் அண்ணு அவர்கள் 24ந்தேதி விடுதலை அடைந்தார் அல்லவா? அவருக்காக மக்கள் தன்னை நாலவர் மன்றம் தங்கள் வாழ்த்னத மேற்கண்டவாறு தெரிவித்துக் கொண்டது.

—

### தமிழர் முன்னேற்றக் கழக தீர்மானங்கள்

29-10-62ந் தேதி நடைபெற்ற தமிழர் முன்னேற்றக்கழக பொது உறுப்பினர் கூட்டத்தில், பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

(1) அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மத மாற்றத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு, அத்தகைய நிகழ்ச்சி ஏற்பட மூலகாரணமாயுள்ள பெரும்பான்மைத் தமிழர்கள் என்று கூறப்படுகிறவர்கள், தாங்கள் கையாண்டுவரும் சாதிக் கட்டுப்பாட்டை அறவே கைவிடும்படி த. மு. கழகம் வேண்டிக் கொள்கிறது.

(2) பலாத்கார முறையில் இந்தியாவைக் கைப்பற்றும் நோக்கமுடன் திட்டமிட்ட முறையில் போர் நடத்தும் சீனுவின் வன்முறையைக் கண்டிப்பதோடு, பலாத்காரத்தைத் தவிர்க்கும் பொருட்டு இந்தியா எடுத்துள்ள நடவடிக்கைகளை உளமார வரவேற்கிறது.

(3) பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பல தெருக்களும் ஒழுங்கைகளும் செப்பனிடப்படாத முறையில் சீர்கெட்டிருக்கும் போது, தனிப்பட்ட வர்த்தகர்களுக்குச் சலுகையளிக்கும் முகமாக, சில ஒழுங்கைகள் திருகோணமலை நகரசபை பொதுப் பணத்தால் செப்பனிட்டுக் கொடுப்பதை த. மு. கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(4) திருகோணமலை நகரசபைத் தலைவர் அரசாங்க அதிபர் மூலமாக, சிறிமாபுரம் பெயர்ப் பலகையை அகற்றுவதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்ததோடு நில்லாது அதனைச் செயலில் காட்டும்படி த. மு. கழகம் வேண்டிக்கொள்கிறது.

—

### கரைச்சி கி. இ. மு. சங்க புதிய தலைவர்

கரைச்சி கிராம இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் 26-10-62 திரு சி. நவரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. திரு. எஸ். கே. இலட்சுமணன் நடப்புவருடத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. இலட்சுமணன் பொதுத்தொண்டுகள் பலவற்றுள் ஈடுபட்டுழைத்து மக்களின் பெருமதிப்பைப் பெற்றவர். இளமை தொடக்கம் தமிழரசுக்கட்சியில் சேர்ந்து அறப்போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

—

### வழக்கம்பரை சனசமூக நிலையம்

வழக்கம்பரை சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பண்ணுகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் 28-10-62 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் திரு. சி. ஞானசந்திரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி, தனுதிகாரி அறிக்கைகள் வாசிக்கப்பட்ட பின்னர், யாழ் மாவட்ட சனசமூக சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் அவர்கள் பிரதமப் பேச்சாளராகக் கலந்து அரியசொற்பொழிவு நிகழ்த்தினுர். நிலையங்களின் பெயரில் நடைபெறும் ஊழல்களை அம்பலப் படுத்தியும், இவை போல்மேலும் நடைபெருது காப்பதற்கு வேண்டிய உதவியைப் புரிவதற்கு தன்னுடன் ஒத்துழைக்குமாறு வேண்டினுர். அரசாங்க நன்கொடைப் பணத்தை எதிர்பாராது தனது சொந்தப் பலத்தில் நிலையம் வளர வேண்டுமெனவும் திரு. துரைசிங்கம் தனது பேச்சில் கேட்டுக்கொண்டார். சபையோர் குறிப்புரைக்குப் பின்னர் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. தலைவராக திரு, சி. ஞானச்சந்திரமூர்த்தி, திரு.இ. தம்பிராசா உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். காரியதரிசி: திரு. க. வாமதேவன், உபகாரியதரிசி: திரு. சு. சுந்தரராசா, தனுதிகாரி: திரு. து. இராமநாதன். நிர்வாக உறுப்பினர்களாக திரு. ச. [illegible], திரு. [illegible] ஆறுமுகம் (பண்டிதர்), செல்வன் ந. செல்வநாயகம். ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி நிலையச் செயலாளர் திரு. க. வாமதேவன் நன்றி கூறினுர்.

—

### பெற்ருேர்-ஆசிரியர் சங்கத் தீர்மானங்கள்

தம்பலகமம் கோயில் குடியிருப்பில் உள்ள அரசினர் தமிழ் வித்தியாலய பெற்ருேர்-ஆசிரிய சங்கக் கூட்டம் வித்தியாலயக் கட்டிடத்தில் அதிபர் திரு. பொ. சித்திரவேல் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் கீழ்க் காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களின் விபரம் பின்வருமாறு:-

(1) இவ் வித்தியாலயத்தில் இருந்து மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் அனுப்பப்படாமல் இருப்பதால் வித்தியாலயத்தில் ஆசிரியர் தட்டுப்பாடு பெருமளவில் இருந்து வருவதால் குறிப்பாக ஆங்கில ஆசிரியர் முற்ருக இல்லாது இருப்பதால் இங்குள்ள மாணவர்கள் ஆங்கிலக் கல்வி பெற முடியாமல் இருக்கின்றனர். எனவே ஆங்கில ஆசிரியருடன் மற்றும் மூன்று ஆசிரியர்களை அனுப்பி உதவுமாறு இச்சங்கம் திருமலைமாவட்ட கல்வி அதிகாரியிடம் வேண்டிக் கொள்கிறது.

(2) பழையவித்தியாலயக் கட்டிடம் மிகப் படுமோசமான நிலையில் இருப்பதால் இக்கட்டிடத்தை நல்ல முறையில் திருத்தி அமைத்துத் தருமாறு கல்வி இலாகாவிடம் இச் சங்கம் வேண்டிக் கொள்கிறது.

(3) தம்பலகமம் மத்திய பலநோக்குச் சங்கம், தம்பலகமம் தெற்குப் பலநோக்குச் சங்கம் போன்றவைகள் மேற்படி வித்தியாலயத்துக்குத் தந்துதவுவதாகக் கூறிய நிதி உதவியை தற்போது தந்துதவுமாறு மேற்படி சங்கங்களை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

(4) விஞ்ஞானக் கூடம் ஒன்றை விரைவில் அமைத்துத் தருமாறு இச்சங்கம் கௌரவக் கல்வி அமைச்சிடம் வேண்டிக் கொள்கிறது.

—

### மூதூரில் 'தினகரன்' விளையாட்டுக் கழகம்

"இளைஞர்களாகிய நாம் ஒற்றுமையுடன் வாழ விளையாட்டுக்கள் அவசியமாகும். நமது வாழ்க்கையும் ஒரு விளையாட்டைப் போன்றது. எனவே விளையாட்டில் ஏற்படும் வெற்றி தோல்விகளைக் கண்டு நாம் பின் நிற்கக்கூடாது". மூதூர் இஸ்லாமிய இயக்கத்தாரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'தினகரன்' விளையாட்டுக் கழகத் திறப்பு விழாவில் மேற்படி இயக்கத் தலைவர் ஜனுப் வி. எம். ஏ. லத்திப் (ஆசி) அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கீழ்க்காண்போர் கழக உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்:-

போஷகர்: ஜனுப் ஈ. மகுமூது, தலைவர்: ஆசிரியர், ஜனுப் எம். சாகுல்கமீது, இணைக்காரியதரிசி: ஜனுப்கள்: கே. மன்சூர், எம்.உசன், பொருளாளர்: கரீம்ஏ.கபூர்.

—

### பிரிவு உபசாரம்

கடந்த நான்கு வருடகாலமாக பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை மின்சார நிலையத்தில் போர்மனுகக் கடமையாற்றி உத்தியோக உயர்வு பெற்று வேறிடத்திற்கு மாற்றலாகிச் செல்லும் திரு. எஸ். சிவஞானம் அவர்களுக்கு மின்சாரநிலைய உத்தியோகத்தர்களும், தொழிலாளர்களும் ஓர் பிரிவு உபசாரம் அளித்தனர்.

இவ் வைபவத்தில் திருவாளர்கள்: எஸ். அந்தோனி பிள்ளை, ஜோ. ஜேசுரெட்ணம், எஸ். சுந்தரலிங்கம், ஆகியோர் அன்னுரின் சேவையைப் பாராட்டிப் பேசினர். திரு. சிவஞானம் அவர்கள்தமக்களிக்கப்பட்ட இந்த உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தொழிலாளர்களின் ஒற்றுமையை வெகுவாகப் பாராட்டிப் பேசினுர். அத்துடன் கிளிநொச்சி க. இரத்தினசிங்கம் கோஷ்டியினரது கதம்ப நிகழ்ச்சியுடன் பிரிவு உபசாரம் இனிது முடிவுற்றது.

---

## சாகித்திய மண்டலத்தில்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆய்வுக்கு அனுப்புமாறு கேட்ட இக்குழுவே இதனையுஞ் செய்துளதாம். இச்சாகித்திய மண்டலத்திலே உறுப்பினராயிருக்குந் தமிழ் பெருமக்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நூலாசிரியர்களுக்கும் இயன்ற தொண்டைப் பாரபட்சமின்றிச் செய்ய முடியாதெனில் அம்மண்டலத்தில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்கிருர்கள்? சாகித்திய மண்டலத்தின் நிகழ்ச்சிகள்யாவும் சிங்களத்திலேயே நடைபெற—விளங்காவிடினும் கேட்டுக் கொண்டு, செய்து வைத்த பாவைப் பிள்ளைகளைப்போலிருந்துவரும் இவர்களிடம் எவ்வித தொண்டை எதிர்பார்க்கலாம் என்று சில எழுத்தாளர்கள் கேட்கிருர்கள். இப்பெரியார்களுக்கு "தமிழையும் சிங்களத்தைப் போல் மதித்து முறையாக இம்மண்டலம் தன் கடமையைச் செய்ய எண்ணுமல் தமிழை ஒதுக்க முற்பட்டால்—சிங்களம்மட்டுஞ் சட்டத்தையே தன் நிகழ்ச்சிகளிலும் புகுத்தினுல்—உங்கள் சுயமரியாதையைக் கருதியேனும் இம்மண்டலத்தை விட்டு விலகுங்கள்" எனும் வேண்டுகோளைவிடுக்கிறோம்.

### குற்றச்சாட்டு

இந்த ஆண்டு பரிசிலுக்கு அனுப்பப்பட்ட தமிழ் நூல்களின் பட்டியலையும் இந்நூல்களின் தகுதியினை ஆய்ந்தோரின் பட்டியலையும் சாகித்திய மண்டலம் வெளியிடுமானுல் அம்மண்டலத்தின் செயற்குழு தமிழ் நூல்களைத் தகுதியான முறையில் ஆய்ந்து போதிய அளவு பரிசில்களைக் கொடுக்கவில்லை என்று கூறப்படும் பெருங்குற்றச்சாட்டின் தகுதியினை யாவரும் அறிய வாய்ப்பாயிருக்கும்.

ஆண்டுதோறும் பரிசிலளிக்கும் பொழுதுபரிசிலுக்கு அனுப்பப்பட்ட நூல்களின் பட்டியலையும் நூல்களை ஆய்ந்தோரையும் வெளியிட்டால் பொதுமக்கள் எவ்வித சந்தேகமும் கொள்ளாமலிருக்க வாய்ப்புண்டாகும் என்பதையும், சாகித்திய மண்டல உறுப்பினருக்கோ அவர்களின் குடும்பத்தினருக்கோ பரிசில்கள் வழங்குதல் தடுக்கப்படல் வேண்டுமென்பதையும் சாகித்திய மண்டலத்தின் நன்மைக்காகக் குறிப்பிட விரும்புகிறோம்.

**குறிப்பு:**

சாகித்திய மண்டலத்தின் பரிசிலுக்கு இவ்வாண்டில் நூலை அனுப்பிய அறிஞர்கள் அவற்றைப் பற்றிய விபரங்களை 'சுதந்திரனு'க்கு அறிவிப்பின், எல்லாவற்றையும் ஒரு பட்டியலாக்கி வெளியிடுவோம். (1. நூலின் பெயர், 2. ஆசிரியர், 3. பொருள், 4. அச்சிட்ட அச்சகம், 5. நூல் வெளியான காலம், 6. பக்கங்கள், 7. விலை. இவற்றை அறிவிக்குக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3-வது வாரத் திரை விருந்து!

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] ஸ்ரீ கிருஷ்ணு [திருகோணமலை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] மொடர்ன் [பண்டாரவளை]
ராஜ் [நீர்கொழும்பு] விஜயா [மட்டக்களப்பு] வெம்பிளி [கண்டி]

மற்றும் 5 திரைகளில்



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, பி. சரோஜாதேவி, கே. ஏ. தங்கவேலு, எம். சரோஜா, சௌகார் ஜானகி, சி. கே. சரஸ்வதி

மற்றும் பலர் நடித்த

# பார்த்தால் பசிதீரும்

டைரக்ஷன்: ஏ. பீம்சிங் | இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி | பாடல்கள்: கண்ணதாசன் | வசனம்: ஆரூர்தாஸ்

---

## சாரதா! சாரதா! சாரதா!

### சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு வருகிறுள்!

ஏ. எல் எஸ். தயாரித்த



# சாரதா

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி
எஸ். வி. ரங்கராவ்—வி. நாகையா—எம். ஆர். ராதா
அசோகன்—சகஸ்ரநாமம்—எஸ். ராமராவ்
எம். வி. ராஜம்மா—புஷ்பலதா—சந்தியா
எம். எஸ். எஸ். பாக்கியம்

ஆகியோர் தோன்றும் பாங்கான தமிழ்ச் சித்திரம்

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் | இசை: கே. வி. மகாதேவன்

---



## 3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

# சென்ட்ரல் (மருதானை)

## லிபர்ட்டி (கொழும்பு)

காலை 10-15 மணிக் காட்சி கிழமை நாட்களில் மட்டும்

லவ்னியா (நுகேகொட) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபர்ட்டி (பதுளை) பிரீதி (ஹட்டன்)

ஆகிய திரைகளில்!



## சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன் எம். எல். ஏ.

பத்மினி, லலிதா, ராகினி, சந்திரபாபு, தங்கவேலு, கே. ஆர் ராமசாமி எம். எல். சி., வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு, ராமராவ், எம். என். கிருஷ்ணன் மற்றும் பலர் நடித்த

"திருடாதே", "சாரதா" போன்ற வெற்றிப் படங்களை அளித்த

ஏ. எல். எஸ். புரடக்ஷன்ஸாரின்

# செந்தாமரை

இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி | டைரக்ஷன்: ஏ. பீம்சிங் | பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.